[illegible]

1891

# ஜநாநந்தினி.

தொகுதி I.] ஜனவரி மீ 1891. [புஸ்த. I.


## ஜநாநந்தினி.

ஜனங்களுக்கு ஆனந்தத்தைத் தருவது ஜனாநந்தினி. நமது தமிழ்நாட்டில் எல்லோரும் ஆனந்தமாய்ப் படிக்கும்படியாக ஓர் பத்திரிகையை மாதந்தோறும் பிரசுரஞ்செய்யவேண்டுமென்று நாம் நெடுநாளாகக்கொண்டிருந்த கருத்தினுக்கிணங்கச் சமயம் வாய்த்ததனால் இது யாவராலும் அங்கீகரிக்கப்படுமென்று துணிவு கொண்டு இவ்வாறு செய்யப்புகுந்தோம். கருணாநிதியாகிய கடவுளின் பேரருளால் கல்விகேள்வியில் மிக்க வல்லோரெல்லோரும் இம்முயற்சியில் துணைநின்று இது இடைசோராது நெடுங்காலம் நிலைபெற்று நிற்கவேண்டுமென்பது நமது உள்ளக்கருத்து. இவ்வாறு செய்யப்புகுவது நமது சிற்றறிவுக்குத் தகுதியன்றெனினும் இப்புவியில் அறிவாற்சிறந்த பெரியோர் பலபோது அபிப்பிராயங்கள் பல வித்துவான்களின் துணையைக்கொண்டு இதில் வெளியிடப்படுமாகையால் இது யார்க்கும் பயன்படுமெனக் கருதித் துணிந்தோம். "பகுத்தறிவுடைய மனிதர் பிறர்க்கு ஆனந்தமுண்டாகும்படி செய்யவேண்டும்; அப்படிச்செய்வதே கடவுளைப் பூசைசெய்வதாகும்."

सन्तोषं जनयेत्प्राज्ञ स्तदेवेश्वर पूजनम्॥

## ஆநந்தத்தை அடைவதெப்படி ?

ஆநந்தம் இம்மை மறுமை நோக்கி இருவகைப்படும். யானை முதல் எறும்பீறாகவுள்ள ஜந்துக்கள் தமக்கு வேண்டுமென்று தேடவிரும்புமவற்றுளெல்லாம் ஆநந்தமே முதன்மையானது

DIGITIZED

Xerox Copy of 160949



160949

நாம் இவ்வுலகில் பலவாறு வருந்திப் பாடுபட்டு முயல்வதெல்லாம் ஆநந்தத்தைப் பெறுதற்பொருட்டே. இம்மைப்பயனை ஒருங்கே பெற்று இன்புற்று வாழ்ந்திருக்கவேண்டுமென்று ஆசைப்படாதவரெவருமிலர். வைதிக ஆநந்தமானது பலவகைத்தாய மதக்கோட்பாடுகளை யனுசரித்ததாதலாலும், அதை இன்னதென்று நிர்ணயித்துக் கூறுவது எளிதன்றாதலாலும், லௌகிக ஆநந்தத்தோடு கலவாமல் வைதிக ஆநந்தத்தைமாத்திரம் பெற விரும்புவர் மிகச் சிலராதலாலும் அதனை யொழித்து லௌகிக ஆநந்தத்தைப்பற்றிமட்டுஞ் சிறிது மொழிகின்றோம்.

நாம் எந்தத்தொழிலில் அமர்ந்திருந்தாலும் "தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமையம்மா பெரிதென்று அகமகிழ்க" என்றபடி மனதில் வாட்டங்கொள்ளாமலிருந்தால் நமக்குண்டாகும் எவ்வகைப்பட்ட இடுக்கண்ணும் இனிதாகும். மெய்ந்திருவந்துற்றாலும் வெந்துயர் வந்துற்றாலும் உள்ளம் ஒத்திருந்தால் ஆநந்தம் குடிகொள்ளும். செல்வமுடையவரா யிருக்குங்காலத்தில் சந்தோஷமாயிருப்பது யார்க்குமியல்பாம்; அச்செல்வம்நீங்கி வறுமை வந்துற்றபோதும் அதற்காக வேங்கி மனஞ்சோராமல் வலிமைகொண்டிருந்தால்மட்டுமே அதன் கொடுமைதோன்றாது.

JL
R4 m211, M91
M91.1

"நன்னிலைக்கட்டன்னைநிறுப்பானுந்தன்னை
நிலைகலக்கிக்கீழிடுவானும்—நிலையினும்
மேன்மேலுயர்த்துநிறுப்பானுந்தன்னைத்
தலையாகச்செய்வானுந்தான்."

என்றபடி நாம் சந்தோஷமாயிருப்பதற்கும் துக்கப்படுவதற்கும் காரணம் நாமே. நாம் சந்தோஷமாயிருந்தால்தான் நம்மாலியன்றமட்டும் மற்றவர்களுக்கு வேண்டுவனவற்றைச் செய்யவேதுவாகும். சிறிது வேளைகளில் நம்மால் பொறுப்பதற்கரிய துன்பங்கள் நேர்ந்தாலும் அவற்றால்மட்டுமே மனோவிசார முண்டாகிறதில்லை. எத்தனை செல்வமுடையராயினும் அல்லது வறியராயினும் சுகதுக்கங்களுக்கு அவை காரணமாகாமல் "நாம் ஏன் பிறந்தோம்" என்பதே அநேகருக்குப் பெரியவிசாரமாகின்றது; ஆனதனால், "வாழ்வதனாலாயபயனென்கொல்" என்று கற்றோர் ஆராய்கின்றனர். "ஆநந்தமாயிராமல் வீணே நெடுங்காலமளவும் வாழ்ந்திருப்பதனால் என்ன பயன்" என்று வேறுசிலர் சொல்லுவர்.

22627
Chennai-600 005
JL
R4 m211, M91 M91.1



கல்வியின் மிகுதிக்குத் தக்கவளவு ஆசையும் மிகும். பிறர் களிக்கப்பேசுகின்ற விகடகவிகளுக்குத் தாங்கள் செய்யும் பரிகாசத்தினால் ஆநந்தமுண்டாவதில்லை. மனதில் விசாரமுண்டாயின் அதுகாரணமாக தேகத்தில் நோயுண்டாகுமாதலால், அவையிரண்டும் ஒன்றிற்கொன்று ஒற்றுமையுடையனவாம். இவ்வாறே தேகத்தில் நோயுண்டானால் அதனால் மனதும் வருந்தும். ஆனதினாலேதான் நிபுணவைத்தியர்கள் நோய்கொண்டவர்களோடு நகைமுகங்கொண்டு குளிர வார்த்தைசொல்லி அவர்கள் மனோவிசாரத்தை நீக்கிவிடுகிறார்கள். எவ்வளவு சங்கடங்கள் வந்தாலும் அக்காலத்திலும் வேண்டியவர்களைக் கண்டமாத்திரத்தில்

"வயாவும்வருத்தமுமீன்றக்காநோவும்
கவான்மகற்கண்டுதாய்மறந்தாங்
கசாத்தானுற்றவருத்தமுசாத்துணைக்
கேளிரைக்காணக்கெடும்."

என்றபடி அவையனைத்தும் கணப்பொழுதில் நீங்கிக் குணப்படுகிறார்கள். இவ்வுலகில் எதுவானாலும் அதில் சுகமும் துக்கமும் கலந்திருக்கும். துக்கத்தைமறந்து சுகத்தைமட்டுமெண்ணுகிறவர்கள் எப்பொழுதுஞ் சுகமாயிருப்பார்கள். இதனால் சுகதுக்கங்கள் மனதைப் பொறுத்திருக்கின்றனவென்பது எளிதில் விளங்கும்.

தேகத்தில் ஒருநோயுமில்லாதிருக்கையிலும் ஆநந்தமாயிருக்கத் தெரியாமல் அநேகர் வீணே துன்புறுகிறார்கள். உடம்பிலே ஒருநோயுமில்லாதவர்களிற் பெரும்பான்மையோர் உள்ளநாளளவும் துன்பக்கடலிலாழ்ந்திருப்பது அவர்களது அறியாமைக் குற்றமேயாம்.

பலநூல்களைக் கற்பதனாலேமட்டும் ஆநந்தமுண்டாகிறதில்லை; ஆநந்தம் வேறு, கல்வி வேறு. யானைகண்ட குருடனைப்போல் ஆநந்தத்தைப்பற்றிப் பலபேர் பலவாறாகச் சொல்லுகிறார்களே யல்லாது அதை உள்ளபடி கண்டு அநுபவிப்பவர் மிகவுஞ் சிலர். அன்றைக்கூலி வேலைசெய்து பிழைப்பவனுக்கு இவ்வுலகிற் பாதி கிடைத்தாலும், ஆசைக்கோர் அளவில்லையாதலால் மற்றொரு பாதியுங் கிடைத்து இந்தப் பூலோகமுழுமையையும் தானே ஒரு தனிக்குடை நிழலில் ஆளப்பெறவில்லையேயென்று அவனுக்குத் துக்கமுண்டாகும். நமக்குரிய பொருள்களுள் ஏதேனுமொன்று

போய்விடின் அதற்காக நாம் துன்புறுவதியற்கை. ஆசை அதிகமாகத் துன்பமும் அதினளவாகவே அதிகமாகின்றது. ஒருகாலத்தில் அதிகபாண்டித்தியமுள்ள சங்கீதவித்துவானொருவன் கர்ணாமிருதமாகப் பாடினதை எல்லோருங்கேட்டானந்திக்கையில் அவன் முகம் வாடியிருக்கக் கண்டு அதன்காரணமென்னவென்று அங்குள்ளார் அவனைக்கேட்க, அவன் கல்வியறிவின் மிகுதிக்குத் தக்கவளவு துன்பமும் மிகுந்திருக்குமென்றான்.

புலத்தில் விசாரமற்று வயிறுநிறையப் புல்லைமேய்ந்து தெளிந்தநீரைக் குடித்துவிட்டு அருகேயுள்ள குளிர்ந்த நிழலில் படுத்துறங்கும் பசுவுக்குள்ள ஆனந்தம் மனிதனுக்குண்டாவதில்லை.

“ஒருபொழுதும்வாழ்வதறியார்கருதுப
கோடியுமல்லபல.”

என்றபடி மனிதர்படும் ஆசைக்கு அளவில்லையாதலால் “கிட்டாதாயின் வெட்டென மற” என்று பெரியோருரைத்ததையுஞ் செவிக்கொள்ளாமல் தாம விரும்பியபொருள் கிடைக்கவில்லையேயென்று விசனையேங்கிப் பெருந்துன்பமடைகிறார்கள். ஆசையை மட்டுப்படுத்தினால் சுகந்தானேயுண்டாகும். மனிதர்க்கிருப்பதுபோலப் பசுமுதலியவற்றிற்கு ஆசையில்லாதிருத்தலால் அவற்றிற்குத் துன்பமுண்டாகிறதில்லை.

“அவாவில்லார்க்கில்லாகுந்துன்பமஃதுண்டேற்
றவாதுமேன்மேல்வரும்.”

என்றபடி அவாவுறுத்தல் துன்பத்துடைப்பதற்குக் காரணமாகும். ஆசையை மட்டுப்படுத்தி எப்பொழுதும் நாம் செய்யவேண்டிய காரியத்தின்மேற் கண்ணுற்றிருந்து மனோவிசாரப்படாமல் கிடைத்தது போதுமென்றிருப்போமாயின் அதுவே ஆனந்தமாகும். நாம் வசிக்கின்ற வீடுகளிலுள்ள பொருள்களெல்லாம் ஒழுங்காய் வைக்கப்பட்டிருந்தால் அதனால் மனம்நிலைபெற்று ஆனந்த முண்டாகும். நாம் காண்கின்றவைகளெல்லாம் அழகாயிருந்தால் அதுவுமோரானந்தமாகும். கோபம் பாபமாதலால் “உள்ளங்கவர்ந்தெழுந் தோங்குஞ்சினங்காத்துக் கொள்ளுங்குணமே குணமென்க” என்றபடி கோபத்தை அடக்கிக்கொண்டால் பலவகைத்தாய தீச்செயல்களைப் புரியாமல் ஆனந்தமாயிருக்கலாம். இம்மையின்பம் இன்



னதென்றறியாதாரெங்குமில்லை. பசித்தவர்க்கு உணவும், வெயிலில் நடந்துவந்தவர்களுக்கு நிழலும், மூட்டைசுமந்து வருகிறவர்களுக்குத் தங்கள் பாரத்தை யிறக்கிவைத்தலும் ஆநந்தமாகும். ஒரு பொருளால் எந்தநாளிலும் ஒருவிதமான சுகமே உண்டாகிறதில்லை; “லோகோ பின்னருசிஃ” என்கிறபடி ஒருவனுக்கு வேண்டியது மற்றொருவனுக்கு வேண்டாததாகும். வண்டுமலர்ச்சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் காக்கைவிரும்புங்கனி வேம்பன்றோ? அன்றியும் ஓர்காலத்தில் இன்பந்தருவன மற்றொருகாலத்தில் தாரா. வசந்தகாலத்திற் கூவுங்குயிலின் குரல் இனிதாகும், மாரிநாட்கூவுங் குயிலின் குரலின்னா. நோயற்றகாலத்து இனிதாகின்ற ஊண் நோயுற்றகாலத்துத் தீதாகும்.

சீதளதேசத்தில் வாழ்பவர்களுக்கு இனிதாயிருக்கின்ற வெயில் உஷ்ணதேசத்திலுள்ளவர்களுக்கு வேண்டியிராது. இவ்வாறே உஷ்ணதேசத்திலே வசிப்பவர்களுக்கு இனிதாயிருக்கின்ற சீதளம் சீதளதேசத்திலுள்ளவர்களுக்கு இனிதாயிராது. நெடுங்காலமாய் அநுபவித்தமாய்க் கண்டுணர்ந்து கொண்டதன்பின்பு இன்னது செய்யத்தக்கது, இன்னது செய்யத்தகாததென்று பெரியோர் சொல்லியிருப்பதை மறவாது விதித்தனவற்றைச்செய்து விலக்கியனவற்றைச் செய்யாதொழிவோமாயின் ஆநந்தம் இடையறாது நம்மிடத்திற்குடிகொண்டிருக்கும்.

நாம் செய்யுந்தொழில்களில் எவ்வளவு வருத்தமிருந்தாலும் அவை பிறர்க்குப் பயன்படுவனவாயிருப்பின் அந்தவருத்தமெல்லாம் சுகமாகவேயிருக்கும்.

பரோபகாரமானது எந்தக்காலத்தும் பேரானந்தத்தைத் தரத்தக்கது. உள்ளத்திற்கள்ளமின்றி ஸ்வப்பிரயோஜனத்தைச் சற்றுங் கருதாமல் ஸத்தியத்திற் கட்டுண்டு கைம்மாறு கருதாது பிறருடைய நலத்தையே பெரிதென்று கடைப்பிடித்திருக்கும் மேலோர், எல்லோரையுந் தம்மைப்போலவே எண்ணி அன்பொழுக அவர்க்குச் செய்யும் ஆதரத்தாலடையும் ஆநந்தத்தையளவிட்டுங் கூறலாமோ? இத்தகைய நற்கருத்து இக்காலத்திலரிதெனினும், சிறிது காலத்திற்குமுன் வாஸ்தவமாக நடந்ததொன்றை யிங்கெடுத்துக் கூறுவோம்.

லண்டன்மாநகரிலிருந்து ஒருவர் மற்றொரு நகரத்திலிருந்த தமது நண்பனைப் பார்க்கப்போயிருந்தபோது அவருடன் தாம் அடுத்த 'லாட்டெரி' என்கிற பந்தயத்தில் ஒருசீட்டு வாங்க நினைத்திருப்பதாகச் சொல்ல அவர் தமக்கும் ஒன்று வாங்கும்படி சொல்லியிருந்தார். சொன்னவர் பிறகு அதைப்பற்றி நினைத்தவரேயல்லர். அவரது நண்பர் அவருக்கு வாங்குவதாகச் சொல்லியிருந்த சீட்டும் வந்து சேரவில்லை. இப்படியிருக்க ஒருநாள் இவருக்கு இரண்டுலட்சம் ரூபாய்க்கு சீட்டுவிழுந்திருப்பதாக இவர் நண்பர் செய்தியனுப்ப இவர் மிக வியப்புற்று லண்டன் நகரத்திற்கு விரைந்துசென்று தமது நண்பனைக்கண்டு தமக்காக எப்போது சீட்டு வாங்கினரென்றும் அவ்வாறு வாங்கியதை ஏன் தமக்கு முன்னமேயே தெரிவிக்கவில்லையென்றும் கேட்டார். அதற்கு அவர்நண்பர் "முன் நீரென்னிடத்திற் சொல்லியிருந்தவண்ணம் நான் சீட்டுவாங்கினபோது உமக்கும் ஒன்று வாங்கிவைத்திருந்தேன்; பிறகு அதைப்பற்றி நான் அத்தனையாய்க் கவனித்தவனல்ல" என்று சொல்ல, அவர் "அதிருக்கட்டும், அப்படியானால் பந்தயம் விழுந்த சீட்டு என்னுடையதுதான் என்பதென்ன, உமது சீட்டாகவேயிருக்கலாகாதா?" வென்றார். அதற்கவர் "அப்படியன்று. நான் சீட்டுகளை வாங்கிப் பெட்டிக்குள் வைத்தபோது உம்முடையதென்பதற்கு அறிகுறியாக அவற்றில் ஒன்றின் மூலையில் மையினாற் குறிப்பிட்டிருந்தேன். அப்படி உமக்கென்று குறித்திருந்த சீட்டிற்குத்தான் பந்தயம் விழுந்ததாகையால் அது உம்முடையதே" என்று கூறினார். இவரன்றோ உள்ளத்திற்கள்ளமில்லாத உத்தமசிரோமணி! அவ்வளவு பெருந்தனத்தைக் கண்டு இவர் சற்றேனும் ஆசைப்பட்டால அதைத் தமதென்றே சொல்லி யெடுத்துக் கொள்ளக்கூடாதா? எடுத்துக்கொண்டால் இவர்நண்பர் என்ன உரிமையைக்கொண்டு அதனைக் கேட்கத்துணிவார்? தூங்குகிறவனை யெழுப்புவதுபோல எங்கேயோ இருந்த இவரது நண்பருக்கு அத்தனை பெருந்தனத்தை வலியக்கொண்டுபோய்க் கொடுக்க இவர்க்குவந்த தலைவிதி யென்ன? தன்னலம் சிறிதும்பாராட்டாத பரோபகாரகுணம் இதனினும் வேறுண்டோ? இதனால் இவர்க்குண்டான ஆநந்தத்தையும், இத்தகைய நேசர் தமக்கு வாய்த்திருந்ததை நினைத்து இவர் நண்பருக்குண்டான ஆநந்தத்தையும் இவ்வளவென்று சொல்ல யார் திறம்?



## மனையாள்.

சோழநாட்டின்கணுள்ள உறையூரில் மணிபத்திரன் என்னொரு வணிகனிருந்தான். அவன்செய்த நல்வினைப்பயனால் அவ்வூரில் உயர்குடியிற் பிறந்த குணபூஷணியென்னும் உத்தமி அவனுக்குப் பத்தினியாக வாய்த்தாள். திரைகடலோடியுந் திரவியந் தேடவேண்டுவது வணிகர்மரபிற்குரிய தொழிலாதலால் அவன் தன்னிடமிருந்த பொருளனைத்தையும் முதலாகவைத்து இரத்தினவியாபாரஞ்செய்ய ஆசைகொண்டு சிம்மளதீவிற்குக் கப்பலேறிச் சென்று அங்கிருந்து மணிக்குவை வாங்கிவந்தான். மணியாபரணங்களையணிய விரும்புபவர்களெல்லோரும் மணிபத்திரனிடமிருந்து தங்களுக்கு வேண்டும் மாசிலாமணிகளை வாங்கி அணிகலன்களைச் செய்துகொள்ளுவார்கள். அவனிடத்தில் மணிக்கோவைகளும் இரத்தினாபரணங்களும் வேண்டியமட்டும் அகப்படும்.

குணபூஷணி ஒருதாய்க்கொருபெண்; அவளுடைய தாய்தந்தையர் அவளைச் செல்வமாக வளர்த்து வேண்டியபொருளை அவளுக்குச் சீதனங்கொடுத்திருந்தார்கள். உடைமையும்வறுமையு மொருவழிநில்லாவாதலால் காலவித்தியாசத்தால் ஆடியமாவாசையன்று நடுநிசியில் யாரோ உளவறிந்த கள்வர் சிலர் எப்படியோ ஒருவர்க்குந்தெரியாதபடி அவன் வீட்டிற்குள்ளேபுகுந்து மாறு திறவுகோல்களினால் இரத்தினங்கள் வைக்கப்பட்டிருந்த பெட்டிகளையெல்லாந் திறந்து எல்லாவற்றையுந் திருடிக்கொண்டு போய்விட்டார்கள். மணிபத்திரன் விழித்தெழுந்து பார்க்கையில் பெட்டிகளெல்லாம் மணிமுடிப்புகளின்றி வெறுமையா யிருந்ததைக்கண்டு ஏக்கமுற்றான். அவன் சிம்மளதீவிலிருந்து வாங்கிவந்த இரத்தின முடிப்புகளின் பாக்கிவிலை இன்னம் கொடுபடவில்லை. அவன் அதுவே கவலையாய்க் கணக்குப்பார்த்ததில் தனக்குள்ள ஸ்தாவரஜங்கம சொத்துக்கள் எல்லாவற்றையும் ஒருங்கேவிற்றாலும் கடனடைந்தது போக ஆயிரம்ரூபாய்க் கதிகமிராதென்று கண்டு ஏக்கங்கொண்டான். அந்தச் சிறுதொகையைக்கொண்டு தன்மனைவிமக்களோடு கௌரவமாய்ப் பிழைப்பதற்கில்லையேயென்று கண்டு அவன் அழவிவிட்ட இழுதபோதிருக்கினன். இதுசெய்தி தன்மனைவிகாதிற

படின் அவள் நொந்துவருந்துவாளென் றச்சமுற்றிருந்தாருகையால் அதை யவளோடுசொல்ல அவனுக்கு நாவெழவில்லை.

அந்தப் பாக்கியவதி பிறந்தகத்திலாயினும் புக்ககத்திலாயினும் வறுமையென்பதைக் கண்டறியாள். அவள்கருத்தெல்லாம் எப்போதும் அவள் காதற்கொழுநன்மேலிருந்தது. சிறிதுகாலமாகத் தன்கொழுநன் துன்புற்றிருந்ததின்காரணம் அவளுக்கின்னதென்று புலப்படவில்லை. அவள் ஆயிரத்திலே பிறந்து பதினாயிரத்திலே வாழ்க்கைப்பட்டுக் குலுங்கப் பணிபூண்டு குச்சிரியப் பட்டுடுத்துப் பல்லோர் பணிசெய்யச் சுகமாயிருந்தவள். அன்பே வடிவமாகக்கொண்டிருந்து சுற்றத்தார்க்கேயன்றி வறியோர்க்கெல்லாம் வாரிவழங்குவது அவளதியற்கை.

இன்பம்வந்துற்றகாலத்தேயன்றித் துன்பம்வந்துற்றகாலத்தும் உத்தமஸ்திரீகள் தங்கள் கொழுநன்மாருக் குற்றதுணையாவார். ஒருவன் பெருஞ்செல்வத்தையிழந்து வறியனாகி மிடி மூப்புமுதலியவற்றால் துன்புற்றிருக்கையிலும் அவன்மனையாள் நற்குண நற்செய்கையுடையவளா யிருப்பாளேயாயின் "இல்லாளகத்திருக்க இல்லாததொன்றில்லை" என்றபடி யவனுக்குக் குறையொன்று மிராது. மரம் நன்றாயிருக்குங்காலத்துக் கொடியானது அதன் மீதேறிப் படர்ந்து அதனோடு சுகமாகவிருந்து, அம்மரத்திலிடிவிழுந்து அதனாலதன்கிளைகளெல்லாம் முறிபட்டுப் பிளவுற்றகாலத்தும் அக்கொடி அதனைவிட்டகலாது தளிர்க்கத்தொடங்கி முன்னிருந்த வண்ணமே அம்மரத்தின்மேலேறிப் படர்வதைப்போலத் தீவினைப்பயனால் தன்கணவன் வறுமையுற்றகாலத்தும் அவனை விட்டு இமைப்பொழுதேனும் இணைபிரியாமலிருப்பவளே நற்பெண்டிராவாள்.

இரவுபகலென்று பாராமல் எந்நேரமும் தன்நாயகனை யுபசரிப்பதையே தொழிலாகப்பூண்ட குணபூஷணி சிறிதுகாலமாகக் கணவன்முகம் வாட்டங்கொண்டு அவன் விசாரப்பட்டுக்கொண்டிருந்ததின் காரணத்தை அறிந்துகொள்ளமாட்டாமல் மனம்புழுங்கினாள். தனக்குப் பொருட்சிதைவுண்டானதைப்பற்றித் தன்மனைவியோடுசொன்னால் அவளதைக்கேட்டுத் துன்புறுவாளென்ற அச்சத்தினாற்றான் அவன் அவளோடதைச்சொல்லாமல் மறைத்துவைத்



திருந்தான். ஆயினும் அவன் தன் கடனைத்தீர்த்துவிட்டு மிகுந்திருப்பதை வைத்துக்கொண்டு தானும் தன் மனைவிமக்களும் வேறெங்காயினும் கண்காணாத தூரதேசத்திற்குச்சென்று காலங்கழிக்க வேண்டுமென் றெண்ணித் தன்மனையாளை யழைத்து அவளோடு உள்ளதத்துவத்தைச் சொன்னான். அவள் அவனைப்போலவே நுண்ணறிவுடையவளாதலாலும் அவனிடத்து அன்பின் மிக்க காதலுடைய நற்பெண்டிராதலாலும் தங்களுக்கு நேர்ந்த பொருட்சிதைவைப்பற்றிச் சிறிதுங் கவலைப்படாமல், "பிராணநாதா! இவ்வாறு நமக்குநேர்ந்த தௌர்ப்பாக்கியத்தை யெண்ணியோ என்னோடுகூடச் சொல்லாம லித்தனைநாளாய் நொந்து புண்பட்டீர்? குடைநிழலிலிருந்து குஞ்சரமூர்ந்த மன்னரும் நடைமெலிந்தோருர் நண்ணுவதுமுண்டாதலால் நீரதனை நினைந்து வருந்துவது உமது பேரறிவுக்கழகன்று: செல்வம் ஆறிடுமேடு மடுவும்போலா மன்றோ? இதற்காகத் தாங்களிரங்குவதேன்? தாங்களிதற்காக இப்படி வருந்துவீர்களேயாயின் நமது கண்ணனைமக்கள் மனம் வாடாதோ? 'வெள்ளத்தனைய விடும்பை யறிவுடையான் உள்ளத்தினுள்ளக் கெடும்' என்று பெரியோருரைத்தபடி இடுக்கணழியாமையன்றோ ஆண்மக்கட் கழகாகும்? ஆதலால் தாங்கள் இனிமேலும் இதைநினைந்துத் துன்புறுதல் நன்றன்று" என்றாள்.

மணிபத்திரன்,

"இல்லதெ னில்லவள் மாண்பானா லுள்ளதெ
னில்லவள் மாணாக் கடை?"

என்றபடி தனக்கேற்ற ஆருயிர்க்காதலி வாய்த்திருப்பதைக்கண்டு அகமகிழ்ந்து தனக்குள்ளவற்றையெல்லாம் விற்றுக் கடனையிறுத்தான். எல்லாம்போக ஆயிரம்ரூபாய்தான் மிஞ்சியது. தான் செல்வமுற்றிருந்த காலத்திலிருந்ததுபோல இனிமேலும் அவ்வூரில் வசிக்கின் தன் பெருமை குன்றுமென்றெண்ணிக் காவிரியாற்றின் கரையோரமாயுள்ள முத்தரசநல்லூரில் சிறிதாகக் கூரைவீடொன்று கட்டிக்கொண்டு தனக்கு மிஞ்சியதைச் சிறுமுதலாகக்கொண்டு பலசரக்குக் கடைவைத்துத் தன்மனைவிமக்களோடு வருவாய்க்குத் தக்கவண்ணமாயிருக்க நினைத்து, அந்த ஊரில் தனக்கு வெகுநாளைத் தோழனான சுமதி என்பவனோடு இருநூறு ரூபாய்க்குள் ஒருசிறிய கடையுங் கட்டிக்கொடுக்கும்படி சொன்னான். சுமதி அவன் கருத்தின்படியே அழகான வீடொன்றுகட்டி அந்தவீட்டு

க்கு வேண்டியவற்றையும் அமைத்து, கிரகப்பிரவேச முகூர்த்தமும் பார்த்துவைத்து, தானே தன்வண்டியை உறையூருக்குக் கொண்டுபோய்த் தன்தோழனையும் அவன்மனைவி மக்களையும், அவர்கள் விற்காமல் தங்களுக்கு அவசியம் வேண்டுமென்று வைத்திருந்தவற்றையும் அந்தவண்டியிலேற்றிக்கொண்டு பத்திரமாய்க் கொண்டுவந்து சேர்த்தான்.

மிக்கசெல்வமுடையவன் வீட்டிலே பிறந்து செல்வமாய் வளர்ந்து வணிகர் தலைவனாகிய தனக்கு மாலைசூட்டி விலைபெற்ற ஆடையாபரணங்களைத் தரித்துக்கண்டவர் கேட்டவர் எல்லோருங் கொண்டாடும்படி பெருவாழ்வு வாழ்ந்த தன் ஆருயிர்க்காதலி பஞ்சைபோல இக்கோலமானாளேயென்று அவன் நெட்டுயிர்த்தான். இதற்குமுன்னெல்லாம் பொன்காய்த்த மரம்போலத் தலைமுதல் கால்மட்டும் பற்பலவாகிய அணிகளை அணிவதிலும், விலைபெற்ற பட்டாடைகளை யுடுப்பதிலும் மிக்க அவாவுள்ள குணபூஷணிக்கு அத்தனை யாசையும்போய் அவள் மனவலிமைகொண்டு தனக்கு வந்துற்ற வறுமைக்காகச் சிறிதுந் துன்பப்படாது தன்கணவனுக்கு வழிபாடுசெய்பவளாய் வாழ்க்கைத் துணையளாய்த் தன்மக்களைப்போற்றி அவன் எள்ளென்றால் எண்ணெயாய் நின்று, அவ்வாறுவ கேட்டினும்,

"குடநீ ரட்டுண்ணு மிடுக்கட் பொழுதும்
கடனீர றவுண்ணுங் கேளிர்—வரினும்
கடனீர்மை கையாறாக் கொள்ளு மடமொழி
மாதர்மனை யாட்டி யாள்."

என்றபடி இரவலர்க்கு அமுதுபடைத்து இல்லறநெறிமுறை பிறழாது நடந்துவந்தாள்.

அந்தப் புதுவீட்டிற்குப் புதிதாகக் குடிப்போனவன்றே மணிபத்திரன் மிகுந்திருந்த எண்ணூறு ரூபாயை முதலாகவைத்துப் பலசரக்குக்கடை வியாபாரஞ்செய்துவந்தான். குணபூஷணியானவள் தன் கணவன்முன்னே பெருஞ்செல்வ முடையவனாயிருந்தகாலத்தில் அவனிடமிருந்த அன்பிலும் பதின்மடங் கதிகமாகி ஊசியுஞ்சரடு மொருவழிச்செல்வதுபோலக் கொழுநன் குறிப்பறிந்து நடந்துவந்தாள்.



மணிபத்திரன் தனக்கிருந்த பெருஞ்செல்வமெல்லாம்போய் ஏழையாகிப் பலசரக்கு வியாபாரஞ்செய்யத் தொடங்கியதுமுதல் முத்தரசநல்லூரிலுள்ளவர்களேயன்றி அதற்குச் சுற்றிலுமுள்ள கிராமத்தார்களெல்லோரும் தங்கள் வீட்டுக்குவேண்டிய பண்டங்களையெல்லாம் வழக்கமாக அவன் கடையிலேயே வாங்கத்தலைப்பட அவன் விரைவில் அதிகமான லாபத்தைப்பெற்றுத் தன்கடையை மளிகைக்கடையாக்கினான். குணபூஷணி முன்னெல்லாம்போல விலைபெற்ற ஆடையாபரணங்களை அதிகமாக அணிந்துகொள்ளாமல் நற்குணத்தையே யணியாகப்பூண்டு,

"எப்பணியா லின்புறுவர் காதலர் காதலனை
யப்பணியா லப்பொழுதே யன்புறுத்தி—யொப்ப
மனங்குழையும் வண்ண மகிழ்விப்ப தன்றே
கனங்குழையார் தங்கள் கடன்?"

என்றவண்ணம் தனது கணவனைப்போற்றி யுபசரித்துச் சுகமாக வாழ்ந்திருந்தாள்.

---

ஷேக்ஸ்பியர் மகாகவிசெய்த 'வணிகர்புர வர்த்தகன்' எனும்

## நாடகம்.

---

இந்நாடகத்தில் வரும் ஸ்திரீபுருஷர்கள்.

| | |
|---|---|
| வணிகர்புரத்துப் பிரபு. | |
| மௌரகதேயமன்னன் | பௌருசியை மணம்புரிய விரும்பினவர்கள். |
| அரகன்தேயத்தரசன் | |
| அன்டோனியன் | வணிகர்புரவர்த்தகன். |
| பாசேனன் | அன்டோனியனுக்கு மித்திரன். |
| கிரசேனன் | அன்டோனிய பாசேனருக்கு நண்பர்கள். |
| ஸாலேனன் | |
| ஸாலரேனன் | |
| ஸாலரேயன் | |
| உலோரஞ்சன் | சேசிகையின்பால் ஆசைவைத்தவன். |
| சேலகன் | ஓர் யூததனிகன். |
| துபலன் | ஒரு யூதன்; சேலகனுக்கு அன்பன். |
| இலாஞ்சலகோப்பன் | ஓர்மடையன்; சேலகனுக்கு ஊழியன். |

| | |
|---|---|
| கிழக்கோப்பன் | இலாஞ்சலன் தகப்பன். |
| இலநர்த்தன் | பாசேனன் சேவகன். |
| பாலதாசன், தேவனன் | பௌருசியின் பணியாட்கள். |
| பௌருசி | ஒரு பெருஞ்செல்வக் கிழத்தி. |
| நேரிசை | பௌருசியின் சேடி. |
| சேசிகை | சேவகன் மகள். |

இன்னம் பல வணிகர்புர கனவான்கள், நியாயசபாவுத்தியோகஸ்தர்கள், சிறைச்சாலைக்காவலர்கள் முதலிய தொழில்புரிவோரும் ஆங்காங்கு தோன்றுவார்கள்.

காப்பு.

காலமும் வெளியு மான காரணப் பகுதி தன்னுள்
சீலமாஞ் சலமுண் டாக்கிச் செழுமைசேர் நிலமுங் காக்கிக்
கோலயா முயிருண் டாக்கிக் குலவுசீர் மனித ரூக்கும்
மூலகா ரணத்தின் பாத முந்திநாஞ் சிந்தை செய்வாம்.

---

ஊக்கமு மறிவு மேவி யொளிநிக ழாங்கி லேயர்
பாக்கிய வசத்தாற் பெற்ற பாவலர் பெருமா னான
ஷேக்ஸ்பியர் என்பான் செய்த தேம்பிழி நாடகத்துள்
வாக்கினு லொன்றை யானும் வன்மையாற் றமிழ்செய் வேனே.

ஈசனூர் படைப்பின் முன்னே இலங்குசித் திரத்திற் றீட்டும்
தேசுலாங் காட்சி போலத் தேனுலாங் கவியின் நூலைப்
பேசுவான் முயல்வ தென்றால் பின்னிலே றுவமை யுண்டோ
ஆசைதான் வெட்கந் தன்னை யறியுமோ வறியர்க் கம்மா.

நாந்திமுடிவில் சூத்திரதாரி.

(கூத்துமுகம்.)

சூத்திரதாரி—(திரைமுகநோக்கி) பணிக்க! எங்கிருக்கிறாய்?

பணிக்கன்—(களரிசேர்ந்து) ஐயா! இதோ இருக்கிறேன்; என்ன கட்டளை?



சூத்திர—அங்கிலேய காளிதாசனான ஷேக்ஸ்பியர் என்னும் கவிசிங்கம் அவர்கள் பாஷையிலியற்றியிருக்கும் பேர்போன மகாநாடகங்களிலொன்றை நமதுதேசத்து வித்துவான் விரவல்லி சே[illegible]யங்கார் தமிழ்செய்திருக்கிறார். அப்புதிய தமிழ்நாடகத்தை இந்த வஸந்தோத்ஸவத்தில் ஆட்டுவிக்க சபையார் வி[illegible]புகிறார்கள். ஆகலால் கானமுறை துவங்குக.

பணிக்—இதென்னபுதுமை! தமிழில் காழி அருணாசலக்கவிசெய்திருக்கிற இராமநாடகமென்ன, விரவல்லி ஸ்ரீநிவாசய்யங்கார் பாடிய குசலநாடகமென்ன, கூத்தாடி சின்னக்குட்டி கட்டிய அரிச்சந்திரநாடகமென்ன, இன்னம் பின்னிட்ட வித்துவான்கள்செய்த சகுந்தலைநாடக முதலிய பல நாடகங்களென்ன; இவைகளெல்லாமிருக்க எங்கையோ மேற்றுத்தேசத்தில் யாரோவொருகவி ஏதோவொருபாஷையிற்செய்த நாடகத்தைத் தமிழாக்கி அதைப் போட்டுவிக்கவாவது! இக்காலத்தில் எல்லாம் இங்கிலிஷ்வழிபாணும்போல நம்முடைய கூத்தும் இங்கிலிஷ் வழியாய்விட்டது. இதுவுங்கூத்துத்தான்.

சூத்திர—அற்பபுத்திக்கு அறிவெங்கிருந்துவரும்? கேள்;

நத்தைக்குத் தன்கூடு நாகரிக மாய்த்தோன்றும்
பித்தர்க்குத் தம்மனதே போக்காகும்—உத்தமர்தம்
மாண்பும் விபரீதம் மாறு வறிவிலிகள்
காண்பும் தலைகீழக் காண்.

பணிக்—வைத்தீர்களாவழி! என் வாய்க்கொழுப்பு சீலையால்வழிந்தது. போகட்டும்; இப்புதுநாடகத்தின் பெருமையைத் தாங்களே சொல்லுங்கள் பார்ப்போம்.

சூத்திர—ஆறுஞ் சொல்லுகிறேன்கேள். முதலாவது நம்முடைய தமிழ்ப்பாஷையில் நாடகமேயில்லை. என்ன திகைக்கிறாய்? உற்றுக்கேள். நம்மகூத்தாட்டவையில் பல்லவி, அநுபல்லவி, சரணங்கள் என்றிப்படிப் பாடியிருக்கும் பாட்டைக் கானபுளிக்கச் சொல்லிக்கொண்டு வேஷதாரி மத்தளகோஷங்களுடன் கூடக் களரியைச் சுற்றியோடிக் குள்ளிக்குதிப்பதுதான்தெரியும். இதைப்பார்க்க கேவலம் பையல்களும் பாமரஜனங்களுந்தான் போதும். இப்போது நம்முடைய சபையிற்கூடியிருக்கும் ஞானவான்கள் அங்கு தலைக்காட்டார். வடமொழி, இங்கிலிஷ் நாடகங்கள் அப்படியல்ல; மனிதர்க்குரிய குறைகுணங்

களும் மனோபாவங்களும் பாத்திரங்களின் சேஷ்டைகளாலும் அபிநயங்களாலும் விளங்கும்.

பணிக்—அப்படியானால் இந்தச் சேஷையங்கார் வடமொழி நாடகங்களிலொன்றைத் தமிழாக்காமல் இங்கிலீஷ்நாடகத்தைப் போய்ப் பிடிப்பானேன்?

சூத்திர—இங்கிலீஷ்படித்தவர்க்கு அநேககாரியங்களில் அதிக ஞானமுண்டல்லவா? ஏன்? இரண்டுபாஷையில ஞானமிருந்தால் தாரதம்மிய ஞானம் அதிகமிருக்கும். அப்படி அன்னியதேசத்தார்களின் மதம் ஆசாரம் சாஸ்திரம் காவியம் இவைகளையறிவதனால் நமக்குப் பேரறிவுண்டாகும்.

பணிக்—அப்படியா! ஐயா இப்போது தெரிந்தது.

சூத்திர—ஆனாலேன் இன்னம் உன்முகம் வாடியிருக்கிறது?

பணிக்—ஒன்றும் வாட்டமில்லையே.

சூத்திர—இதோ இந்தக் கண்ணாடியிற்பார்த்துக்கொள்.

பணிக்—இத்தனைபேர்முன் நான் மூட்டாளென்று பேரெடுத்தேனே! அகத்திலுள்ளது முகத்திற்காட்டாதா.

சூத்திர—போகட்டும் இதை மறந்துபோ; இதோ வருகிறாரே கனவர்த்தகர் அந்தோனியர், அவர்முகம் உன் முகத்தைவிட வாடியிருக்கிறதுபார். இனிநாம் போவோம்.

## முதலாவது அங்கம்.

### முதலாங்களம்.

வனிகர்புரியில் ஓர்தெரு.

அந்டோனியன், ஸாலரோனன், ஸாலேனன், மூவரும் வருகிறார்கள்.

அன்டோ. உள்ளது சொல்வேன் உளமதில் மறுக்கம்
இன்னதென் றறியேன் எனையது வருத்தும்
கண்டுநீரும் கலங்கின ராகத்தீர்;
அதன்காரண மறியேன் அதன்வர வறியேன்
வந்ததைப் பற்றிய வகையைநா னறியேன்
எவ்வழி பிறந்ததோ இனியலோ தெரியும்
சிந்தனை யென்றன் றெளிமதி தேய்ப்ப
நானெனை யறிவதும் நம்பலு மரிதே.



ஸாலரே. உன்மன மையமுயர்பெருங் கடலில்
பம்பிச் சிதறிப் பரிதவிக் கின்றது;
பொங்குபாய் விரித்தான் பெருமரக் கலங்கள்
வெள்ளத் திறைகளோ மேற்குடி மக்களோ
கடல்கெழு மூர்த்தியோ வெனக்கண் படைச்
சிற்றுரு வெல்லாம் மற்றவைக் கிறைஞ்சி
நெய்த சிறகுடன் பையவே போகுங்
கருங்கடல் மீது கருத்தெலா முமக்கு.

ஸாலேனன். நம்பிநீர் கேளும் நான்றுணிந் துமைப்போல்
பாரி வர்த்தகம் பரிவுறச் செய்யின்
நல்லுயி ரெல்லாம் நாடியங் கிருக்கும்;
ஆசையு மச்சமும் அங்கலோ விருக்கும்;
காற்றின் நிலையைக் காண்பதற் கொருபுல்
கிள்ளிப் பிடிப்பேன்; கிளரும் படத்தினில்
துறைமுகம் சேதுவும் பாதையுந் தேடிக்
கண்விழி பூப்பக் கருதிநான் பார்ப்பேன்;
ஊறுசெய் பொருள்களைக் காணவுள் நடுங்கி
என்ன வருமோ வென்றுமெய் பதறிச்
சிந்தை கலங்கல் திண்ணமென் றறிவீர்.

ஸாலரே. சொல்லுவேன் கேளும் கடுகுழம் பாற்றுங்
காற்றென் மனத்தைக் கடல்வழி யெறியும்;
பெருங்காற் றெண்ணிப் பேதுற வெனக்கு
நளிர்ச்சுரங் காணும்; யாமநா ழியினுள்
மணலைக்காணமட்டிலாக்கடலுள்
ஆழமில்பரப்பும் அடிமறிப்பையும்
நினைவினிற்றோன்ற நெஞ்சஞ்சுளித்து
ஐயையோவென்றன் அருமைப்பெருங்கலம்
தான்படுதரையில் தன்பழுமேலாக்
கூம்புதாழ்ந்து குனிந்துடல்முகாத்
தூர்த்தமணலிடை தொய்யுறுமென்று
வேர்த்தென்னெஞ்சம் மெலிந்திடுமன்றே.
ஆலயம்புகும்போ தங்குளபுனிதப்
பாறையைக்காணப், பரிந்திடுமனந்தான்
கடனீர்க்கிழுபா கருங்கலை நினைக்க

[illegible]த்து மெல்லத் தாக்கினு மையோ!
[illegible]மே யென்றன் கோமள நாவாய்,
[illegible]ளைப் பண்டநீர் வாய்ப்பட் டிறையுமே,
[illegible]கெ ளெல்லாம் பரவலை யுடுத்துமே,
[illegible]னை யுவந்த கனநிதிப் பொருளெலாம்
[illegible]த்து படுமேயென் றங்கம் பதறிக்
[illegible]துமே யல்லாற் காணுமோ துணிவு?
[illegible]டோனியவுன் அகத்தைநா னறிவேன்:
[illegible]கம் மிகு பரியுமுன் சிந்தை.

அன்டோ. [illegible]பம்முள, குறையிலை பகருவேன் கேளீர்
[illegible]ம்பண்டமு மொருகலத் திட்டிலேன், துறைகட்
[illegible]க வொன்றல, நொடிப்பிலே, யாவுமிவ் வருஷத்
[illegible]தில் போவதில்; பண்ணியத்தா லல்ல மயக்கம்.

ஸாலேன. [illegible]படியானுல் ஆசைநோய் கொண்டீர்.

அன்டோ. [illegible]! என்ன பேச்சு.

ஸாலரே. [illegible]சயு மில்லையா, அருந்துயர் தனக்குக்
[illegible]லாமையே காரண மென்போம்;
[illegible] முறையாக வெளிதின்னில் நிரும்
[illegible]க் குதித்து 'நான்மகிழ் வுற்றேன்
[illegible]கொர் துயரில்' என்பதுந் தகுமே.
[illegible]லை கைமுர் திருவடி யாணை
[illegible] படைப்பை யென்னென வுரைப்பேன்
[illegible]மேல் விந்தை விசித்திர மையா
[illegible]காத்தின் நாதம் செவியுற
[illegible]ய கண்களை யின்புற நோக்கிக்
[illegible]ந்த் அன்னை கிளிகளைப் போலச்
[illegible]பார் சிலவர்; சிலர்களோ வென்றால்
[illegible]ரிஷிதன் கண்முனே வந்து
[illegible]ப்புக் கேற்ப நல்லுரை யென்று
[illegible]ட்டாலு மாங்கவர் மதியார்
[illegible]த்தைச் சுளித்து முறுவலைக் குறிக்கும்
[illegible]லினைக் காட்டார் பரிந்தவர் தாமும்.



## இரட்டைப்பிள்ளைகள்.

உலகத்திலுள்ள ஜனங்கள் கோடிக்கணக்கானவர். அத்தனை பேரிருந்தும் ஒருவராயினும் வேற்றுமையின்றி மற்றொருவரைப் போலிருப்பதில்லை. கண் மூக்குச் செவி வாய் கால் கைமுதலிய வுறுப்புகள் எல்லோர்க்கும் பொதுவெனினும் முகம்மட்டும் ஒன்றுயிருப்பதில்லை. ஆனால் மக்களிடத்தில் பெற்றோருடைய முகஜாடையிருப்பதுண்டு. இதனினும் விசேஷமான ஒற்றுமை யிரட்டைப்பிள்ளைகளிடத்திற் காணலாம். அவர்களுடைய வடிவமும் வளர்த்தியுங்கூட ஒரேவிதமா யிருக்குமாகையால் அவர்களுடைய ஒற்றுமை யின்னம் அதிகமாயிருக்கும். அவர்களு ளொருவரைப் பார்த்தால் மற்றொருவரைப் பார்க்கவேண்டியதில்லை. உருவத்தைப் போலவே குரலும் ஒன்றாயிருக்கும். இவ்விதமான விசேஷ ஒற்றுமையிருப்பதினால் அவர்களுள் ஒருவரினின் றொருவரைக் கண்டுபிடிப்பது அரிது. இம்மாதிரியான இரட்டைப் பிள்ளைகளுடைய ஒற்றுமையைக்குறித்து ஷேக்ஸ்பியர் என்னும் புலவர் பெருமானும் ஹாஸ்யரஸமுள்ள நாடகமொன்று செய்திருப்பது அநேகருக்குத் தெரிந்திருக்கலாம்.

இரட்டையாய்ப்பிறந்த சிலரிடத்தில் முற்கூறியபடி உருவம் முதலியனவேயன்றி குணம் தேகசௌக்கியம் முதலியனவும் ஒருவகைப்பட்டிருப்பது பின்னும் வியக்கத்தக்கது. அவ்விதமான இரட்டைப்பிள்ளைகளுள் ஒருவரை விட்டொருவர் நெடுந்தூரம் பிரிந்திருந்தபோதிலும் ஒருவருக்கு ஏதாவது தேகசௌக்கியம் குன்றினால் மற்றவருக்கும் அப்படியே சௌக்கியம் குன்றுவதும் ஒருவன் நினைப்பதுபோலவே மற்றவன் நினைப்பதும் இவைமுதலான ஒற்றுமைகள் இரட்டைப்பிள்ளைகள் சிலரிடத்திலுண்டு. ஒருவன் கைப்பட்டான இரண்டு கடிகாரங்கள் அவற்றிலுள்ள சக்கரம் வில்முதலியனவெல்லாம் ஒரேமாதிரியாகவே பொருத்தப்பட்டு, இரண்டும் அணுவளவாகிலும் வேற்றுமையில்லாதபடி யமைந்திருக்கப்பெறினும் இரண்டும் காலங்காட்டுவதில் சிறிதாயினும் பேதமில்லாமலிருப்பதரிது. அவ்வாறிருக்கையில் இரண்டுபேர் உருவத்திலும், குணத்திலும், தேகக்கூறுபாட்டிலும் ஒருவரைபோலொருவர் இவ்வாறு ஒத்திருப்பது வியப்பன்றோ!

இங்கிலாண்டில் ஒருத்திக்கு இரட்டைப்பிள்ளைகள் பிறந்து அவையிரண்டும் ஒரேசமயத்தில் ஒரேவிதமான வியாதியினால் பிடிக்கப்பட்டுக் கொண்டிருந்து ஏககாலத்தி லிரண்டும் மரித்துப் போயின. இதுவிஷயத்தைப்பற்றி, அந்தக்குழந்தைகளுக்கு வைத்தியம் பார்த்துவந்த பண்டிதர் பின்வருமாறு சொல்லுகிறார். "அவ்விரண்டுகுழந்தைகளுள், ஒன்றுக்கு நோய்வந்தகாரணத்தால் மற்றதுக்கும் நோயுண்டாயிற்றென்று சொல்ல ஞாயமில்லை. ஆனாலிரண்டு குழந்தைகளுடைய தேகக்கூறுபாடும் தேகதத்துவமும் ஒரேவிதமாயிருப்பதால், அவ்விதமான தேகதத்துவத்தில் எந்தப்பிசகினால் ஒன்றுக்கு ஒருவியாதிவரக்கூடுமோ, அதேதேக தத்துவத்தையுடைய மற்றக்குழந்தைக்கும் அதே பிசகினால் அதேவியாதி வரக்கூடும்." இவ்விதமான ஒற்றுமைக்குக் காரணம் யாதாயினுமாகுக; இரட்டைப் பிள்ளைகளுக்குள்ள சம்பந்தம் ஆச்சரியமாகவே யிருக்கிறது.

ஒருபாடசாலையின் தலைமையுபாத்தியாயருக்கு ஒருநாள் சாயந்திரம் இருந்தாற்போலிருந்து உடம்பு சொஸ்தமில்லாமல் அயர்வுற்று அதிசீக்கிரத்தில் தாம் மரித்துப்போவாரென்று உறுதியாய் நம்பினார். அதனால் சிந்தைசோர்ந்து இயல்பு குன்றியிருந்த அவருக்கு அன்றிராத்திரி நல்லதூக்கம் வரவில்லை. மறுநாள் தேகம் தெளிந்து எப்போதும்போலானார். இப்படியிருக்க இரட்டையாய்ப்பிறந்த அவர் சகோதரர் அவருக்கு உடம்பு குணமில்லாதிருந்த அன்றிரவிலேயே மரித்துப்போய்விட்டதாக அவருக்குத் தந்தி வந்தது. இதுமாதிரியாகவே இன்னொரு ஊரிலிருந்த இரட்டைச் சகோதரர் இருவருள் ஒருவருக்கு வியாதிகண்டால் அதேகாலத்தில் மற்றவருக்கும் உடம்பு சொஸ்தமில்லாமலிருந்தது. ஆரோக்கியத்திலிருக்கையிலும் இவ்வொற்றுமை தப்பவில்லை. அன்றியும் இவ்வொற்றுமை மரணபரியந்தம் இப்படியே யிருந்தது. இவ்வாறாகவே புரோகிதரொருவர், கப்பலேறிப்போயிருந்த தம் சகோதரர் நடுக்கடலில் புயலடிக்க, பயத்தினால் மெய்ம்மறந்திருந்தபோது தாமும் அதேகாலத்தில் காரணமின்னதென்றறியாதபடி யிருந்த ஏக்கமுற்று மனவுறக்கங்கொண்டிருந்ததாகக் கூறியிருக்கிறார். இவ்வாறு நடப்பது உலகிலெங்குமுண்டு. இதைமனதிற்கொண்டு வித்துவான்களால் எழுதப்பட்ட கற்பனைக் கதைகளும் பலவுள.



இவ்விதமான விசேஷ ஒற்றுமை இரட்டையாகப் பிறக்கிற எல்லோரிடத்திலும் காணப்படுகிறதில்லை. சிலவேளைகளில் இரட்டைப்பிள்ளைகளாய்ப் பிறந்தவர்கள் மட்டுமேயல்ல, இரத்தசம்பந்தத்தினாலாயினும், ஸ்நேகசம்பந்தத்தினாலாயினும் இருந்த பிரீதியோடிருப்பவர்களுள்ளும் இந்தச் சம்பந்தமிருப்பதாகக் காணலாம். காந்தத்திற்கும் இரும்புக்கும் ஒருகவர்ச்சி சம்பந்தமிருப்பது யாவர்க்குந் தெரிந்ததேயாம். கடவுள் படைப்பில் அவ்வாறான சம்பந்தம் மனிதர்க்குள்ளும் இருப்பினுமிருக்கலாம்.

## மூலவர்க்கங்களின் விநோதங்கள்.

சற்றுயோசித்துப் பார்ப்போமாயின் இவ்வுலகிலுள்ள நானாவிதமான மரம், செடி, கொடிமுதலியனவைகளுள் ஒவ்வொன்றும் வியக்கத்தக்கதாகவேயிருக்கும். மேல்நோக்காய்ப் பார்ப்பவர்க்கோ எல்லாம் ஒன்றுதான். 'அதிகப்பழக்கம் அருமைகுறைக்கும்' என்பதாக அதிகப்பழக்கத்தால் ஒன்றிலேதேனும் விசேஷமிருந்தபோதிலும் அது தோன்றுவதில்லை. மூலவர்க்கங்களில் எவ்வளவோ விசித்திரங்களுண்டு. அவற்றை முன் பின்னறியாதவர்கள் அவற்றைக்கண்டு மிகவியப்புறுவார்கள்.

சிலவிடங்களிலுள்ள சுரைக்கொடி சூரியகிரணம் புகவொட்டாமல் அடர்ந்துபடர்ந்து தழைத்து விஸ்தாரமான பந்தல்போலிருக்கும். சோலைபோலிருண்டிருக்கும் அதன் குளிர்நிழலின்கீழ் அங்குள்ள ஜனங்கள் ஆனந்தத்தோடு மாலைப்பொழுதைப் போக்குவார்கள். அதன்காயும் உணவுக்கு உபயோகப்படும். இந்தஜாதியைச் சேர்ந்த விநோதமான இன்னொருவகைக் கொடியுண்டு. பூசுணி போன்ற அதன்காய் நன்றாய்ப் பழுத்திருக்குங்காலத்தில் சற்று அசைவுற்றாலும், அன்றி அதன்மேலேதேனும் பட்டாலும் அது உடனேபடீரென்றுவெடித்துச் சுற்றி வெகுதூரத்திற்கு அதன்விதை முதலியனவற்றை வாரியிறைக்கும்; அது வெடிக்குங்காலத்தில் பாவட்டங்குழலிலுண்டாவது போன்ற சப்தம் அதிகமுண்டாகும். அக்காலத்தில் தெரியாமல் தப்பித்தவறி அதின்சமீபத்திலிருந்துவிட்டால் உடல் முழுவதும் அது தன்சோற்றையும் விதைகளையும் வாரியடித்து பிரமிக்கும்படிசெய்யும்.

வடதேசத்திலுள்ள ஓர் பள்ளத்தாக்கில் காடுகாடாக வளர்ந்திருக்கும் ஓர்விதமான மரமுண்டு. அதன்காய் புடலங்காயையொத்து நாலைந்து அடிநீளமும் ஓரங்குலகனமுமுள்ளதாய் நீண்டுதொங்கும். மரம் இருபத்தைந்து அடிஉயரம் வரையிலும் வளரும். வருஷம் முன்னூற்றறுபதுநாளும் அம்மரம் பூத்துக் காயும்பழமுமாயிருக்குமெனினும், மாரிகாலத்திலேதான் அதுநிறையப் பூப்பதுவழக்கம். கோடைபிறந்ததும் அதன்கனிகளைப்பறிப்பார்கள். அக்கனி ஆடுமாடுகளுக்கு நல்ல உணவாகிறது. அக்கனிகளால் அவைகள் தேகம்பருத்து பலமடைகின்றன. அக்கனிகள் பழுப்புநிறமுள்ள மெழுகுவர்த்தி போன்றிருப்பதைப்பற்றி அம்மரத்திற்கு மெழுகுவர்த்தி மரமென்று பெயர்வழங்குகிறது.

தென் அமெரிக்காவிலுள்ள உஷ்ணதேசங்களில் மழைமரமென்று ஓர்வகைமரமுண்டு. அதன் இலை காற்றில் நீராவிரூபமாயுள்ள ஜலத்தையெல்லாம் இழுத்துக்கொண்டு மழைபெய்வதுபோலெந்நேரமும் ஜலத்தைத் துளித்துக்கொண்டேயிருக்கும்; சுற்றிலும் நீர் வறண்ட பூமியாயிருந்தபோதிலும் அம்மரமிருக்குமிடம் சதசதப்பாய்ச் சேற்றுப்பாங்காக இருக்கும். இந்தவிருட்ச விசேஷத்தால் பாலைவனங்களில்கூட நீர்செறிந்து குளிர்ந்தநிழலைக் கொடுக்கும் மரங்களடர்ந்த தோப்புகளையும் காணலாம். இம்மரங்களை அங்கிலேய துரைத்தனத்தார் நமது தேசத்திலும் நீர்ப்பாங்கில்லாமல் வறட்சியாயுள்ள சிலவிடங்களில் கொண்டுவந்துவைத்துப் பயிராக்குகிறார்கள்.

வட அமெரிக்காவில் ஓர்வகை விஷச்செடியுண்டாகிறது. அது பார்வைக்குப் பச்சென்று அழகாகத் தோன்றினாலும் அதன் இலைமேலே பட்டமாத்திரத்தில் பத்துத்தேள்கள் ஏககாலத்தில் ஓரேஇடத்தில், கொட்டினாற்போலிருக்கும். அதினுபத்திரவம் சகிக்கமுடியாது. அதுபட்ட இடத்தில் காயம்முதலியன ஒன்றுமிராது. ஆனால் சிலநாட்சென்றபின் அந்த இடம் ஜலம்படும்போதெல்லாம் நைந்து மிருதுவாகும். அந்தச்செடிக்கு ஒருவித நாற்றமுண்டு. அதனாலே அதன் அனுபோகந்தெரிந்தவர்கள் அந்தச் செடியிருப்பதை யறிந்து ஜாக்கிரதையாய் அதனை நெருங்கார்கள். எவ்வளவு திரவியினும் அதன் உபத்திரவத்திற்காற்றமாட்டாமல் புரண்டு புரண்டு துடிப்பான். அச்செடிகளடர்ந்திருக்கும் மார்க்கமாய் நாய், குதிரைமுதலியன வந்துவிட்டால் வெறிகொண்டவைகள்போல இங்குமங்குமோடி ஒருவரையும் நெருங்கவொட்டாமல் உதிரம்பெருக தங்கள்தேகத்தைக்கடித்துச் சின்னபின்னப்படுத்திக்கொள்ளும்.



அமெரிக்காதேசத்தில் மின்சார விருட்சமென்று ஒன்று புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதில் மின்சாரத்தின்குணங்களை விசேஷமாய்க் காணலாம். அம்மரத்தின் ஒருகிளையைக் கையால் ஒடிப்போமாயின், அது நமதுவைத்தியசாலைகளில் தேகத்தின் நரம்புகளை யிழுப்பதற்காக வைத்திருக்கும் கருவியைப்போல் நமது நரம்புகளையெல்லாமிழுத்து அதிரச்செய்யும். திசையறி கருவியாகிய காந்த ஊசியை அதன் அருகிற்கொண்டுவர அவ்வூசி ஒருநிலையில் நிற்காமல் தத்தளித்து மரம்கிட்டக்கிட்டக் கடைசியாய் கிறுகிறென்று சுழலும். இம்மரத்திலிருக்கும் மின்சாரத்தின் சக்தி மாலை இரண்டுமணிப்பொழுதில் மிக அதிகமாயும், இரவில் குறைந்துமிருப்பதாகத்தெரிகிறது. புயல்காற்றடிக்கும்போது இதன்குணம் அதிகரிக்கிறது; பறவைகளொன்றும் இதில்வந்து உட்காருவதில்லை; இம்மரமிருக்குமிடத்தையும் அவை அணுகா.

அமெரிக்காவில் அலாஸ்காவென்னும் மாகாணத்தில் சிவப்புநிறமுள்ள சிறுபழங்கள்பழுக்கும் ஓர்வகைச்செடி யுண்டாகிறது. அதன்கனி அதிக இனிப்பில்லாதிருக்கினும், ஓர்தொட்டியிற் போட்டுக் கையாற்கடைய அது நுரைநுரையாகத் தொட்டிநிறைய நிறைந்து நன்றாய்த்தோய்ந்த தயிர்போல் இருக்கும். அலாஸ்காவிலுள்ள ஜனங்கள் அந்நுரைக்கட்டியைச் சர்க்கரை சேர்த்தாயினும் அல்லது வேறுவிதமாகவேனும் உண்பார்கள். பழத்தைப்போலவே நுரைக்கட்டியும் சிவந்திருக்கும். அங்கிருப்பவர்களுக்கு அதுதான் விசேஷமான ஆகாரம்.

ஐரோப்பாவின் தென்பாகத்திலுள்ள நதிகளில் ஒருவகை நீர்ச்செடி ஏராளமாயுண்டாகின்றது. அச்செடிக்கு ஆண்பூவென்றும் பெண்பூவென்றும் இருவகைப் பூக்களுண்டு. பெண்பூ முதலில் ஜலத்தின்மேல் தோன்றித் தனக்குரியகணவனை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதுபோல நீரின்மேல் மிதந்துகொண்டேயிருக்கும். இது

இப்படியிருக்கஆண்பூமெள்ளத்தலையெடுத்து ஜலத்தின்மேல்தோன்றும். இதுதோன்றின அளவில் இதுவும் பெண்பூவும் ஒன்றையொன்று மெள்ளநெருங்கி இரண்டும் ஒன்றாய்ச்சேர்ந்த உடனே இரண்டும் விலகித் தண்ணீரில் முழுகிப்போம். இதன்பின்புதான் அதில் விதையுண்டாகின்றது.

தென் அமெரிக்காவில் ஓர்வகைப் பூசணி மரமாகவே வளர்கிறது. இரண்டுமூன்று வருஷத்தில் இருபதடி உயரம் வளர்ந்து சிறிதுகாலமட்டுமிருந்து பிறகு பட்டுப்போகிறது. அது விஸ்தாரமான குடைபோலப்பரந்து கவிந்திருக்கும். ஆறடியுயரமானது முதல் எக்காலத்திலும் பழமுங்காயுமாயிருக்கும். தென்னமரத்தில் தேங்காய்க்குலைக ளிருப்பதைப்போல் கிளைகளினடியில்தான் இது காய் காய்க்கும். இதன்கனி பரங்கிக்கனிபோலவே மஞ்சள் நிறமுடையதாய் வரிவரியாயிருக்கும். நன்றாய் முதிர்ந்தகனியானது சற்றேறக்குறைய நாலுந்தவிசை கனமுடையது. பூசுணி, பரங்கி இவற்றைப்போலவே இக்கனிகளும் ஆகாரத்திற்கு மிகவும் உபயோகப்படுகின்றன. அன்றியும் அதின்விதை நல்லவாசனையுடையதாகையால் அதையொரு வாசனைப்பண்டமாக வுபயோகிக்கிறார்கள். அதன்இலையும் வீணாவதில்லை; அதுசியக்காய் சவர்க்காரக்கட்டி இவற்றிற்குப்பதிலாக உபயோகப்படுகிறது: இம்மரம் எளிதிற்பயிராகக்கூடியது; அமெரிக்கா, ஆபிரிக்காவிலுள்ள உஷ்ணபாகங்களிலிதை விசேஷமாய்ப் பயிராக்குகிறார்கள். இது ஒருவருஷத்திற்குள் பலன் தரும்.

அமெரிக்காவில் டெமராராவென்னும் நதியில் ஆச்சரியமான தாமரையொன்றுண்டு. அத்தாமரையின் இலை ஐந்தடி அகலமுள்ளதாய் மிட்டாய்க் கடையிலிருக்கும் விருத்தாகாரமான பெரிய தட்டுகள்போலிருக்கிறது. அதன் விளிம்பு நாலங்குல உயரம் எடுப்பாகத் தூக்கிநிற்கும். இந்தவிளிம்புதவிர மற்ற இடமெல்லாம் தகடுபோல ஓரேமட்டமாயிருக்கும். இலையின் பின்புறமெல்லாம் விரல்நாட்ட இடமில்லாமல் பருத்துக்கூரிய முட்கள் செறிந்திருக்கும். கொடிமுழுவதும் முட்கள்தான். இலைகள் கொழுந்தாயிருக்கும்பொழுது ஓரம் சுருண்டு உட்புறமெல்லாம் சுருங்கி, பார்ப்பதற்கு மிகவும் அழகாயிருக்கும். மலருமுன் அதன்பூ நடுத்தரமான



பூசுணிக்காய்ப் பருமனிருக்கும். இந்தத்தாமரையை அங்கிலேயர்கள் இப்போதுதான் நூதனமாகக் கண்டுபிடித்தார்களாகையால் விக்டோரியா மகாராணியென்று இதற்குப் பெயரிட்டிருக்கிறார்கள்; இத்தாமரைக்கொடியை சென்னையில் நாநாஜாதி விருட்சத்தோட்டத்திற் காணலாம்.

## உலகவிசித்திரம்.

இவ்வுலகம் வெகு விசித்திரமானது; ஒன்றிற்கொன்று எதிரிடையாயிருக்கிறது; நிலையான கொள்கை யாதுமில்லை. மனத்திருப்தி யொருவருக்குங்கிடையாது; ஒருவன் போனவழி ஒருவன் போகிறதில்லை.

ஒருவன் நன்மையையேபுரிய நாடுகிறான்; மற்றொருவன் தீச்செயலையே சோறாகத்தேடுகிறான்.

ஒருவன் நியாயம் வேண்டி நியாயசபைக்குச் செல்லுகிறான்; மற்றொருவன் அதைக்கண்டோடுகிறான்.

மாளிகைகட்ட முயல்கிறானொருவன்; உள்ளவீட்டைஒன்று பாதியாக விற்று விடுகிறானொருவன்.

கடிமணஞ்செய்து களிப்புறுகிறானொருவன்; விளைமணஞ்செய்து வெய்துயிர்ப்பானின்னொருவன்.

மக்களுள்ளபெருங்குடும்பி வருவாய் சிறிதெனினும் வளர்நிதியீட்டுவன்; மட்டிலா வருவாயுடையானொருவன் மகப்பேறின்றெனினும் கடன் பட்டலைவான்.

உலகில் தற்காப்புக்கருதுகிற ஆயுதபாணியும், பிறர்தீங்குநேருமென்றஞ்சுகிற நிராயுதபாணியுமுண்டு.

ஓரிடத்தில் குளிர்நிழல்வேண்டித் தளிர்மரம்வளர்ப்பார்; மற்றோரிடத்தில் கதிரோன் வெயில்வேண்டிக் காவினை யழிப்பர்.

விலைபெறுமாடை விரும்பியணியா திருக்கிறவனுமுண்டு; வறியனிவனெனப் பிறவர் கூறுவண்ணம் விலைபெறுமாடை யணியுமெளியனுமுண்டு.

சிலர் எதிர்பாராதிருக்கும் அகாலமிருத்துயுவாகிய இடிவிழுதல் முதலியனவற்றால் உயிர்மாய்வார்கள்; சிலர் மன்தாரத் தற்கொலைபுரியத்துணிந்தும் இறக்காமல் தப்பி ஏமாறுவார்.

சிலர் பெரியதோரிடும்பைப் பிணிக்கெலாந்தப்பிச் சிறியகல்லிடறச் சீருயிரழிவார்; சிலரோவெனில் போர்க்களம்போந்துசமர்த்தொழில்புரிந்தும் தப்பிநின்று தலைவலியால்மாள்வர்.

பாடுபட்டுத்தேடிப் பணத்தைக்குவிப்போர் மக்கட்பேறின்றி மனங்கலுழ வூரூராய்த்திரிந்துயிர்வாழும் வறியரோ மக்களைப்பெற்று மன்றாடுவர்.

சிலர் உலகவின்பத்தைப்பெரிதாய் மதியாமல் அம்மையிற்கருத்துடையராய் கடவுள்தியானமும் சாஸ்திரவிசாரமும் செய்துகொண்டிருக்கிறார்கள்; இன்னஞ்சிலர் உலகும் உயிர்வாழ்வுமே பெரிதெனக்கருதி வேறொன்றையும் மனத்திற்கொள்வதில்லை.

## அற்பத்திலிருந்து பெருந்தனஞ்சேர்த்தல்.

எவ்வளவு அற்பமாயினும் இழிந்ததென்று இகழாது சேர்த்துவைத்தால் பெருந்தனமாகும். புகையிலைப்பொடியை ஒவ்வொரு காசுக்கு விற்றுப் பெரும்பொருள் சேர்த்தவர் பலர். இவ்வாறே சிறுமுதல்வைத்துப் பலபண்டம் கொண்டு அற்பவியாபாரஞ்செய்து தனிகரானவர் பலர். இதற்குமுன்னெல்லாம் நகரங்களிற் குவியும் குப்பைகளைக் கண்டு வெறுப்பது வழக்கம். இக்காலத்திலோ வெனில் எவ்விடத்திலும் குப்பை பொன்னுக்குப் பொடியாக விற்கப்படுகிறது. கருமான் உலைக்களத்திற் குவியும் அரப்பொடியையும், தட்டார் பட்டடையிற்சேரும் பொற்பொடியையும் வீண்போகாது சேர்த்துவைத்திருந்தால் பெருவிலை பெறும். ஒன்றுக்கும் பயனற்றதென்று நினைக்கப்படுகிற புற்றுமண்ணினால் மிகவும் அழுத்தமும் நயமுமான செங்கல்கள் இப்போது சென்னைமுதலிய இடங்களில் செய்து உயர்ந்த விலைக்கு விற்கப்படுகின்றன. மரங்களை அறுக்கையில்விழும் வாள்தூள்களை யந்திரங்களினால் பெருங்கட்டிகளாகச் செய்து, நீராவியந்திரங்களுக்கு விறகாக எரிக்கிறார்கள். கயிறு திரிக்கையில் உதிரும் சிம்புகளை வீணென்றெண்ணிக் கொளுத்திவந்ததை யொழித்து இப்போது சிறிதும் வீண்போகாதபடி காயிதங்களாகச் செய்துவருகிறார்கள். கிழிந்து குப்பையாகும் காயிதங்களையும் கந்தைகளையுமன்றோ மீண்டும் நயமான காயிதமாகச் செய்கிறார்கள். ஆதலினால் எந்தப்பொருளையும் அற்பமென்றிகழாது பொன்போலப் போற்றவேண்டும்.

---

# JANANANDINI.

# ஜநாநந்தினி.

புஸ்த. 1.] பிப்ரவரிமீ 1891. [இல. 2.

## இந்துதேசத்தில் ஆதியி லிருந்த சுகாதாரமுறை.

இந்துதேசத்தில் ஆதிகாலத்தில் அநுசரித்துவந்த சுகாதாரமுறையை ஒருவாறு அறிந்துகொள்ளுவது நன்று. மநுதர்மசாஸ்திரத்திலும், ஆயுர்வேதத்திலும் சுகத்துக்கென்றேற்பட்டிருக்கின்ற விதிகள் பலவுள. ஊன்றிப்பார்த்தால் சாஸ்திரங்களிலே சொல்லப்பட்டிருப்பவையெல்லாம் தேகசௌக்கியத்துக்கேற்றவைகளாகவே யிருக்கும். பதார்த்தங்களின் குணாகுணங்களையெல்லாம் சாஸ்திரங்களால் நன்றாயறிந்துகொண்டு தேகத்துக்கு அநுகூலமானவற்றைமட்டுமே ஏற்றுக்கொண்டு மற்றவைகளை விலக்கிவிடவேண்டும். ஆதிகாலத்தில் ஜனங்கள் இப்பொழுதிருப்பதுபோலல்லாமல் எங்கு மட்டேயாம், காலக்கிரமத்தில் விருத்தியடைந்து மூலைக்குமூலைசென்று நல்ல இடங்களைத்தேடி, மரங்களைவெட்டிக் காடுகளையழித்துப் புதர்களைக்கொளுத்தி மண்சுவர்கள்வைத்து வீடுகளைக்கட்டிப் பட்டணங்களையும், கிராமங்களையும் உண்டாக்கினார்கள். மற்றத்தேசங்களைப்போல இந்துதேசத்தில் எப்பொழுதும் அதிக உஷ்ணமாயாவது அல்லது அதிக சீதளமாயாவது இராமல் மிதமாயிருப்பதனால் இதிலிருப்பவர்களுக்குச் சாதாரணமான ஊணும், உடையும், வீடும் அகப்பட்டாற்போதும். இந்தியாவிலுள்ளவர்கள் நாடோறும் தங்கள் வீடுகளைப் பசுவின்சாணியைச் சுத்தமான ஜலத்திலே குழம்பாகக் கரைத்து வெள்ளி செவ்வாய் தப்பாமல் மெழுகிப் பெருக்கி எத்தனையோ சுகமாயிருக்கும்படி வெகு நன்றாக வைத்திருந்தார்கள்.

பாகசாஸ்திரத்தில் இந்துக்கள் ஆதிமுதற்கொண்டே நன்றாகக் கைதேர்ந்தவர்கள். காலதேசவர்த்தமானங்களை அநுசரித்து அவற்றிற்குத் தக்கபடி ஆஹாரநியமம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எல்லாவற்றுள்ளும் தேகசௌக்கியத்திற்கு அதிக முக்கியமானது தண்ணீராதலால் நல்ல தண்ணீருள்ள கிணறுகளை வெட்டுவிப்பது சிறந்த தருமமென்று சொல்லப்பட்டிருக்கிறது. வெளியேயிருந்து வெயிலில் வேர்த்துழப்ப வழிநடந்துவந்த அதிதிகளுக்கு அவர்கள் வருத்தந்தீர்க்கும்படிக் கையலம்பநீரும், கால்கழுவநீரையுந் தண்ணீரும், நெஞ்சுநனைய திவ்வியமான தீர்த்தத்தையுங்கொடுத் தாதரிப்பது மேலான அதிதிபூஜைக்குப் பூர்வாங்கமானது. "வேதநூற் பிராயிரநூறு" என்றபடி முற்காலத்திலிருந்தவர்கள் நூறுவயதளவும் நோயின்றி வாழ்ந்திருந்தார்கள். உயர்ந்த வருணங்களிலே பிறந்தவர்கள் நன்றாகக் கற்றுணர்ந்து சாஸ்திரங்களிலே சொல்லப்பட்டிருக்கிறபடி அநுஷ்டித்துவந்தார்களாதலினால் பெரும்பான்மையாய் அவர்களுக்கு நோயுண்டானதில்லை. ஆதிகாலத்தில் வியாதிகள் வாராதிருத்தற்பொருட்டு நெருங்கிய பந்துக்களுக்குள்ளே அவர்கள் விவாகஞ்செய்ததுமில்லை; க்ஷயம், அஜீர்ணம், குஷ்டமுதலிய தீராதநோய்களுள்ளவர்களுக்குக் கலியாணஞ்செய்ததுமில்லை.

பூர்வகாலத்திலே நகரங்கள் மிகவும் சுத்தமாய் வைக்கப்பட்டிருந்தன. ஆதியிலுண்டான அயோத்தியாபுரியில் இந்திரபவனம் போல எழுநிலைமாடங்கள் ஆகாயத்தைமுட்ட அழகாய்க் கட்டப்பட்டிருந்தனவென்றும், வீதிகள் விசாலமாய் எப்பொழுதுந் தண்ணீர்தெளிக்கப்பட்டு வந்தனவென்றும், ஜனங்கள் நிறைந்திருந்தார்களென்றும், ஒருவர்க்காயினும் நோயில்லாமல் எல்லோருஞ் சுகமாக வாழ்ந்திருந்தார்களென்றும், அங்கே செல்வமில்லாதார் இல்லையென்றும், அறிவிலார்கள் காணக்கிடையார்களென்றும், வீடுகள் தோறுங் குழந்தைகள் நிறைந்தனவென்றும், கொழுநனும் மனைவியும் ஒருவழிப்பட்டு இல்லறம்பூண்டு இணைபிரியாதிருந்து சுகமாக வாழ்ந்திருந்தார்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

எந்தக்காலத்திலும் நீர்ப்பிடிப்புள்ளதாய்ச் சேறுஞ் சகதியுமாயிருக்கிறவிடங்களிலே குடியிருப்பவர்களுக்கு நோயுண்டாகுமென்றும், அவர்கள் நெடுங்காலம் பிழைத்திராரென்றும் வைத்தியர்களு



க்குள்ளெல்லாம் பெருமைபெற்றவராகிய சரகர் சொல்லுகிறார். ஈரப்பிடிப்புள்ள அநூபா தேசத்தில் ஆறுகள் மிகுதி; அங்கே எப்பொழுதும் குளிர் அதிகம்; ஆம்பல் முதலிய நீர்ப்பூக்கள் மிகுந்திருக்கும்; கொக்கும், நாரையும், மீனும், பாம்பும் அவ்விடத்தில் மிகுதியாயுண்டு; ஆனதினாலேதான் அங்குள்ளவர்கள் அகாலமரணமடைகிறார்களென்று அவர் எழுதியிருக்கிறார். நீர்ப்பிடிப்பில்லாத மேட்டுப்பூமிகளிலும், மலைநாடுகளிலுமிருப்பவர்கள் நெடுங்காலம் வாழ்ந்திருப்பார்கள். நோய்கொண்டவர்கள் ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்துக்குப்போவதினால் நோய் நீங்குமென்று ஆதிகாலத்திலேயே கண்டறியப்பட்டிருக்கிறது.

வாதபித்தசிலேஷ்மங்கள் ஒவ்வொரு ருதுவிலும் வெவ்வேறு விதமாயிருக்குமாகையால் காலத்தின் கூற்றையறிந்து ஆகாரத்தை உட்கொள்ளவேண்டும். கீழ்காற்றடிக்கையில் கபம் அதிகமாகும்; மேல்காற்று உடம்பின் உள்ளேயிருக்குஞ் சூட்டைக்கிளப்பிவிட்டு உடம்பையுலர்த்திப் பலத்தைக் குறைத்துவிடும்; தென்றற்காற்று தேகத்துக்கு மிகவும் ஆரோக்கியமானது. முன்னெல்லாம் இப்பொழுதிருப்பதுபோல நல்லவழிகள் கிடையாது. காடுகளையழித்து வழிகளைச்செய்து அவற்றின் தூரத்தைக்காட்டும்படி அளவிட்டு இடையிடையே கற்களை நாட்டுவார்கள். கிராமங்களுக்கு அதிகாரிகளை நியமித்து மற்றும் வேண்டிய சீர்திருத்தங்களைச்செய்வார்கள். ஒவ்வொரு கிராமத்திலுள்ளவர்களும் சுகமாய் வாழ்ந்திருப்பதற்கேற்றபடி குளங்களைவெட்டி, சாலைகளை வைத்து, சத்திரங்களைக் கட்டி, நீர்பாயத்தக்க நிலங்களுக்குக் கால்வாய்களை வெட்டிக்கொண்டுவந்து உழுவயலாக்குவார்கள். கிராமங்கள்தோறும் பஞ்சாயத்துகள் நியமிக்கப்பட்டு வழக்குகளெல்லாம் அவர்களாலே இருவரும் பொருந்தத்தீர்க்கப்படும். ஒவ்வொரு ஊருக்கும் கிராமாதிபதியும், கணக்கனும், தலையாரியும், தோட்டியும், வைத்தியனும், புரோகிதனும், நீர்பாய்ச்சுபவர்முதலானோர் நியமிக்கப்பட்டிருப்பார்கள். கிராமத்தில் வேலைபார்ப்பவர்களுக்கெல்லாம் தனித்தனியே காணி பூமி மானியமாக விடப்பட்டிருக்கும்.

அகன்றபாதைகளையும், நல்லதண்ணீருள்ள குளங்களையும், நடைத்தெருவுகளையுஞ் செய்துகொடுப்பது அரசனைப்பொறுத்த

கடன். அன்றியும் ஏழைகளையும், தாய்தந்தையரில்லாத குழந்தைகளை
யும், கிழவர்களையும், கணவனையிழந்தவர்களையும் அரசன் ஊண்
உடை முதலியவற்றால் ஆதரிக்கவேண்டும். சிறந்த வித்துவான்க
ளையும், ஒற்றர்களையும் உற்றமந்திரிமார்களாக வைத்துக்கொண்டு
நாட்டாருக்கு நன்மைபயத்தல் அரசனைப்பொறுத்த கடமையாம்.

மணற்பாங்கான இடங்தேடி நல்ல தண்ணீருள்ள கிணறுகளை
வெட்டுவார்கள். ஆற்றுநீரும், மலையோரங்களிலுள்ள கிணறுகளி
ன் நீரும், மணற்கேணி நீரைப்போல நன்றாயிராது. தண்ணீர் நல்
லதாயிராவிட்டால் அதை வெந்நீராக்கிக் குடிப்பார்கள்; சிற்சில
வேளைகளில் அதனோடு கொஞ்சம் தேனைக்கலந்து குடிப்பதுமுண்டு.
கோயிலுங் குளமும் எப்பொழுதும் ஒன்றிற்கொன்று சேர்ந்தேயி
ருக்கும்; கோயில்களுக் கருகே குளங்களில்லாதிருந்தால் அவை
பெரும்பான்மையாக ஆற்றங்கரையோரத்திலிருக்கும்.

மனிதன், தேகமென்கிற வண்டியைப் புத்தியென்னும் வண்டி
க்காரனால் வியாதியென்னுஞ் சேற்றில் அமுக்கிக் கெடுக்காமலும்,
மேடுபள்ளங்களென்னும் ஆபத்துகளிலே சென்று தேய்த்து மாய்
த்துவிடாமலும் உடற்கூறை யறிந்து நல்லவழியில் நடத்துவானே
யாயின் பூர்ண ஆயுளைப்பெற்றுச் சுகமாக வாழ்ந்திருக்கலாம். அப்
படிக்கில்லாமல் நன்னெறியைவிட்டு நடத்தினால் உயிர்க்காதாரமா
கிய கருவிகளெல்லாம் பழுதுபட்டு அகாலமரண முண்டாகும்.
கோழிகூவிப் பொழுதுவிடியுமுன்னே தூக்கந்தெளிந்து பள்ளியை
விட்டெழுந்து கடவுளைத்தொழுது வெளியேசென்று வடக்குமுக
மாயிருந்து மலவிஸர்ஜனஞ் செய்துவிட்டுக் கை கால்கழுவி தந்த
சுத்திசெய்து நீராடி விதித்தகாலந் தப்பாமல் உண்ணவேண்டும்.
எண்ணெய்தேய்த்துக்கொள்ளுதல் முக்கியமானது. காய்ச்சல் வந்
திருக்கும்போதுமட்டும் அப்பியங்கஸ்நானஞ் செய்வது கூடாது.
கடுகெண்ணெய், நல்லெண்ணெய், சுகந்ததைல முதலியன அப்
பியங்கஸ்நானஞ் செய்வதற்கேற்றவை. வெந்நீரில் ஸ்நானஞ்செய்
தால் உடம்பிலுள்ளவலியும், காய்ச்சலும் நீங்கும்; ஆவிபிடித்தால்
அதனாலும் இவ்வாறே வலியும் காய்ச்சலுந்தீரும். குதித்து விளை
யாடி ஓடியாடித்திரிவதனாலும், அல்லது நடப்பதனாலும், குதிரை
மேலேறிச் சென்றாலும், உடம்பைத்தடவி முறுக்கிப்பிடிப்பதனா



லும் சோம்பல் நீங்கிச் சுகமுண்டாகும். தலைமயிர் சிக்குப்பிடியா
மல் எண்ணெய்தடவி வாரி முடித்தலாலும், கிரமப்படி க்ஷவரம்
பண்ணிக்கொள்ளுதலாலும் தேகத்துக்கு நன்மையுண்டாகும்.

ஸ்நானம் பலவகைப்படும். குளிர்ந்தஜலத்தில் ஸ்நானஞ்செ
ய்தால் உஷ்ணந்தணியும்; சீதகாலத்தில் அதிக சீதளமான ஜலத்
திலே ஸ்நானஞ்செய்தால் கபங்கட்டும்; உஷ்ணகாலத்திலே சீதள
ஜலத்தில் ஸ்நானஞ்செய்தால் நல்ல பசியுண்டாகி தேகஞ் சுகம்
பெறும்; வயிற்றுப்போக்குண்டாயிருக்குங்காலத்திலே ஸ்நானஞ்
செய்வது கூடாது; கால்களை அலம்புவதனால் ஒருவாறு களைதீர்
ந்து சாதாரணமான ரோகங்கள் நீங்கும். நல்ல ஆகாரத்தை உண்டு
இரண்டு யாமம் அயர்ந்து நித்திரைசெய்து, புலன்களை யடக்கிக்
கவலையற்றிருந்தால் ஆயுள் நீடித்திருக்கும்.

ஆதிகாலத்தில் யார்க்கும் எங்கேபார்த்தாலும் உணவு வேண்
டியமட்டுமகப்படும். வரவர ஆகாரங்கிடைப்பது மட்டுப்படுகின்
றது. இவ்வாறே இன்னுஞ் சிலகாலஞ்சென்றபின் ஆகாரம் எளி
திலகப்படாமல் எப்படிப்பட்டவர்களும் பசியால் வருந்தும்படியாக
வும், அகப்பட்டதைச்சாப்பிடும்படியாகவுந்தானாகும்: இதற்குமுன்
னெல்லாம் எங்கேபார்த்தாலும் ஆகாயம் நிர்மலமாய் திவ்வியமான
தண்ணீர் அகப்படும்; எவ்வகையான காய் கனிகளும் மலிந்திருக்
கும்; காலமழைபெய்து ஜலத்தட்டில்லாதபடி நவதானியங்களும்
குறைவறவிளையும்; அக்காலத்திலே பஞ்சமென்று மிருந்ததில்லை;
எங்கேபார்த்தாலும் காடுகளுஞ் சோலைகளுமாய்க் காயுங் கனியுங்
கிழங்கும் மிக மலிந்திருக்கும்.

சுரைக்காய், காளான், மூங்கில்முளை, வற்றல், பன்றியிறைச்சி,
உப்பு, சாராயம் இவற்றோடு பாலைக்கலந்துண்டால் விஷத்துக்குச்
சமானமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பன்றியின் மாம்சம், வெ
ள்ளைப்பூண்டு, வெங்காயம், காளான் இவற்றை உண்ணலாகாது
என்றும் ஆயுர்வேதத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது.

கவலையற்றிருப்பதனாலும், ஆநந்தமாய்ப் பாட்டைக் கேட்பத
னாலும், சோம்பலில்லாமல் நன்றாகப் பாடுபடுவதனாலும், காலந்த

வருமல் எண்ணெய்தேய்த்துக்கொள்ளுவதினாலும், ஸ்நானஞ்செய்து சுசியாயிருப்பதினாலும், புது அரிசிச்சோறு தயிர் பால் நெய் முதலியனவற்றை உண்ணுவதினாலும் தூக்கம்நன்றாகவருமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்நானஞ் செய்தவுடனே நன்றாய் உலர்த்திவைக்கப்பட்டிருக்கும் படிவஸ்திரத்தினால் உடம்பைத்துடைத்துக்கொள்ளவேண்டும். மாரிகாலத்தில் நன்றாயுலர்ந்த சிவப்புவஸ்திரங்களையும், கோடைகாலத்தில் கனமில்லாத மெல்லியவஸ்திரங்களையும், அதிக குளிராயிருக்குங்காலத்தில் கம்பளங்களையும் உடையாக உடுத்தவேண்டும்; உடுத்துக்கொள்ளுகின்ற வஸ்திரங்களில் சிறிதும் அழுக்கில்லாமல் சுத்தமாயிருக்கவேண்டும்; தலையில் பாகை யிருந்தால் குளிரும் வெயிலும் தாக்காது; காலில் பாதரக்ஷை யிருத்தல் மற்றெல்லாவற்றினும் அவசியமானது.

வைத்தியன் உயர்குலத்திற்பிறந்தவனாகவும், இதாஹிதங்களை நன்றாக நிதானித்தறிந்தவனாகவும், பேராசைப்படாதவனாகவும், சோம்பலற்றவனாகவும், எல்லோர்க்கும் நன்மையைச்செய்யுங் குணமுடையவனாகவுமிருத்தல்வேண்டும்.

நோய்களுண்டாவதற்கு வெவ்வேறு காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. சிலர் வியாதிக்குக்காரணம் கர்மமேயென்பார்கள். அதிகபாரமான மூட்டைகளைச் சுமப்பதனாலும், வருந்திப்பிழைப்பதனாலும், அதிகமாகப்படிப்பதனாலும், கீழேவிழுவதனாலும், வேகமாக நடப்பதனாலும், தேகத்துக்கு ஒத்துக்கொள்ளாத உணவை யுண்பதனாலும், அதிகமான குளிர்வெயிலில் திரிவதனாலும் வியாதிகள் உண்டாகின்றனவென்று வேறுசிலர் சொல்லுகின்றனர். பசியோடு இளம்வெயிலில் நடப்பதனாலும், அச்சம், துன்பம், குடி, ஸ்தலபேதம் இவற்றால் வியாதிகளுண்டாகின்றனவென்று இன்னுஞ்சிலர் சொல்லுவர். தேசம், காலபேதம், வயது, குணம், காற்று இவற்றின் வேறுபாடுகளே முக்கியமாய் வியாதிகளுக்குமூலமென்பது ஆயுர்வேதத்தின் கொள்கை.

நோய்கண்டவுடன் அதன் கூறறிந்து தக்கபடி வைத்தியஞ்செய்யவேண்டும்; அற்பத்தைப் பெரிதென்றுபாராட்டலாகாது; பெரிதான நோயை அற்பமென்று நினைத்து மருந்துகொடாதிருப்ப



தும்குற்றமே; ஒரு மருந்தைக்கொடுத்து அதனால் குணமுண்டானால் அதைக் கைவிடலாகாது; ஒருமருந்தைக்கொடுத்து அதனால் குணமுண்டாகாதிருந்தால் நிதானித்தறிந்து அந்தநோய் நீங்குதற்பொருட்டு வேறுமருந்தைக் கொடுக்கவேண்டும். பெருநெருப்பில் தண்ணீரைத் துளிதுளியாகத்தெளித்தால் அதனால் அந்நெருப்பு அணையாமல் எப்படிப்பெரிதாமோ அவ்வாறே மருந்தை மிகவும் சிறிதாகக்கொடுப்பதனால் வியாதி பெரிதாகுமேயல்லாமல் மட்டுப்படாது. ஆதலினால் நோயின்குணமறிந்து அதற்குத் தக்கபடி மருந்தை அளவறிந்து கொடுக்கவேண்டும்.

வைத்தியன் பிணியாளியைப்பார்த்தபின் அப்பிணியுண்டானதின் காரணத்தையும், அவன் வழக்கமாக உண்ணுமுறையையும், நோயின்தன்மையையும், நோய்கொண்டவனது தேகத்தின் நிலைமையையும், காலதேசவித்தியாசங்களையும் சீர்தூக்கிப்பார்த்த பின்பே வைத்தியஞ்செய்யத் தொடங்கவேண்டும். இவையெல்லாவற்றினும் வைத்தியன்விதித்த பத்தியப்படி நடத்தல் முக்கியமானது. வைத்தியன் ஒன்றைச்சொல்ல நோயாளி வேறொன்றைச்செய்தால் மருந்து எத்தனைதான் சிறந்ததாயினும் பயன்படாது. வைத்தியர்கள் நோயின்குணமறிந்து பத்தியஞ்சொல்லுவதுமன்றி, பிணியாளிகளுக்குப் பத்தியஞ்செய்து கொடுக்கப்படும் பாத்திரங்கள் சரியானவைகளாவென்று நன்றாகப் பார்த்தும் வரவேண்டும். இவ்வாறு ஆதிகாலந்தொட்டே வழங்கிவருகின்ற வைத்தியமுறையை நமது தேசத்தார் இன்னமும்விடாது கையாடிவருகிறார்கள்.

ஷேக்ஸ்பியர் மகாகவிசெய்த 'வனிதபுர வர்த்தகன்' எனும்

## நாடகம்.

11-ம் பக்கத்தொடர்ச்சி.

இத்தருணத்தில் பாசேனன், உலோரஞ்சன், கிரசேனன் இவர்கள்வர

ஸாலேனன். மருவுமெம் பந்துவாம்நம் பாசேனன் வருதல்பாரீர்
உரிமையாய் கிரசேனர், உலோரஞ்சர் தாமும்வந்தார்
பரிபுமெம் களிலுமன்னோர் பண்புறு துணைவரன்றோ
வருகிறோ மையநாங்கள் வந்தன முமக்கிப்போது.

ஸாலரீன. என்னினுஞ் சிறந்த விழியநற் றோழர்
வந்திலர் தடுத்தார், வாராதவ ரிருந்தால்
உம்மனக் களிக்கு றச்செனுழிந் திலன்யானே.

அன்டோ. நல்லதும் நன்மை நான்தனி மதிப்பேன்
உன்னதோர் பணிதான் உமையய விழுத்த
அற்றைத் தழுவ லுக்கிறீர் அறிவேன்.

ஸாலரீ. சுதினம்,—வாருங்களைய மகாப்பிரபுக்களே.

பாசே. இருவருஞ் சகோதர கனவான்களே! எப்போது நாம் குலாவிச்சிரிப்பது? எபபோது சொல்லுங்களேன். வரவரக் காணப் பஞ்சமாய்ப்போகிறீர்களே! போகத் தான்வேண்டுமோ?

ஸாலரீ. சாவகாசமாய்த் தங்களைக் காண்கிறோம்.

(ஸாலேனன், ஸாலரீனன் இருவரும்போக)

உலோரஞ்சன். ஐயா பாஸேனரே! அன்டோனியனைக்கண்டீரே! இனி நாங்களிருவரும் விடைபெற்றுக்கொள்ளுகிறோம்: மத்தியானம் போஜனவேளைக்கு நாம் சந்திக்குமிடம் தெரியுமே?

பாசே. தப்பமாட்டேன்.

கிரசேனன். அன்டோனியப்பிரபுவே! உம்முடம்பைப்பார்க்கக் கூடவில்லையே. இவ்வுலகசிந்தை உமக்கு மெத்தவிருப்பதாய்க்காண்கிறது. அதிக கவலையுடன் அதைத்தேடுவோர் அதைப்பெறப்பார்ப்பதேயன்றி அதை அடையமாட்டார்களே. உள்ளபடியையா! இதென்ன இப்படி உருமாறிப் போனீர். விசனமாயிருக்கிறதே!

அன்டோ: ஐயா கிரசேனரே! காசினிந்த வுலகத்தையுலகமென்னவே மதித்திருக்கிறேன். இதுவொரு நாடகசாலை: இங்கு பிரதியொருவனுந் தன் ஆட்டமாடித் தீரவேண்டும். அதில் என்னுடையதோ சோகரஸமுள்ளது.

கிரசேனன். ஆனு லென்பாற் கழுதைய மாகுக
பழுத்திரை யேற்றும் மகிழ்ந்துநான் சிரிப்பேன்
சாராக் களிய இருதய குடிப்பேன்
சிந்தனைக் கிலாமற் றேம்பிக் கதறிச்



சில்லிட் டிதயம் விறைத்திடச் செய்யேன்
உடம்பினி லுதிரம் உட்டிணித் திருக்கச்
சலவைக் கல்லிற் சமைத்ததன் பாட்டன்
உருவம் போல வுயிர்த்து முறங்கிக்
கடுகடு வென்று காமாலை கொண்டு
மனித னழிய வந்ததேன் அவதி?
அன்டோ னிய! நா னறைவதைக் கேளீர்
உம்மிடத் தெனக்கு முற்றபே ரன்பே
சொல்லவு மிதனைத் தூண்டுமென் மனதை
தரணியிற் சிலர்தாம் தங்குநீர்க் கேணிபோல்
தெளிவழி முகத்தில் திரைநுரை கம்மிப்
பார்ப்பவர் தம்மைப் பரிந்திவர் தாமும்
ஞானமும் மாட்சியும் நயத்தவ ரென்று
மதிக்க வேண்டி மனச்செருக் குடனே
"முக்கால முணரும் முனிவரன் யானே
என்வாய் திறக்க வெதிரொரு நாயும்
குரைக்க லாகா" தென்பது போல
மௌனம் போற்றி வாயது மூடி
இருப்பதற் காக ஈங்கிவர் நமக்கும்
ஞானிக ளென்றே நாட்டினிற் பேராம்
அன்டோ னியவெ னன்பரே கேளும்
உள்ளது சொல்வேனக் கள்ளர்தம் வாயைத்
திறப்பரே யானால் தின்செவி புதைத்துக்
கேட்பவர் அவ்வரைக் கிளர்மதி தேய்ந்த
மூட ரென்றே மும்முறை யுரைப்பார்
ஈங்கிதைப் பற்றி யினியொரு வேளை
பேசுவே னித்தப் பேதைதன் குழியாம்
ஜநமதிப் பென்னும் சிறுமீன் தன்னை
மனம்படு சிந்தைபாம் வல்லிரை பூண்ட
தூண்டி விட்டுத் துவளநீர் வேண்டாம்
நண்பலோ ரஞ்ச! நாமினிப் போவோம்
சிறிது வேலை சேமமுற் றிருப்பீர்
போஜனஞ் செய்த பின்புநா னடைந்து
துணிவுரை மற்றதுஞ் சொல்லிநான் முடிப்பேன்.

## பறவைகள்.

ஐந்துவர்க்கங்களின் தன்மையை அறிந்துகொள்வது மிக்க நலமுடையது. அவற்றுள் பறவைகளைப்பற்றியது அதிக இன்பந்தரத்தக்கது. அடர்ந்த காடுகளுக்குள்ளே சென்றால் அங்கே அளவற்ற ஜந்துக்களைக் காண்போமெனினும், பறவைகளைக் கண்டமாத்திரத்தில் நமக்கு மகிழ்ச்சியுண்டாவதியற்கை. இவ்வுலகில் பறவைகளின் இன்குரலைக் காதுகுளிரக்கேட்டு மகிழாதவரில்லை. ஆதிகாலந்தொட்டு மற்ற ஜந்துக்களெல்லாவற்றிலும் பறவைகளிடத்து மிக்க அன்புபாராட்டி வருகின்றோம். அடர்ந்தசோலைகளில் வெயில் கொஞ்சம் பட்டும் படாமலுமிருக்குமிடங்களில் அழகான நிறமுடைய பறவையினங்கள் அங்கே கொள்ளைகொள்ளையாகக் கிடைக்கின்ற தேனைக் களிக்கக்குடித்துவிட்டுக் கிளைகளிலே தத்திக்குதித்து விளையாடிச் செவிக்கமுதாகப் பாடுவதைக் கேட்கும்போதெல்லாம் நம்மிடத்துக் குடிகொண்டிருக்கின்ற எப்படிப்பட்ட துக்கமும் நம்மைவிட்டு விலகியோடும்.

சற்றே ஊன்றிப்பார்த்தால் மட்டுமே பறத்தற்பொருட்டுப் பறவைகள் விந்தையாகச் சிருஷ்டிக்கப்பட்டிருப்பது விளங்கும். ஒருவிதமான இராசாளி ஒருநாளில் 1350 மைல் தூரம்பறந்துசெல்லும். இவ்வுலகில் பேர்பெற்ற இச்சினிபஸ் என்னும் பந்தயக்குதிரை ஒரு நிமிஷத்தில் ஒருமைல்தூரமே காற்றாகப்பறந்தோடியது. இராசாளி ஒருமணிநேரத்தில் 150 மைல் தூரம் பறக்கும். சிட்டுக்குருவிகள் இங்கிலாந்திலிருந்து ஆப்பிரிக்கா, மொராக்கா முதலான நாடுகளுக்கு வந்து அவ்விடங்களிலே சிறிதுகாலமிருந்துவிட்டு மீண்டும் அவ்விடத்திற்குத் திரும்பிச் செல்லுகின்றன. மிருகஜாதியில் இத்தனைவேகமாகச் செல்லும் வல்லமையுடையது ஒன்றுமில்லை. பூமத்தியஆகர்ஷணசக்தியை அனுசரித்து அதன் அவயவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பறவையின் இறகு அமைந்திருப்பது விநோதமானது; அதுவலிமையிற் குன்றாமலும், பஞ்சிலும் இலகுவாயும், வேண்டும்போதெல்லாம் எளிதில் நீட்டவும் மடக்கவுமிருப்பதனால் அதன்பெருமை நன்றாகவிளங்கும். அதன் எலும்புக்கூடோ இதனிலும் அற்புதமானது; அதன் எலும்பினுள்ளே காற்று தாராளமாய் உலாவும்படி இடைவெளியுண்டு. பற



வை தன்சிறகுகளைத் தன்னிஷ்டப்படி அசைத்துக்கொள்ளும்படி அவை அதன்மார்போடு பொருந்தியிருக்கும் வில்கள் ஆச்சரியமாயிருக்கும். மிருகங்கள் தங்கள் கைகால்களை அசைக்கும்படி அவற்றின் வில்கள் முதுகின் முன்னும்பின்னுமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. மனிதர்க்குக் கை எப்படியோ அப்படியே பறவைகளுக்கு மூக்கு அவசியமானது. பறவையின்கழுத்து எவ்வளவுதான் குறுகியிருந்தாலும் அது தனக்கு வேண்டியபடியெல்லாம் தன் தலையைத் திருப்பிக்கொள்ளும். பறவையின் கால்கள் அதன் மார்பிலிருந்துவரும் நரம்புகளால் பலமாயிணைக்கப் பட்டிருக்கின்றமையால் கெட்டியாயிருக்கும்; கடைவாய்ப்பற்கள் வயிற்றோரமாயிருக்கும். தானியங்களை உண்ணுகின்ற பறவைகளுட் சில கற்களையு முண்பதுண்டு. அவற்றின் வயிற்றுக்குள்ளே யிருக்கின்ற கடைவாய்ப்பற்கள் சேர்ந்து அவை உண்ட தானியத்தை யரைத்துப் பொடியாக்கும். மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் குரல்வளை அடிநாக்கின் வேரோடு ஒட்டியிருக்கும்; பறவையின் குரல்வளையோவெனின், அதன்மார்போடு அது நன்றாய்ப்பறக்கும்படி அமைந்திருக்கும்.

பறவையின் கண் இவையெல்லாவற்றுள்ளும் விநோதமானது. அது தன் கண்ணின்பார்வையின் வலிமையால் இரை எவ்வளவுதூரத்திலிருந்தாலும் எளிதிற்கண்டுபிடிக்கும். அதன் முட்டைகள் அழகானவை; புள்ளிகளையுடைய முட்டைகள்தான் எப்பொழுதும் அதிகம். நெருப்புக்கோழியின் முட்டை மிகப்பெரிது.

நீரில்வாழும் பறவைகளுள் பெரும்பான்மையானவை தங்கள்முட்டைகளைக் கரையோரங்களிலே இடும். திருகுதலைக்குருவி தன்கூட்டைத் தன்னுருவிலும் முப்பதுமடங்கு பருமனுள்ளதாகக் கட்டி அதனுள்ளே மிருதுவான இறகு, ரோமமுதலியவற்றைப் பரப்பி மெத்தென்று வைத்திருக்கும். பறவைகளில் குயில் ஒன்று மட்டுமே மற்றப்பறவைகள் கட்டியிருக்குங் கூட்டிலே முட்டையிடும். அது இட்டமுட்டைகளை அந்தப்பறவைகள் அவயங்காத்துக் குஞ்சுபொரிக்கும். ஹார்ன்பில் என்னும் பறவை தன்பெட்டையினிடத்து மிக்க அன்புடையது; அதன் சேவல் கூடுகட்டித் தன்பெட்டையை அதனுள்ளே போகவிட்டு அது வெளியேவராதபடி அந்தக்கூட்டின் வாயிலில் மண்ணைவைத்து அடைத்து, உண

வை உள்ளேகொடுப்பதற்காகச் சிறிது துவாரமொன்றைமட்டும் வழியாகவிட்டிருக்கும்; பெண்பறவை தன்சேவல் தனக்குக்கொண்டுவந்து கொடுக்கும் இரையைத்தின்று உள்ளிருந்தபடியே முட்டைகளையிட்டு அடைகாத்துக் குஞ்சுபொரிக்கும். ஆண்குருவிகள் எந்நேரம்பார்த்தாலும் இரைக்காக அலைந்து அதிகவருத்தப்படுமாதலால் அதனால் சிலசமயம் வேளைகளில் இறந்துபோவதுமுண்டு.

பறவைக்குஞ்சுகளுள் பெரும்பான்மையானவை கோழிமுதலியவற்றைப்போல முட்டையிலின்று வெளியேவரும்போதே இறகுடையனவாயிருக்குமாதலால் அவைகள் இரையைப் பொறுக்கித் தின்னும். புறாமுதலியவற்றின் குஞ்சுகளுக்கு இறகுமுளைக்க நாட்செல்லுமாதலால் தாய்ப்பறவை வாடி வருந்தி அவற்றிற்கு இரையைக்கொண்டுவந்து ஊட்டிவளர்க்கும்; சிறிதுவேலைகளில் ஆணும்பெண்ணுமாய்த் தங்கள் வயிற்றிலுள்ள இரையை வெளியே கக்கிக்கொண்டுவந்து கொடுப்பதுமுண்டு. பறவைகள் எவ்வளவு சிறியனவாயிருந்தாலும் தங்கள் குஞ்சுகளைக் கொல்லவரு மவற்றோடு அஞ்சாது எதிர்த்துநிற்கும். பிராணிவர்க்கத்தினுள் பறவையொன்றுமட்டுந்தான் மனிதனைப்போலப் பேசும். அவ்வாறு பேசும்போது அதற்குத் தான்பேசுவதின் கருத்து இன்னதென்று தெரியாதிருந்தாலும் பேசுவதிலே அதிகமாகக் குற்றமிராது. இறகில்லாத பறவை எங்குமில்லை; இவ்வாறே மற்றெந்த ஜந்துவுக்காயினும் இறகில்லை. நன்றாய்ப் பறக்கத்தெரியாத கோழி முதலியனவற்றைப்போன்ற பறவைகளுஞ் சிலவுள.

பறவையின் இரத்தம் அதிக சூடுள்ளது. பறவைகளெல்லாம் பார்வைக்குச் சற்றேறக்குறைய ஒரே உருவமுடையனவாயிருந்தாலும், அவற்றுள் எத்தனையோவிதங்களுண்டு. பக்ஷிசாஸ்திரிகள் பறவைகளை அவைகள் ஆதியிலிருந்த நாடுகளை நோக்கி ஆறு பெரும்பிரிவுகளாக வகுத்திருக்கிறார்கள். குயில்களில் மாத்திரம் பத்துவகையுண்டு. இந்தியாவிலுள்ள பறவைகளுள் மயில் சிறப்புடையது. நியூகினியாதீவில் ஒருசாதியான பறவையின் இறகு மிகச்சிறந்திருப்பதால் அதற்குத் தெய்வலோகப் பறவையென்று பெயரிட்டிருக்கிறார்கள். ஆப்பிரிக்காவைச்சேர்ந்த கெனரி தீவிலுள்ள ஒரு சிறுகுருவி கர்ணாமிருதமாகப் பாடும். கிளிகள் நன்றாகப்பேசும்.



## கழுகும் நண்டும்.

வர்டன்பர்க்கில் மேயின்ஹார்ட் என்னுமூருக் கருகேயுள்ள காட்டிற்குள்ளே பெரிதான குளமொன்றுண்டு. அதிலுள்ள மீனைப்பிடிப்பதற்பொருட்டு நாலைந்து வருஷத்திற்கொருமுறை அதன் தண்ணீரையெல்லா மிறைப்பது வழக்கம். சென்றவருஷத்தில் அந்தக்குளத்து நீரையிறைத்து மீன்களைப்பிடிக்கையில், அவற்றோடு மிகவும் பெரியதோர் நண்டைக்கண்டு அதையும் பிடித்தார்கள். அந்த நண்டுடன்பிறந்தாற்போல அதன் முதுகில் ஓர் கழுகின் எலும்புக்கூடு அப்படியே முழுவதும் ஒட்டிக்கொண்டிருந்தது. அந்தக்கழுகின் கால்களின் நகங்கள் நண்டின்முதுகில் ஆழமாகப்பாய்ந்ததினால் கத்திகொண்டு அதைவெட்டிப் பிரித்தெடுக்கவேண்டியதாயிற்று. அந்த நண்டு நீரில் மிதந்தபோது அதைக்கண்ட அந்தக்கழுகு அதை உண்ணவேண்டுமென்ற ஆவலோடு அதன்மேலேபாய்ந்து அதனைத் தூக்கிக்கொண்டுபோகப் பார்க்கையில் அந்நண்டு அதனிலும் மிக்க வலிமையுடைதாயிருந்ததுபற்றி அது அக்கழுகைத் தண்ணீர்க்குள்ளே யிழுத்துக்கொண்டு போயிற்றென்றும், அந்தப்புண்ணெல்லாம் நாளடைவிலே நன்றாக ஆறிக் கழுகின் கங்காளம் அதனோடு சேர்ந்து அவ்வாறாயிற்றென்றுங் கண்டார்கள். இவ்வாறான விசித்திரங்கள் இவ்வுலகில் எத்தனையோவுள.

## இடவேறுபாடு.

இடவேறுபாட்டினால் மேன்மையும் கீழ்மையுமுண்டாகும். தரையில் மணலோடு மணலாய்க்கிடக்கும் மாணிக்கம் அரசனுடைய கிரீடத்தின்மேலேறிய வளவில் அநேகர்கண்டு ஆநந்திக்கும் அணியாகும். நீரில் மிக்கவல்லமையுள்ள முதலை நிலத்தில் வலிசிறிதுமின்றியிருக்கும். பிச்சைபுகுவோன் சொல்லும் வார்த்தையையே அரசன்சொல்ல அனைவரும் அடிபணிந்து கேட்பார்கள். காடுகளிலும் குன்றுகளிலும் காசுக்குதவாமல் குவிந்துகிடக்கும் கற்களே ஒழுங்கமைந்து ஒன்றுசேர்ந்து நாடுநகரங்களில் அற்புதமான மாடமாளிகைகளும் ஆலயங்களுமாகும்.

ஓரிடத்தில் நன்மைவிளைப்பது மற்றோரிடத்தில் தீமையை விளைக்கும். பலர்சேர்ந்து தூக்கத்தக்க கல்லொன்று மலைமீதிருப்பின், தொட்டமாத்திரத்தில் கீழுருண்டு சொல்லவொண்ணாத நாசத்தை விளைக்கும். நமது வீட்டுக்கூரைகளைக் கொளுத்தி நம்மைக் கொல்லும் நெருப்பே நமக்குண்டாகுங் குளிரைப்போக்கி உண்டிசமைக்கவுதவி நீராவியந்திரங்களையோட்டிப்பலவாறாகப்பயன்படும்.

இடபேதத்தினால் ஜநங்களுடைய உருவம் நடையுடைபாவனை முதலியனவெல்லாம் வேறுபடும். ஆப்பிரிக்காமுதலிய உஷ்ணதேசங்களில் வசிக்கும் ஜநங்கள் கறுத்தவர்களாயும், சோம்பலுடையவர்களாயும் ஆடையில்லாதவர்களாயுந் திரிகிறார்கள். ஐரோப்பாமுதலிய சீதளதேசங்களில் வசிப்பவரோவெனில் வெளுப்புநிறமுடையவர்களாயும், கம்பளம், தோல் முதலியனவற்றை யுடுப்பவர்களாயும், ஊனையுண்பவர்களாயு மிருக்கிறார்கள்.

ஓரிடத்தில் விலைபெற்றிருக்கின்றது மற்றோரிடத்தில் சீந்துவாரற்றிருக்கும். கம்மாளத்தெருவில் ஊசியைக்கொள்பவர் யார்?

கரடுமுரடான குன்றுகளும் தூரத்திலிருந்து பார்ப்பவர் கண்ணுக்கு மழமழவென் றிருப்பதுபோலத்தோன்றும். சந்திரன் பூமிக்குச் சமீபத்திலிருப்பதினால் அது அதனிலும் எத்தனையோ பெரிதான சூரியனுக்கொப்பாகும்.

உலகத்தில் ஒன்றுக்குதவாத மனிதனுமில்லை; மருந்துக்குதவாத மூலிகையுமில்லை. ஆனால், வேலைக்குத்தகுந்த புருஷனைத் தேர்ந்தெடுப்பதும், நோய்க்குத்தகுந்த மூலிகையைக் கண்டறிதலுந்தான் அரிதாகும். ஆதலினால் எந்தவஸ்துவானாலும் சரியான இடத்தில் வைக்கப்படின் அது நன்றாகப் பயன்படாமலிராது. சிறுதுரும்பும் பற்குத்த உதவும்.

வழிப்போக்கரை மடக்கியடித்து அவர் தனத்தைப் பறித்தும், கிராமங்களிலும் நகரங்களிலும் பகற்கொள்ளையாடியும் ஜீவிக்கும் நூற்றுக்கணக்கான திருடர்களைத் தன்னாணைக்குட்படுத்தும் அவர்கள்தலைவன் எத்தனை புத்திசாதுரியமுடையவனாயினும் ஸ்தான



வித்தியாஸத்தால் உலகத்தாரால் நிந்திக்கப்படுகிறான். அந்தக்கள்வர் தலைவனே சிறுவயதுமுதல் நன்னடக்கை நன்மார்க்கங்களில் நடந்துவருவானேயாயின் பிற்காலத்தில் உலகம் புகழத்தக்க ராணுவவீரனாகி அநேகதேசங்களை அரசாளினுமாளுவான். இந்துதேசத்தில் அங்கிலேய அரசாக்ஷியை நிலைநிறுத்திய க்ளைவ் பிரபு கம்பனி இலேகராயிருந்தபோது மனம்நொந்து தற்கொலைபுரியவும் யத்தனித்தாரல்லவா? நாற்பது வயதுவரையில் உழுதுபயிர்செய்து ஜீவித்துவந்த கிராம்வலு மன்றே பிறகுநேர்ந்த யுத்தத்தில் பிரசித்திபெற்று அரசனையும் கொலைபுரிந்து தாமே இங்கிலாந்து தேசத்துக் குடியரசுக்கு இரக்ஷகரானார்? ஒருவர் அநேக உபாத்தியாயர்களின்கீழ் பலகாலமோதியும் ஒன்றுந் தெரியாதிருந்து பின்பு திரிகோணமிதியைக் கற்று, கணிதசாஸ்திரத்தில் வல்லவராகிப் பல நூல்களை எழுதினார்.

சற்று யோசித்துப்பார்த்தால் அநேககாரியங்களில் நாம் வஸ்துக்களினுடைய இடபேதத்தைமாத்திரமே உண்டாக்குகிறோமென்று நன்றாகப் புலப்படும். இவ்வுலகிலுள்ள பதார்த்தங்களில் இருக்கிறதை அழித்துவிடவாயினும் அல்லது புதிதாகவொன்றை உண்டாக்கவாயினும் நம்மாலாகாது. நாம் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே எரிந்துவிடுகிற மெழுகுதிரியானது அழிந்துபோவதில்லை. அது எரியும்போது அதிலுள்ள பொருள்களெல்லாம் அவற்றிற்கு விதித்தமுறைப்படி வேறுவேறாகப்பிரிந்து சூக்ஷ்மமாய் ஆகாயத்திற் கலந்துபோகின்றனவே யன்றி வேறில்லை.

குயவன் எத்தனைதான் வல்லவனாயிருந்தாலும் மண்ணில்லாமல் குடத்தை வனையமுயல்வது கூடுமோ? மண்ணிருந்தால்தான் அது இருக்குமட்டும் குடத்தைச்செய்யலாம். நாம் ஒருருவமுள்ள வஸ்துவை மற்றோருருவமுள்ளதாகவும், ஓரிடத்திலுள்ள வஸ்துவை மற்றோரிடத்தில் இருக்கவுஞ் செய்யமட்டோம் கூடுமேயல்லாது வஸ்துக்களுக்கு இயல்பாயில்லாத குணங்களை அவற்றிற்கு உண்டுபண்ண நம்மாலாகாது. ஒன்றுக்கும் உபயோகமில்லாமற்கிடக்கும் வஸ்துவை அதற்குரிய இடத்தில்வைத்து அதை உபயோகமுள்ளதாகச் செய்வதற்கு மாத்திரமே நம்மாலாகும். கூடையிலுள்ள வித்தையெடுத்து நிலத்தில் விதைத்தால் அது முளைத்து வளர்ந்து

பழந்தருமரமாகும். ஆறுமுதலான ஜலாசயங்களிலிருக்கும் நீரைக் கால்வாய்கள் வழியாக விளையும் வயல்களில் சேர்ப்பித்தலால் நாம் இடவேறுபாட்டைமட்டுமே உண்டாக்குகிறோம்.

புகைவண்டிகளும் புகைக்கப்பல்களும் நாம்விரும்பும் இடவேறுபாட்டைச் சுலபமாக்கி நமக்குச் சுகத்தை யளிக்கின்றன. வாணிபமும் இவ்வாறே விரும்பியபொருளை விரும்பியவிடத்திற் சேர்த்து அதிகலாபத்திற்கும் சுகத்திற்கும் காரணமாகிறது. நூலாசிரியர்கள் தங்கள் மனோபாவங்களை அனைவருக்கும் அறிவிப்பதினால் இடபேதத்தைமாத்திரமே உண்டாக்குகிறார்கள். ஆதலினால் இவ்வுலகில் இடவேறுபாடு பலவாறாக ஜனங்களுக்கு நன்மை தீமைகளை விளைத்து அதைப்பற்றி யோசிக்கும் புத்திமான்களுக்கு, ஒருநாளும் அறியப்படாததும், அறியக்கூடாததுமான ஈச்வரசக்தியை நன்றாக வெளியிடுகிறது.

## ஒருவன் நெடுங்காலம் வாழ்ந்திருந்தது.

துர்க்கிதேசத்தில் ஸாபத் என்னும் நகரத்துக்குப் பதினைந்து மைல்தூரத்திலுள்ள வ்றாடத்தா என்னுங்கிராமத்தில் ஹாட்ஜிலாலமான் என்னுமொருவன் 132-வது வயதில் 1889-ம் ஞூலில் இறந்தான். அவனுக்கு மனைவிமார் ஏழுபேர். அவர்களெல்லோரும் அவனுக்குமுன்பே இறந்துபோனார்கள். அவனுக்குப் பிள்ளைகள் 60 பேரும், பெண்கள் 9 பேரும் பிறந்தார்கள். அவன்மக்கள் 69 பேரும் தகப்பன் உயிரோடிருக்கும்போதே பரலோகஞ்சென்றார்கள். கடைசிமனைவியை அவன் விவாகஞ்செய்துகொண்டபோது அவனுக்கு பிராயம் 98. அந்தக் கடைசிமனைவியிடத்தில் அவனுக்கு மூன்று புத்திரர்கள் பிறந்தார்கள். அவன் மரிப்பதற்குச் சற்றுமுன்னே இன்னொருத்தியை மணம்புரிய நினைத்தான். ஆயினும மணஞ்செய்துகொள்ளும் செலவுக்கு வேண்டியபணம் அவனுக்கு அகப்படாததனால் அவனுக்கு அப்படிச்செய்துகொள்ள வாய்க்காமல் போய்விட்டது. அவனுள்ளகாலமெல்லாம் உழுதுபயிரிட்டு, வாற்கோதுமை, ரொட்டி, அவரை துவரைமுதலிய பயறுவர்க்கங்களைத் தவிர்த்து வேறொன்றையும் அவன் உண்டதில்லை. தாகத்துக்குத் தண்



ணீரைமட்டுமே அவன்குடிப்பது வழக்கம். அவன் வருஷத்துக்கு இரண்டுநாள் துருக்கருக்குள்ளே வழங்கிவருகிற பெய்ராம் பண்டிகையின்போதுமட்டுந்தான் ஊனையுண்பான். அவன் உடுக்குமுடை இரண்டு நார்ச்சட்டைகளும் காற்சட்டைகளுமே. கோரைப்பாயில் தான் அவன் படுப்பதுவழக்கம். ஒருபையில் பதரையடைத்து அதைத் தலையணையாக வைத்திருப்பான். அவன் இறப்பதற்குமுன் நாலு நாள்மட்டும் நோய்கொண்டிருந்தானேயன்றி அதற்குமுன் எப்பொழுதாயினும் பிணியால் வருந்தியதில்லை.

## பயம்.

வரப்போகிற ஆபத்தை எண்ணித்தான் ஒருவனுக்குப் பயமுண்டாகிறது. தான் முன்பட்ட கஷ்டங்களை நினைக்கையில் ஒருவனது மனம் வியாகுலப்படுமெனினும் அவனுக்குப் பயமுண்டாகிறதில்லை. இனிவரப்போகிற துக்கத்தை நினைத்துத்தான் ஒருவனுக்கு பயம் உண்டாகுமேயல்லாது முன்னே தான்பட்ட துக்கத்தினாலாவது இப்பொழுது படுகிற துக்கத்தினாலாவது ஒருவனுக்கு பயம் உண்டாகமாட்டாது.

சிலவேளைகளில், ஒருவன் வரப்போகிறதென்றெண்ணும் துன்பம் அவசியம் ஸம்பவிப்பதாயும், அதைப்போக்க வேறுவழியொன்றுமில்லாததாயும் இருக்கும். இந்தமாதிரியான துன்பங்கள் அவற்றை அநுபவிக்கப்போகிறவனுடைய பயத்தை அதிகப்படுத்துகின்றனவென்றாலும் அவசியமாக அவை வந்துதான்தீருமென்கிற எண்ணத்தை அவன் மனதில் நன்றாக உண்டாக்கிவிடுகின்றமையால் அவை வருகையில் அவற்றைப் பொறுக்கும் வழியை அவனைத்தேடச் செய்கின்றன.

வரப்போகிறதென்று ஒருவன் அச்சமுறுகிற துன்பம் சம்பவிப்பதே ஸந்தேகமாயுள்ளதாய் இருப்பதுமுண்டு. இப்படியிருந்தால் அத்துன்பம் வரும் அல்லது வராது என்ற நிச்சயமில்லாதிருப்பதால் அச்சமுற்றவன் மனம் பம்பிச் சிதறிப் பரிதவிக்கும்.

வருமென்று பயப்படும் துன்பம் புதிதானதாயும், இதற்கு முன்னொருவரும் கேட்டிராததாயுமிருந்தால் பயம் மிகவும் அதிகமாகும். துன்பம் முன்னே அனுபவித்ததாயிருந்தால் அதன்கொடுமை அவ்வளவாகத் தோன்றாது.

ஒருவனுக்கு மனதில் பயமுண்டானால் அதுகாரணம்பற்றி அவன் தேகம் வருத்தமுறும். அவனுடைய உதடு படபடவென்று துடிக்கும்; தேகமெல்லாம் நடுநடுங்கும்; இவ்விரண்டு அடையாளங்களால் அவனுடைய தேகத்திலுள்ள தசைநார்கள் அவனுக்குப் பீதியுண்டானகாரணத்தால் நிலைகுலைகின்றனவென்பது நன்கு விளங்குகிறது. அன்றியும், காற்றை உள்ளே போகச்செய்து அதை உடனே வெளியே கொண்டுவரும் சுவாசப்பை முதலியனவும், இரத்தாசயமும், உண்ணும் ஆகாரத்தை ஜீர்ணம் செய்யும் இரைப்பை குடல் முதலியனவும் அப்பொழுது தாக்கப்படுகின்றன; மூச்சுவெளியே வரும் வேகம் மட்டுப்படும்; இரத்தவோட்டம் அவ்வளவு நன்றாக இராது; வாயில் எச்சில் ஊறுவது நின்றுவிடும்; குடல்கலங்கும்.

ஒருவன் அச்சங்கொண்டிருக்கையில் அவனுண்ணும் உணவு ஜீர்ணமாகாதென்பதை மனதிற்கொண்டுதான் நமது தேசத்தில் பலபாகங்களில் குற்றவாளிகளின்மேற் சாட்டப்படும் குற்றங்களை அவர்கள் செய்தார்களாவென்று பரிசோதித்தற்பொருட்டு அதிகாரிகள் முன்பாக அவர்களை ஒருகவளம் அரிசியைக் கடித்து தின்னச் செய்யும் வழக்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்று சொல்லலாம். போஜனஞ் செய்யும்போது நாம் உண்ணும் ஒவ்வொரு கவளமும் நமது பற்களில் நன்றாக அரைபட்டு நமது வாயிலூறும் எச்சிலோடு கலந்து அப்புறந்தான் வயிற்றுக்குள்ளே போகும். குற்றம் செய்தவர்கள் தாங்கள் செய்தகுற்றம் வெளிக்குவந்துவிடப் போகிறதேயென்ற அச்சம் மேற்கொண்டிருப்பதால் அவர்கள் நாவில் எச்சில் ஊறாது. ஆதலினால் அந்த அரிசிக்கவளம் நன்றாய் நனைகிறதில்லை.

இந்தவிதமாகவே திருடன் பயங்கொண்டிருக்கையில் தன்னை மறந்து தானே திருடனென்று காட்டிக்கொடுப்பதற்கு உதாரண



மாக வாஸ்தவமாக நடந்த இரண்டு கதைகளை இங்கே யெடுத்துச் சொல்லுவோம்.

ஒருகாலத்தில் ஒருவனது பண்டங்கள் காணாமற்போய்விட அவன் தன் அயலாரையெல்லாம் ஓரிடத்திற் கூட்டிவைத்து அவர்கள் முன்பாக ஓரடிநீளமுள்ள ஒரு தடியைக்கொண்டுவந்து அந்தத்தடியைத் தன் உடைமையைத் திருடினவன் தொட்டால் அது உடனே நீளுமென்று சொல்லி, அவர்களெல்லோரையும் ஒவ்வொருவராக அதைக் கையில் எடுக்கச்செய்தான். திருடினவன் அந்தத் தடியையெடுத்துத் தான்பிடிக்கையில் உண்மையாகவே அது நீண்டுவிட்டதென்று பிரமைகொண்டு அதைச் சிறிதாக்குவதற்காக அதின் ஒருகண்டத்தைத் துண்டிக்கமுயல அங்குள்ளார் அவன்தான் திருடினவனென்று கண்டுகொண்டார்கள்.

ஒருபிரபுவின் வயலில் தானியம் திருட்டுப்போய்க்கொண்டேயிருந்தது. அவர் தமது ஆட்களையெல்லாம் வரவழைத்து, அவர்களைக் களத்திலிருந்த இறகுமுதலிய குப்பைகளைப் பொறுக்கச்சொன்னார். அவர் தமது கழனியில் தானியம் திருடினவனுடைய தலைமயிரில் அவ்விறகுகள் அதிகமாக ஒட்டிக்கொள்ளுமென்று சொல்லியிருந்தமையால் அவர்களுள் திருடினவன் அடிக்கடி தன்தலையைத் தடவிப் பார்த்துக்கொண்டிருந்தான். இதைக் கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்த அந்தப் பிரபு அவன்தான் திருடினவன் என்று கண்டுகொண்டார்.

மனிதர்க்குண்டாவதுபோல மற்ற ஜந்துக்களுக்கும் பயமுண்டாவதுண்டு. வண்டிக்காரன் சாட்டையை ஓங்கினால் அடிவிழுமேயென்கிற பயத்தினால் மாடு ஓடும். பிராணிகளுக்கும் பயமுண்டாவதுண்டென்பது அவற்றிற்கு ஒருதீங்கும் நினையாத சாதுக்களான அயலார் அவற்றின் கிட்டவந்தாலும், ஏதேனும் சத்தம் அவற்றின் காதிற்பட்டாலும் அவற்றிற்கு அச்சமுண்டாவதனால் நன்றாகத் தெரியவரும். குழந்தைகளுக்கு இயற்கையாய்ப் பயமிருக்கும். எப்பொழுதும் தங்களோடு பழகுகிறவர்களைத் தவிர வேற்றுமுகமானபேர் யாரையேனும் கண்டால் அவை அஞ்சிக்கொண்டு அழ ஆரம்பிக்கும்.

நாம் நமது நண்பர்கள் பந்துக்கள் முதலானவர்களுடைய க்ஷேமத்தைப்பற்றிப் படும் கவலையில், அவர்களுக்குத் துன்பம் நேரிடுமோ என்ற பயமுங் கலந்திருக்கிறது. இந்தப் பயத்தை ஆசைப் பயமென்று சொல்லலாம்.

மரணம் வருமேயென்று ஒருவன் படும் பயத்தில், உலகவின்பங்களெல்லாவற்றையும் விட்டுவிட்டுப் போகவேண்டுமே யென்பதொன்று, மறுமையில் இம்மையிற்செய்த தீச்செயல்களுக்காக என்னதண்டனைவிதிக்கப்படுமோ என்பதொன்று ஆகிய இவ்விரண்டும் முக்கியமாயுள்ளன. யௌவனப் பிராயத்தவர்களுக்கு மரணம் வருவதாயிருந்தால் அவர்கள் படும்பயம் அதிகமாயிருக்கும்; தூக்கிலே போடப்படும்படியாகத் தீர்ப்புசெய்யப்பட்ட குற்றவாளிசிறுவனாயிருந்தால் அண்டருமதிர அவன் அரற்றுவதைக்கண்டு பட்டமரமும் பாலாயுருகும். மறுமையைப் பற்றிய பயம், மதக்கோட்பாடுகளில் பேதங்களனேகமிருப்பதாலும், மறுமையென்பதே இல்லையெனச் சாதிக்கும் நாஸ்திகரும் இப்புவியிலுளராதலாலும், வெவ்வேறு கோட்பாடுடையோர்களுக்கு வெவ்வேறு விதமாகவும், சிலருக்குச் சற்றேறுமில்லாமலும் இருக்கும்.

தேகத்தில் பலமிருந்தால் தைரியங் குடிகொண்டிருக்கும்; பயம் அதிகமாக உண்டாகாது. சுகதுக்கங்களை அதிகமாகப் பாராட்டாதிருந்தால் பயமுண்டாகாது. பயமுண்டாவதற்கு அறியாமையே காரணமாகிறதாதலால் கல்வி பயத்தைப்போக்கும்.

## தென்னைக்கு எரு.

ஐரோப்பா அமெரிக்கா கண்டங்களிலுள்ளவர்களுக்கு விவசாயஞ்செய்யத் தெரிந்திருப்பதுபோல நம்மவர்களுக்குத் தெரியாதென்று சொல்லுவதுண்டல்லவா? ஆனால், சிலவிஷயங்களிலே தவிர முக்கியமான பலவிஷயங்களில் அவர்களுக்குத்தெரிந்த அளவு நம்மவர்க்குந் தெரியுமென்றே சொல்லலாம். தென்னமரத்தை வைத்து வளர்ப்பதை ஒருதாரணமாக வைத்துக்கொள்ளுவோம். நம்மவர்களுக்கு தென்னையை எப்படிவைப்பதென்றும், எவ்வாறு அதை வளர்ப்பதென்றும் தெரியாதா? நமதுதேசம் வெகு விஸ்



தாரமானது. ஒரு ஜில்லாவில் விவசாயத்தைப் பரிஷ்காரமாக நடத்தும்வழிகள் மற்றொரு ஜில்லாவிலுள்ளவர்களுக்குத் தெரிகிறதில்லை. சென்னபட்டணம் முதலான இடங்களில் தென்னை எத்தனைவயது சென்ற மரமாயிருந்தாலும் அதைச்சுற்றி அரை அடி ஆழம் பாத்தி கட்டி வேரில் மண்ணை அணைத்து அடிக்கடி தண்ணீர் பாய்ச்சுகிறார்கள். இதன் குணம், அந்தமரத்திலிருந்து எடுக்கும்கள்ளினாலே நன்றாய்விளங்கும். பட்டணத்தில் ஒருமரத்திலின்றும் இறங்குகிற கள் தஞ்சாவூர் ஜில்லாவில் சாதாரணமாய்ச் செழிப்பான நிலத்திலிருக்குந் தென்னையில் உண்டாகிற கள்ளுக்கு இரண்டுமடங்கு இருக்கிறதாம். ஊன்றிப்பார்த்தால் தஞ்சாவூர் ஜில்லாவிலிருக்கும் தென்னமரங்களின் செழிப்புக்குன்றுவது 2 அல்லது 4 வயது சென்றபின்பு அவற்றிற்குத் தண்ணீர் வார்க்காதிருப்பதினால் உண்டாகிறதெனத் தெரியவருகிறது. ஏன் தென் தேசத்தாரும் பட்டணம் முதலான இடங்களில் செய்வதுபோலவே தாங்களும் செய்து தங்கள்தோப்பிலிருந்து அதிகமான லாபம் பெறக்கூடாது? ஆனால் இதுவிஷயமாய்த் தென்தேசத்தார் கண்டுபிடித்திருக்கும் சிறந்த யுக்தியொன்று பட்டணம், செங்கற்பட்டு முதலான சீமைகளில் அநுஷ்டிக்கப்படுவதைக் காணோம். அதாவது, தென்தேசங்களில் மழைபெய்வதற்கு முன்னே மண்வெட்டிகளைக்கொண்டு தோட்டங்களை நன்றாய்க்கொத்தி கிருஷி செய்கிறார்கள். இப்படிச்செய்வதினால் பழையவேர்களெல்லாம் அறுபட்டு புதுவேர்கள் இறங்குவது இலகுவாகச் செய்யப்படுகிறதுந் தவிர தோப்பில்பெய்யும் மழைஜலம் அதிலேதானே தங்கியிருக்கும். மேலும், கீழ்நாடுகளில் பத்துப் பன்னிரண்டு வருஷங்கள்தொட்டு நாகதாளி யென்னும் சப்பாத்திக்கள்ளியைத் தென்னமரத்தின் வேருக்கு எருவாகவைத்து வருகிறார்கள். இது நன்றாக பலிக்கக் கண்டு இப்பொழுது எங்கேபார்த்தாலும் கீழ்நாடுகளில் இதையே சிறந்த எருவாக உபயோகிக்கத் தொடங்குகிறார்கள். இந்தக் கள்ளியை உபயோகிப்பது முதிர்ந்தமரத்திற்கு மாத்திரமல்ல; பிள்ளையைப் பாவும்பொழுதே குழியை ஆறு அல்லது ஏழடி ஆழம்தோண்டி, மூன்று அல்லது நான்கு அடிக்கு இந்த நாகதாளியை வெட்டிப்போட்டு நிரப்பி அதின்மேல் மண்ணையும் மணலையுங்கலந்து எருவிட்டுப்பிள்ளையை வைப்பார்கள். கீழேகிடக்கும் கள்ளி தென்னம்பிள்ளையின் வேர் சலசலவென்று இறங்குவதற்கு இடங்கொடு

க்கிறது; அந்தக்கள்ளி மடியமடிய அவ்வேர்களுக்கு எருவாகி அவற்றிற்கு நல்ல உணவுமாகிறது. இது கீழ்நிலத்தின் சூட்டையும் வேர்களையும் எட்டவொட்டுகிறதில்லை. இவ்விரண்டு முறைகளும் தென்தேசத்தார்களுக்கு நன்றாய்த்தெரியாது. பிள்ளைவைக்கும்போது அவர்களும் இப்படியே செய்வார்களாயின் அவர்களுக்கும் அதிகலாபம் கிடைக்கும். முதிர்ந்தமரங்களுக்கும் அவர்கள் இவ்வாறே இக்கள்ளியை உணவாக உதவிப் பாத்திகளைக் கட்டி ஒவ்வொருமரதிற்கும் தண்ணீர் பாய்ச்சுவார்களேயாயின் அவை தாமுண்டநீரை தலையாலே தாம்தரும்.

மேற்குதேசத்தில் தென்னந்தோப்பில் கீழேவீழும் மட்டைகள், பாளைகள், கீழேமுளைக்கும் செடிகள் இவற்றையெல்லாம் அங்கங்கே குவியல் குவியல்களாகக் குவித்து அவற்றிற்குள்ளே நெருப்பைவைத்துப் புகைமூட்டுவார்கள்; அதினின்றெழும் புகை மரத்தின் குலைகளைச்சூழ்ந்து அவற்றை அழித்துவிடும் ஈ, கொசு முதலான சிறுபூச்சிகளைத் தூரத்திவிடும். குலைகளிலே இப்புகை ஏறுவதால் பாளையிலுள்ள பூக்கள் உதிராவாம். குரும்பை அதிகமாக வைக்கத்தலைப்பட்டு அதிவளவாகவே காயும் அதிகமாகிறது. இவ்வண்ணம் புகை ஊட்டப்படாத அடுத்த தோட்டங்களுக்குச் சென்றால் குலைகளில் காய்கள் அதிகமாகக்குறையும். இத்தேசத்தில் தென்னந்தோப்புகள் பெரும்பான்மையாக வீட்டுக்கு அருகே இருக்கின்றனவாதலால் எல்லாரும் தங்கள்வீட்டுச் சமையலறைக்கு அடுத்தமரத்தில் காய்க்கும் குலைகளையும், அதற்கு இரண்டுகோலுக்கு அடுத்து அவர்கள் புழக்கடையில் வளருகிற தெங்கின் குலைகளையும் வெட்டி எண்ணினால் இதின் உண்மைபுலப்படும். நாம் புகை ஊட்டுவதின் குணத்தை நேரில்கண்டு நிச்சயமாக அறிந்திருப்பதாலும், அது மேற்குதேசத்தில் அனுஷ்டிக்கப்படுவதைக் கண்டிருப்பதாலும் இதை இவ்வாறு எழுதலாயிற்று. வேறொரு எருவை மேற்குதேசத்தில் இளஞ்செடிக்கு வைக்கிறார்கள். தென்னம்பிள்ளையைவைத்து இரண்டுமூன்று வருஷங்களானபின்பு அதன்கீழே கருவாட்டைப்புதைத்துத் தண்ணீர் விடுகிறார்கள். இந்த எருவின்பலத்தால் செடி வெகுசீக்கிரத்தில் பலனைக்கொடுக்கிறது.

'ஏரினு நன்றா லெருவிடுதல் கட்டபி
னீரினு நன்றதன் காப்பு.'



## நீரில் முழுகிப்போனவர்களைப் பிழைப்பித்தல்.

தண்ணீரில் அமிழ்ந்தவனை எடுத்தவுடனே தரையிலே படுக்கவைத்து, அவனுடைய உடம்பில் காற்று நன்றாக வீசும்படி செய்யவேண்டும். அதன்பின்பு அவனுடைய உதடுகளைத் துடைத்து, வாயைத்திறந்து அதனுள் மண் சேறு ஏதாவது இருந்தால் அதைத் துடைத்து எடுத்துவிடவேண்டும். பின்பு அவனை மெதுவாகக் குப்புறப்புரட்டி அவனுடைய கைகளில் ஒன்றை அவன் நெற்றியின்கீழேவைத்துப் படுக்கவிடவேண்டும். இப்படிச் செய்தால், உள்ளேசென்ற தண்ணீர் வாயிலிருந்து வெளிப்படும்; உள்ளே இழுத்துக்கொண்டிருந்த நாக்கு முன்னுக்குவரும்; அப்புறம் காற்றைத் தாராளமாக உட்கொள்ள இடமுண்டாகும்.

அவனுக்கு சுவாசமுண்டானால் சற்றுநேரம்வரையில் சும்மாயிருந்து சாக்கிரதையாய்ப் பார்க்கவேண்டும். சுவாசமுண்டாகாவிட்டாலும், அல்லது இரண்டொருதரம் சுவாசம்வந்து நின்றுபோனாலும் உடனே தாமதியாமல் அவனை ஒருபக்கமாக ஒருக்களித்துப் புரட்டி மூக்குத்தூளையாவது நவசாரத்தையும் சுண்ணாம்பையும் சேர்த்தாவது அவன்மூக்கில் மோரக்கொடுக்கவேண்டும். இல்லாவிடில் ஒரு இறகினாலே அவன்தொண்டையில் உண்ணாக்கண்டை தடவி அவனுக்குக் கூச்சத்தை உண்டாக்கவேண்டும். இல்லாவிடில் துணியினாலே முகத்தைப் பரபரப்பாகத் துடைத்ததன்பின் தண்ணீரை அடிக்கவேண்டும்.

இவற்றால் குணமுண்டாகாவிட்டால் தண்ணீரில் விழுந்தவனுடைய நாசித்துவாரங்களிரண்டையும் அடைத்துக்கொண்டு அவன் வாயினுள் மற்றொருத்தன் தன்வாயை வைத்துப் பலமாக ஊதி அப்புறம் இரண்டு விலாப்பக்கங்களிலும் கையைவைத்து உள்ளே ஊதியகாற்று வெளிப்படும்படியாய் அமிழ்த்தவேண்டும். இப்படிச்செய்வதை ஒன்று இரண்டு தரத்தோடு நிறுத்திவிடாமல் உடம்பில் உஷ்ணம் இருக்கிறவரையிலும் கைகால் உடம்பு விறைத்துப்போகிறவரையிலும் இடைவிடாது செய்துவரவேண்டும். மற்றொருவன் ஊதும் காற்று வீண்போகாமல் சுவாசப்பைக்குள்ளே போகச் செய்வதற்காக முழுகினவன் குரள்வளையில் மெதுவாய்

கைவிரல்களை அமிழ்த்திக்கொண்டு ஊதவேண்டும். மிஞ்சிப்போவதற்கு முன்னமேயே இந்தப்படி ஜாக்கிரதையாய்ச் செய்தால் சுவாசம் உண்டாகிப் பிராணன் தக்கும்.

சுவாசமுண்டாகத் தொடங்கியபின்பு வயிற்றுக்கும் அக்குள்களுக்கும் உள்ளங்கால்களுக்கும் சூடான கம்பிளியினாலாவது புட்டிகளில் வெந்நீர்வார்த்து அந்தப்புட்டிகளிலாவது செங்கல்களைச் சுட்டாவது ஒத்தடம் போடவேண்டும். கைகால் முதலியனவற்றைக் கம்பளத்தினாலாவது கைக்குட்டையினாலாவது அடியிலிருந்து மேல்நோக்கித் தேய்த்துக் கைகால்களை முறுக்கிப் பிசையவேண்டும்.

முழுகினவனைச் சுற்றி ஜனங்கள் ஒருபொழுதும் சூழ்ந்திருக்கக்கூடாது. தண்ணீரில் ஒருமணிநேரத்துக்கதிகமாய் விழுந்துகிடவாமலிருந்தால் முற்கூறியபடி சிறிதுநேரம் விடாது செய்வோமாயின் முழுகினவன் செத்தவனைப்போலக் கிடப்பினும் பிழைப்பான். முழுகிப்போனவன் முனகுவதினாலும் அவன் வருத்தப்பட்டுப் பெருமூச்சு எறிவதனாலும் அவன் தன்தேகத்தை முறுக்குவதினாலும் அவனது இருதயஸ்தானத்தில் மெள்ளமெள்ள நாது அடிக்கத் தொடங்குவதினாலும் உயிர்திரும்பி வருகிறதென்று அறிந்துகொள்ளலாம். உயிர்வந்தபின்பு சூடான ஒத்தடங்களை விடாமலிட்டுச் சற்றே உஷ்ணமான சுக்குக் கஷாயத்தை நோயாளியின் தொண்டையினுள்ளே விடவேண்டும். சாராயம் கையிலிருந்தால் அதில் கொஞ்சம் எடுத்து அதை அதற்கு இரண்டுபங்கு வெந்நீரோடு கலந்து அதை அவனைக் குடிக்கச்செய்யவேண்டும். ஸ்மரணைவந்து சற்றுநேரமானபின்பு ஆரோருட்மாவின் கஞ்சியையாவது, கெட்டியான அரிசிக்கஞ்சியையாவது சூட்டுடன்கொடுத்து தேகத்தை அமைதியாயும் சூடாயும் வைத்திருக்கவேண்டும்.

தெளிந்தபின் காய்ச்சல்வந்தாலும் நினைவு தப்பியிருந்தாலும் பிதற்றினாலும் நெற்றிப் பொட்டுகளில் 6 அட்டைகளையாயினும் அல்லது 8 அட்டைகளையாயினுங் கடிக்கவிட்டுப் பேதிக்கும் கொடுக்கலாமென்று ஒரு வைத்தியர் சொல்லுகிறார். ஆனால் இந்தச்சிகிச்சையை வைத்தியர்களைக்கொண்டே செய்விப்பது நலம்.

---

JANANANDINI.

ஜநாநந்திநி.

புஸ்த. 1.] மார்ச்சுமீ 1891. [இல. 3.

## ஆகாயகமன சாஸ்திராபிவிருத்தி.

ஆகாயகமனசாஸ்திரம் இக்காலத்தில் நன்றாக அபிவிருத்தியாகி வருகின்றது. நாம் கடலிலே மரக்கலங்களையும், நிலத்திலே வண்டிகளையும் எப்படி நடத்துகின்றோமோ அப்படியே ஆகாயத்தில் புகைக்கூண்டுகளை நடத்தலாம். இந்த ஆச்சரியத்தைப் பிரத்தியக்ஷமாகக் கண்டால்மட்டுமே இதன் உண்மை நன்றாகப் புலப்படும். ஜலத்துக்குள்ளே ஏதேனுமொரு பொருளை அமுழ்த்தினால் அச்சமயம் ஜலத்தின் கனத்திலுங் குறைவுள்ளதாயிருந்தால் அது மேலே மிதக்கும்; இல்லாவிடில் அதுவும் ஜலத்திலே அமுழ்ந்திய பொருளின் அதனிலும் பல மடங்கு கனமில்லாதனவாயிருந்தால் அதிவேகமாக ஜலத்தைத் தள்ளிக்கொண்டு மேலேயெழும்பும். இந்த விதிப்படியே தண்ணீரிலும்பல மடங்கு இலகுவான தக்கையைத் தண்ணீருக்குள்ளே அமுழ்த்தினால் அது அதனின்று எப்படி மேலே எழுமோ அவ்வண்ணமே ஆகாயத்திலுள்ள மற்றுமுள்ள வாயுக்களிலும் கனமாயுள்ள, கிலக்கரிவாயுவும் அதிக நட்பமானவையாதலால், அதற்கறை பெவ்விய உமைதருக்குள்ளே அடைத்துவிடப்படின் அதின் ஆகாயத்தை ஊடுருவிக்கொண்டு அதிவேகமாக மேல்நோக்கிச்செல்லும். சாதாரணமான புகையும் வாயுவே; புகை ஆகாயத்திலும் மெல்லிதாயிருத்தல் பற்றி அது மேல்நோக்கிச்செல்லுகின்றது. வாயுக்களெல்லாம் புகைரூபமாகவிருக்கும். வாயுக்களைக் கூடுகளில் அடைத்துவிடுவதால் வாயுக்கூடென்று பெயர்; ஆயினும் அதனைப் புகைக்கூடென்று சாதாரணமாக எல்லோருஞ் சொல்லுவது வழக்கம். இவ்வாறான உபகரணங்கள் கீழே மனிதர் அமர்ந்திருக்கும்படியாக ரதங்கள் இணைத்திருந்து பிணைத்துத் தொங்கவிடப்படுகின்றதனால் இவற்றிற்கு ஆகாய ரதங்களென்றும் பெயர்.

பட்டு, நார், பருத்தி இவற்றால் நெய்யப்படுந்துணியைக் கூடுகளாகத் தைத்து, அவற்றினுள்ளே அடைக்கப்படும் வாயு வெளியே செல்லாதபடி மேலே மெழுகெண்ணெய் பூசுவார்கள். புகைக்கூடுகளைப் பந்தைப்போல முற்றும் உருண்டை வடிவமாயிராமல் சற்றே நீண்டிருக்கும்படி தைப்பார்கள். புகைக்கூட்டின் உச்சியில் மூன்றடிவிட்டமுள்ள வட்டமான மூடியொன்றை வைத்து, அதை வேண்டும்போதெல்லாம் திறக்கும்படியாக அதனோடு வில்லுகள் வைக்கப்பட்டிருக்கும். அதன்கீழே தொங்கவிட்டிருக்கும் ரதத்திலிருந்தபடியே அந்தமூடியைத் திறக்கும்படி செய்திருப்பார்கள். இதுவுமன்றிப் புகைக்கூடு ஆகாயத்திற்செல்லும்போது வாயுவின் மிகுதியால் அது வெடித்துப்போகாதபடி அந்தக்கூட்டின் மேலோடு மெல்லிய பட்டுக்கயிறுகளால் நன்றாகப்பின்னிக் கட்டியுமிருப்பார்கள். கடல்யாத்திரை செய்கின்ற மாலுமியினிடம் கப்பலோட்டுவதற்கேற்ற பல யந்திரங்களிருப்பதுபோலவே ஆகாயயாத்திரை செய்பவரிடம் அதற்கு வேண்டிய யந்திரங்களிருக்கும். இத்தனைகாலமாக ஆகாயக்கப்பல்களை உயர ஏற்றவும் கீழே இறக்கவுந்தான் அறிந்திருந்தார்கள். ஆதலினால் ஆகாயக்கப்பல்கள் காற்றின்வசப்பட்டுச் செல்லுவதைத் தவிர்த்து வேறு வழியில்லாதிருந்தது. இப்பொழுதோவெனின், மின்சாரத்தின் துணையினால் நினைத்தபடிக்கெல்லாம் அதைத் திருப்பிச் செலுத்திக்கொண்டுபோகும்படி கண்டுபிடித்திருக்கிறார்கள்; அதன் உச்சியிலுள்ள மூடியைத் திறந்துவிட்டமாத்திரத்தில் உள்ளிருக்கும் வாயு அதன்வழியாக வெளியேசெல்ல, கூடு கீழேயிறங்கும்; அந்தவாயைக் கொஞ்சம் திறந்துவைக்காமலிருந்தால், வாயு அதிகமாகிக் கூடு வெடித்துப்போம்.

மனிதர் இறகுகளைக் கட்டிக்கொண்டும், கிருத்திரிமமான இறகுகளைச்செய்துகொண்டும் பறவைகளைப்போல ஆகாயத்திற் பறப்பதுமுண்டு. ஆனால் அப்படிச்செய்வது எளிதன்று. மயிற்பொறியிலும், விமானங்களிலுமேறி ஆகாய கமனஞ்செய்ததாகப் பழைய நூல்கள் சொல்லுகின்றன. சீனதேசத்தில் 1303 ௵-ல் பிகின் நகரத்தில் சக்கிரவர்த்திக்குப் பட்டாபிஷேகமானபோது அங்கே புகைக்கூடு விடப்பட்டதென்று அதைப்பார்த்திருந்த பிரான்ஸ் தேசத்துப் பாதிரியொருவர் 200 வருஷங்களுக்குமுன்னே எழுதியிருக்கிறார். லிஸ்பன் நகரத்தில் 1709 ௵-ல் மெல்லிய காகிதத்தினால் பந்துபோலக் கூடுகட்டி அதனுள்ளே உஷ்ணமான காற்றை அடைத்துவிட்டுப் பார்த்ததில் அது ஆகாயத்திற் செல்லக் கண்டார்கள். அதுமுதற்கொண்டுதான் பிரான்ஸ் தேசத்தில் பற்பலவிதமாகப் புகைக்கூடுகளைக் கட்டிவிட்டுப் பார்க்கத் தொடங்கினார்கள். பலவகையான வாயுக்களுள் நிலவாயுவை அடைத்துவிடப்பட்ட கூடு மற்ற வாயுக்களையடைத்துவிடப்பட்ட கூடுகளிலும் அதிகவேகமாகச் சென்றது. அத்தனைவேகமாகச்செல்லுவதில் அதிகமான ஆபத்துகளுண்டாகின்றன. ஆதலினால் அதனிலும் பலமடங்கு தாழ்ந்ததாகிய நிலக்கரிவாயுவே ஆகாயகமனத்துக் கேற்றதென்று அதைத்தான் இப்பொழுது முக்கியமாக வழங்கிவருகிறார்கள்.



ஹாலந்து நாட்டிலுள்ள ஹம்பர் நகரத்தில்விடப்பட்ட ஆகாயக்கப்பல் 23,000 அடியுயரஞ்சென்றது. இங்கிலாந்தில் க்ளாஷியர் என்பவர் 1862 ௵த் தொடக்கம் 1866 ௵ம் இடையில் இருபத்தெட்டுமுறை ஆகாயகப்பலிலேறிச் சென்றார். பூமியிலிருந்து ஐந்து மைலுயரத்துக்குமேல் மேகம் சொடிபோலப் படர்ந்திருக்கிறதென்றும், அதற்குமேல் ஐந்துமைலளவும் மேகத்தில் ஈரமில்லையென்றுங் கண்டிருக்கிறார்கள். க்ளாஷியர் என்பவர் பூமியைவிட்டுக் கிளம்புகையில் நிமிஷமொன்றுக்கு எழுபத்தாறுதரம் அடித்தநாடி 20,000 அடி உயரத்துக்குமேற் சென்றவுடன் அதிகப்பட்டு நிமிஷத்துக்கு நூற்றுப்பத்துத்தரம் அடித்ததென்று கண்டார். க்ளாஷியரும் காக்ஸ்வெலுமாகச்சேர்ந்து 1862 ௵ ஏழுமைலுயரஞ்சென்றார்கள்; இத்தனை உயரம் போனவர்கள் வேறுயாருமில்லை. 29011 அடிக்குமேல் க்ளாஷியருக்கு எழுநிமிஷகாலம் மூர்ச்சைபோட்டு நினைவில்லாதிருந்தது; அப்பொழுது அவரோடுகூடச்சென்ற காக்ஸ்வெல் குளிரைத் தாங்கமாட்டாமல் உடம்பெல்லாம் கட்டைபோல விறைத்துப்போக புகைரதத்தின் மேல்மூடியைக் கட்டியிருந்த கயிற்றை அவர் தமது பற்களால் கடித்து அவிழ்த்துவிடவேண்டியதாயிற்று. ஆகாயத்தில் ஐந்துமைல் தூரமளவும் மூச்சுவிடுவதில் வருத்தமிராது; பூமியினின்று காதவழியுயரத்திலிருந்தும் கீழே இருப்புப்பாதை செல்லுமோசைகேட்கும்; அதற்குமேல் ஆறுவதுமைலுக்குச் சென்றால் அங்கே அரவமின்றியிருக்கும். 1887 ௵ம் மால்ட், ஜோவிஸ் என்னும் இருவர் நாலரைமைலுயரஞ்சென்றார்கள்; அவர்களுள் மால்ட் என்பவருக்கு இருமுறை நினைவு தப்பியது; ஜோவிசுக்கு உடம்பொன்றுஞ் செய்யவில்லை.

யுத்தகாலங்களில் கோட்டைகள் முற்றுகைபோடப்பட்டிரு

160949

க்கையில் கோட்டைக்குள்ளிருந்து வெளியே செய்திகொண்டு போவதற்காகவும், மற்றும் போக்குவரவு செய்வதற்காகவும், புகைரதங்களை வழங்குவது இக்காலத்தில் வாடிக்கையாயிற்று. சில வேளைகளில் புகைரதத்தோடு நீளமான கயிற்றைக் கட்டிவிட்டு, வேண்டும்போது கீழிருந்து அதை இழுத்துக்கொள்ளுவார்கள். அமெரிக்கா முதலான விடங்களிலே அருங்கோடையில் இப்படிக் கட்டிய புகைரதத்திலேறிக் குளிர்ச்சியுள்ள அளவுக்குச்சென்று சுகமாயிருந்துவிட்டுத் திரும்பிவருவார்களாம். ஏறுவதற்கும் இறங்குவதற்குமாத்திர மிருப்பதிற் பயனில்லையென்றெண்ணிப் புகைரதத்தோடு மின்சாரமுள்ள பெட்டியைச் சேர்த்துக்கட்டி அதில் இரண்டு கம்பிகளை இருபுறமும்வைத்து அவற்றைத் திருப்புவதினால் வேண்டுமிடங்களுக்குச் செல்லும்படி சிறிதுகாலத்திற்குமுன்னே தான் நூதனமாகக் கண்டுபிடித்தார்கள். இப்படிக்கெல்லாமிருக்கையிலும், புகைரதத்தின்மேலேறி நினைத்தப்படியெல்லாஞ் செல்லுவது எளிதன்றென்று இந்த சாஸ்திரத்தில் வல்லவரெல்லோருஞ்சொல்லுகிறார்கள். ஆகாயக்கப்பல் உயரச்செல்லுகையில் காற்றில் ஆடிக் கவிழ்ந்துவிழாமற் செல்லும்படியாக அதன்கீழேயுள்ள ரதத்தில் மணலை மூட்டையாகக்கட்டி, கப்பலுக்குக் கனமாக இரும்பினால் நங்கூரமிருப்பதைப்போல் அதற்கும் அதனை நங்கூரமாக வைத்திருப்பார்கள்; புகைரதம் மேலே செல்லவேண்டுமானால், கொஞ்சங் கொஞ்சமாக அதிலுள்ள மணலைக் கீழே கொட்டிவிடுவார்கள்; அதைக் கீழே இறக்கவேண்டுமானால் அதனுள்ளிருக்கும் ஆவி மேல்மூடியின் வழியாகச் செல்லும்படி அம்மூடியை உபாயமாகத் திறந்துவிடவேண்டும்.

சிறிதுகாலமாக பாராசூட் என்று சொல்லப்படுகிற பெருங்குடையின் உதவியினால் அபாயமொன்றுமின்றி நிதானமாகப் பூமியில் வந்திறங்கும்படி சுலபமான வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆகாயத்தில் வேண்டிய உயரம் ஆகாயக்கப்பல் சென்றவுடன் அதன்மூடியை முற்றுந் திறந்துவிட்டமாத்திரத்தில் அது வேறாகச்சென்றுவிழ, குடை தானாகவே நன்றாகப்பிரிந்துகொண்டு, அதற்குள்ளே வாயு அடங்கியதும் அந்தக்குடை ஆகாயத்தில் மிதக்க, அதன் அடியிலே தொங்குகின்ற சிறுபீடத்தில் தொங்கியபடியே மெள்ளமெள்ளக் கீழேவந்திறங்கலாம். மெல்லிய துணிமுதலியவற்றால் குடையைச்செய்து அதன் முனைகளிலே சிறுகயிறுகளைக்



கட்டி அவற்றை ஒன்றாகச்சேர்த்து அது தாங்கத்தக்கபாரமுள்ள சிறுபொம்மையைப்பிணைத்து உயரவிருந்து மெள்ளக் கீழேவிட்டால், பெருங்குடையைப் பிடித்துக்கொண்டு ஆகாயத்திலிருந்து மனிதன் கீழே யிறங்குவதுபோலிருக்கும்.

ஆகாயவிமானத்திலேறி அநேகர் வெகுதூரஞ்சென்றிருக்கிறார்கள். 1870ஆம் நவம்பர்மீ 21உ பாரிஸ் நகரத்தைவிட்டுப் புறப்பட்ட புகைக்கூடு பதினைந்துமணி நேரத்திற்குள்ளெல்லாம் நார்வே தேசத்திலுள்ள கிறிஸ்டியானா நகரத்துக்குச் சென்றது. அமெரிக்காவில் வோயிஸ் என்பவர் செயின்ட்லுயிஸிலிருந்து நியுயார்க் நகரத்துக்கு ஆகாயமார்க்கமாய்ச் செல்லும்படி பிரயாணப்பட்டு இருபது மணி காலத்துக்குள்ளே 11[illegible]0 மைல்தூரஞ் சென்றார். இந்தப் பண்டிதருக்கிருந்த அவா இத்துடனோடு நீங்காமல் அட்லாண்டிக் மகாஸமுத்திரத்தைத்தாண்டிச் செல்லவேண்டுமென்று 40000 கன அடியளவுள்ள பெரிதான ஆகாயக்கப்பலைச்செய்து அது பிரயாணத்துக்குச் சித்தமாயிருக்கையில் ஏதோ குற்றத்தால் ஆரம்பத்திலேதானே வெடித்துப்போயிற்று; ஆனதினாலேதான் அவர் அப்படிச்செய்வது கூடாமற்போயிற்று. இதுவரையில் ஆகாய யாத்திரைசெய்தவர்கள் 1500-பேர். இவர்கள் இத்தனைபேருமாக ஆகாயத்தில் 10000-முறை யேறிச்சென்றார்கள். இவ்வாறு ஏறினவர்களுள் 15 பேர்களுக்குமட்டுந்தான் ஆபத்துநேர்ந்தது; ஆதலினால் ஆகாய யாத்திரைசெய்வதில் அபாயம்நேருவது மிகவும் அரிதென்று அறிந்துகொள்ளலாம்.

இந்தியாவெங்கும் பிரஸித்திபெற்ற ஸ்பென்ஸர் நமது சென்னைபுரிக்குவந்து மும்முறை ஆகாய யாத்திரை செய்தார். இவர் ஆகாயத்தில் ஏறும்போது புகைக்கூட்டின் துணையினாலேறி வரும்போது அதைவிட்டு அதனோடு சேர்த்தாற்போல் மாட்டியிருந்த பாராசூட் என்னும் பெருக்குடையைப்பிடித்து அதன்கீழே தொங்கிக்கொண்டு தமக்குச் சிறிதாயினும் அபாயமில்லாதபடி க்ஷேமமாகவந்திறங்கினர். சற்றேறக்குறைய 3200-அடி உயரமட்டுந்தான் ஏறினர். இவர் இறங்கிவருகையில் இந்திரலோகத்தினின்று தேவவிமானத்தின்வழியாக யாரோ தேவதை பூமியில் வந்திறங்குவது போலிருந்ததைக்கண்டு அங்கு வந்திருந்த பல்லாயிரம் பிரஜைகளும் அவருக்குப் பல்லாண்டுபாடி ஆநந்தமடைந்தார்கள்.

## பிள்ளைகளைப் பயிற்றுவித்தல்.

ஹெர்பேர்ட் ஸ்பென்ஸர் பண்டிதர் பிள்ளைகளைப் பயிற்றுவதைப்பற்றிச் சிறந்த கிரந்தமொன்றை எழுதியிருக்கிறார். சாதாரணமாக நமக்குள் நடவடிக்கையிலிருக்கிற சிலசங்கதிகள் துராசாரமாயிருக்கிறபடியால், அது நீங்கும்பொருட்டு அந்தப்புத்தகத்தில் கண்டிருக்கிற சில ஸாரமான எண்ணங்களைமாத்திரம் நாம் இங்கே குறிப்பாகவெடுத்துச் சொல்லுகிறோம்.

எவ்விதமாகவோ ஜன்மம் வந்துவிட்டது. உயிரோடிருக்கிறோம். நாம இருக்கிறவரையில் சரியாய்வாழ்வது முக்கியம். சுகஜீவனத்துக்கு உதவியானகாரியங்களில் தேர்ச்சியை அடையவேண்டும். ஆகலின், உலகவாழ்க்கைக் குரியனவற்றைச் சரியாகக் கற்பிக்கவேண்டும். தொழில், உத்தியோக முதலியனவற்றைச் செய்யவும், உடம்பில் பிணியற்றிருக்கவும் உதவுமபடியான கல்வியைத் தான் விசேஷமாகக் கற்றுக்கொடுக்கவேண்டும். இதற்கெல்லாம் ஆதாரம் சாஸ்திராப்பியாசம்.

### சிறுவர் புத்தியைத் தேறச்செய்வதற்கு வழி.

சிறுவயதில் பிள்ளைகளை உலகத்திலுள்ள பொருள்களை நேரப் பார்க்கச்சொல்லி, ஒவ்வொரு பொருளிலுமுள்ள உருவம், நிறம், வாசனை இவற்றைக் கவனிக்கச்செய்து புத்தகப்படிப்பை அதிகமாக வைக்காமல் பொருள்களை நேராகப்பார்த்தறியும்படி செய்யவேண்டும். நாலைந்து வயதுமுதல் ஏழுவயதுவரையில் வாய்ப்பேச்சிலேயே படிப்பித்து, ஊரிலுள்ள வீடு, கடை, குளம், குட்டை, தோப்பு, கழனி முதலியவைகளை நிதானித்துப்பார்த்து அவற்றைப் பற்றி நன்றாகக் கேள்விகேட்டு விஷயங்களைச் சொல்லச்சொல்லிப் பொருள்களைப் பற்றிய ஞானமுண்டாகும்படி செய்யவேண்டும். இவ்வாறு பொருட்பாடமானபின்பு, ஆறு ஏழு வயதுக்கு எழுத்து எழுதப்பழக்கி முன்னதாகப் பொருள்பாடமாய்த் தெரிந்துள்ளதை எழுதப்பார்க்கவேண்டும். சுத்த தத்துவ சமாசாரங்களையாவது, பெரிய சாஸ்திர முடிவுகளையாவது முதலில் சொல்லலாகாது. பயன்படத்தக்க விஷயங்களை வேடிக்கையாக நடவடிக்கைக் கதைகளாக முன்னாடிக் கொஞ்சநாள்மட்டுஞ் சொல்லிக்கொண்டுவந்த பின்பு வியாகரணமுதலிய சித்தாந்த கிரந்தங்களைப் படிப்பிக்க-



லாம். எதிலும் உலகத்திலுள்ளதை உள்ளபடிக் கிரகிக்கச்செய்தபின் தான் மேலான சாஸ்திரமுடிவுகளைப் பிள்ளைகள் தாமாகவே அவரவர்களுடைய புத்திக்கேற்றபடி செய்துகொள்ளும்படி விட்டுவிடவேண்டும்.

### சிறுவர்களை அடக்கி ஆளும் வழி.

ஏதாவது குற்றஞ்செய்தால் குழந்தைகளைப் பெரியோர் கடிவது வழக்கம். இது துராசாரம். கடிந்துகொள்ளும்போது நமது சித்தம் குரோதத்தை யடைகிறது. அந்த நிமிஷம்வரையில் கடிந்துகொள்ளும் தகப்பனோ, தாயோ தங்கள் மனதையும் விகாரப்படுத்திக் கொள்கிறார்கள்; குழந்தைகளையும் நடுங்கப் பண்ணுகிறார்கள்; இது இரண்டுபேருக்கும் கெடுதி. குரோதம் அடைவதால் அடையும் பெரியவர்களுடைய தேகத்துவமுங் கெடும்; பெரியவர்களுடைய குரோதத்தைப் பார்த்து நடுங்கும் சிறுவர்களுக்கும் அந்நடுக்கம் கெடுதியை யுண்டாக்கும். குற்றஞ்செய்த சிறுவர்களைச் சிக்ஷிப்பது எப்படியெனில், நாம் கொஞ்சங்கூட வெறுத்துக்கொள்ளாமல் காரியசிக்ஷை செய்கிறது. அதாவது:—பெரியவர்கள் கொஞ்சம்கூட வெறுத்துக்கொள்ளாமல், பிழைசெய்த பிள்ளைக்குத் தங்கள் தப்பினால் தங்கள் சுகஜீவனத்திற்குக் கெடுதி உண்டாயிற்று என்று உணரும்படி காரியதண்டனை செய்கிறது. குடிக்கக் கொடுத்தபாலைச் சிந்தினார்களானால் பாலைத் திரும்பவுங்கொடாமல் விட்டுவிடுகிறது; பலபத்தைப் போக்கடித்தால் இன்னுமொரு பலபங்கொடுக்க நியமித்தகாலம்வரையில் மற்றொன்று வாங்கிக் கொடாமல் விட்டுவிடுகிறது; பலபம் போக்கடித்த பிள்ளைக்கு அவ்வாறு போக்கடிக்காத பிள்ளையைக்காட்டிலும் சில உண்டிகளைக் குறைத்துவிடுகிறது. தாய்தந்தைகள் தெரியாமையால் செல்லங் கொடுக்கிறதும், தாறுமாறாய்ப் பின்பு கோபித்துக்கொள்ளும்படி வைத்துக்கொள்ளுகிறதும் மிகவும் கெட்டது. பிள்ளைகளைப் பெற்றவர்கள் இந்தவிஷயத்தில் உறுதியாயிருத்தல்வேண்டும். "குழந்தை இரவில் வயிறுநிறையச் சாப்பிடாமல் படுத்துக்கொண்டானே, வேடிக்கையாக அவனை எங்கும் அழைத்துக்கொண்டு போகவில்லையே" என்று பெரியவர்கள் அழுது ஏக்கங்கொள்ளுவது கூடாது.

### தேக பயிற்சி.

ஆண்பிள்ளைகளானாலும், அல்லது பெண்பிள்ளைகளானாலும் விளையாட்டுவேளைகளில் தங்கள் இஷ்டப்படி விளையாடவேண்டும்.

ஓடியாடித் திரிவதில் நன்மையுண்டு. தேகம் வளரும். இரத்தவோட்டம் விருத்தியாகும். சுகஜீரணமாகி நல்ல சாப்பாட்டினால் தேகதத்துவங்கள் வலிமையடையும். "பெண்பிள்ளைகள் ஓடித் திரிவது கூடாது; அப்படித் திரிந்தால் தேகம் கறுத்து மேனியற்று நல்ல வரன்கிடைப்பதற்குப்பின்பு வருத்தப்பட்டுப்போம்" என்று எண்ணுவது பிசகு. பெண்பிள்ளைகள் வீட்டுவேலை செய்யவேண்டியதோடுகூட கர்ப்பம் தரித்து திரடமான குழந்தைகள் உண்டாய்ப் பிரசவகாலத்தில் நோயால் வருந்தாமலிருக்கவேண்டியதாகலாலும், அவர்களும் ஆண்பாலாரைப்போலவே மிகுதியாய் ஓடியாடி விளையாடித் திரியவேண்டியது அவசியம்.

## உருக்கென்றும் இரும்பென்றும் அறிவதெப்படி?

உருக்கென்றும், சாதாரண இரும்பென்றும் தெரிந்துகொள்ளுவது எப்படி? உருக்குவேறு; மற்ற இரும்புவேறு. ஒருதுளி வெடியுப்பு திராவகத்தை யொன்றின்மேல் விட்டு ஒரு நிமிஷம் பொறுத்து ஜலம்விட்டுக்கழுவ, திராவகம்பட்டவிடம் இரும்பானால் சாம்பல்நிறமாகவும், உருக்கானால் கறுப்பாகவும் மாறியிருக்கும். அன்றியும் தோலுக்கிருப்பதுபோல் சிக்கிரத்தில் சிதைவுறுதன்மையினாலும், அணுக்களின் கிட்டத்தினாலும் துவைச்ச(துவைத்த)லினால் உண்டாகிற உறுதியினாலும் உருக்கு இதுதானென்று தெரிந்துகொள்ளலாம். உருக்குத்துண்டைப் பழுக்கக்காய்ச்சி உடனே தண்ணீரில் தோய்த்தால் அது மற்ற உலோகங்கள் எல்லாவற்றைக் காட்டிலும் மிகக்கடின முற்றுக் கண்ணாடியைக்கூட அறுக்க வல்லதாயிருக்கும். ஆதலினாலேதான் இவ்வுருக்கினால் மற்ற உலோகங்களை அராவுகிறதற்குவேண்டிய பலவிதமான அரங்கள் செய்யப்படுகின்றன. துவைச்சலான உருக்கு வேறெந்த உலோகத்தாலும் தேய்வுறாது. ஆனால் அடிபொறுக்கிற குணம் இதற்கில்லையாதலால் இது கண்ணாடியைப்போல இலேசாய் ஒடியக்கூடியது. அன்றியும் துவைச்சல்செய்த ஒரு உருக்குக்கம்பியை வளைக்க அது வளைந்து மறுபடி உடனே பந்துபோலெழும்பி நிமிர்ந்து முன்போலவேயிருக்கும். இந்தக் குணத்திற்காகத்தான் கடிகாயந்திர வில்லுகளும், ஓலைபோலத்துவளுகிற கத்திமுதலியனவும் உருக்கினால் செய்யப்படுகின்றன. துவைச்சல் செய்யுமுன்னே உருக்கு அடிப்ப



தற்கும், வெட்டுவதற்கும், நீட்டுவதற்கும் இரும்பைப்போலவே மெத்தெனவிருக்கும். ஆகலால் நமக்கு வேண்டியவிதமாய் உருக்கு சாமான்களைச் செய்துகொண்டு, பின்விட்டு அது இறுகி உறுதியாயிருக்கும்படி துவைச்சல் செய்யவேண்டும். துவைச்சலான உருக்கைப்பழுக்கக்காய்ச்சித் தானாகவே ஆறும்படிசெய்தால் துவைச்சல் கெட்டுக் கடினம் மாறி துவைச்சலுக்குமுன்னிருந்தது போலவே மெத்தென்றாகும்.

துவைச்சல் ஒருவிதமல்ல; பலவிதம். வேலைக்குத்தக்கபடி துவைச்சல் கொடுக்கவேண்டும். பழுக்கக்காய்ந்த உருக்கைத் தண்ணீரில் தோய்த்தெடுக்க அது மிகக்கடினமாகுமென்று முன்பே சொன்னோமல்லவா? அதை வெள்ளிபோலத் தேய்த்து மெருகிட்டு ஒரு நிமிஷநேரம் வரையில் நெருப்புத்தணலில்வைத்துச் சூடேற்ற வெண்மைமாறிக் கொஞ்சம் பழுப்புநிறமடையும்; இத்தருணத்தில் முன்னிருந்த கடினம் சற்றுக்குறைந்து நிற்கும்; க்ஷவரகத்தி முதலியவற்றிற்கு இதுதான் பதம்; இந்தப்பதத்தில் அது தானாகவே ஆறவேண்டியது. இன்னம் இரண்டொருநிமிஷம் அனலிலேயேயிருக்கப் பழுப்புநிறம் அதிகரித்துப் பொன்வர்ணமாகும்; பேனாக்கத்தி, வெட்டுக்கத்தி முதலியவற்றிற்கு வேண்டியபதம் இதுதான். இதைவிட இன்னஞ் சற்றுநேரம் அனலிலேயேயிருக்க, பிரகாசமான நீலநிறமடையும்; கடிகாயந்திரவில்லுகள் முதலான துவண்டுநிமிருங்குணம் விசேஷமாய் வேண்டியிருக்கும் சாமான்களை இந்தப் பதத்தில் அனலிலிருந்து எடுத்து ஆறவைக்கவேண்டும். இதற்குமேலும் அனலில்வைத்திருந்தால் முன்னிருந்த நீலநிறம் மாறி, துவண்டுநிமிருங்குணம் அதிகரித்து வண்டிவில்லுகள், மரமறுக்கும்வாள்கள் முதலியவற்றிற்குத் தகுதியாயிருக்கும். இன்னும் அனேகமுறைகளுமுண்டு; சில வேலைக்காரர்களுக்கு மட்டுந்தான் இது இரகசியமாய்த் தெரியுமேயன்றி யாவருக்கும் தெரியாது. கைதேர்ந்த வேலைக்காரர் சிலர்க்குத்தான் தகுந்தபடி பதமேற்றத் தெரியும்.

முற்கூறியபடி உஷ்ணம் ஏறவேற அதின்கடினமும் படிப்படியாய்க் குறைந்துவருமென்றாலும், நமக்குவேண்டிய வஸ்துக்களை மேற்கண்டபடி எடுத்தால் அதுவே அவற்றிற்குப் போதுமானது. விசேஷமாய்ச் சூடேறிப்பழுக்கக்காய்ந்துபோய்த் தானாக ஆறினால்மட்டுந்தான் துவைச்சல் போய் அதன்கடினம் நீங்கிவிடுகிறது;

ஆனால் தண்ணீரில் தோய்த்துக் குளிரவைத்தால் பழையபடி மிகுந்த கடினத்தையடைகிறது. சிலர் உருக்கைப் பழுக்கக் காய்ச்சி, எண்ணெயிலாவது குதிரை மூத்திரத்திலாவது தலைச்சல்கொடுத்தால் அதிக உறுதியுண்டாகிறது என்று சொல்லுகிறார்கள். உருக்குக்கம்பியினால் மிக நுண்ணியதாகவும், மிருதுவாகவும் நாணயமாகவுமிருக்கிற சரிகைகளும் செய்துவருகிறார்கள்.

ஷேக்ஸ்பியர் மகாகவிசெய்த 'வணிகர்புர வர்த்தகன்' எனும்

## நாடகம்.

31-ம் பக்கத்தின் தொடர்ச்சி.

உலோரஞ். நல்லதையா? மத்தியானம்வரையில் விடைபெற்றுக்கொள்ளுகிறோம். கிரசேனர் நான்பேசும்படிக்கு ஒருபோதும் இடந்தருகிறதில்லை. அவர்கூறிய ஊமைஞானிகளில் நானுமொருவனா யிருக்கவேண்டியதுதான்.

கிரசேன. இரண்டே இரண்டுவருஷம் என்னுடன்கூட விரும். உமது நாக்குளாப்பது உமக்கே தெரியாமற்போகும்.

அன்டோ. நல்லது போய்வாருங்கள். இந்த வம்புகேட்டு நானும் வாயாடியாவேன்.

பாசேன. உள்ளபடி சந்தோஷிக்கிறேன். மௌனம் உலர்த்திய மாட்டுநாக்குக்குந்தான் அடுக்கும்.

(கிரசேனன், உலோரஞ்சன் இருவரும்போக)

அன்டோ. இப்போது அவர்பேச்சில் ஏதாவதுண்டா?

பாசேன. கிரசேனர் பேசும் வெறும்பேச்சுக்களளில்லை. அவருக்கு மிஞ்சி அளவில்லாத வெற்றுரைபாடுபவர் இவ்வணிகர்புரத்திலேயே யில்லை. அவருடைய ஞாயங்கள் இருகலப்பதரில் மறைந்துகிடைக்கும் இரண்டு கோதுமைமணிபோலக் கண்டறியவேன்றால் ஒருநாளெல்லாம் பிடிக்கும். அப்படிக்கண்டறிந்தவைகளோ தேடின பாட்டிற்கிடல்ல.

அன்டோ. ஈங்கிது நிற்க இளங்கொடி யொருத்தியால்
மறைந்தொரு பயணம் வளமுட னேக
விரதம் பூண்டம் மெல்லியள் தன்னை
இன்று சொன்றே யின்றெனக் கியம்ப
வாக்களித் திர்அவ் வஞ்சியை யுரைப்பீர்.



பாசே. அன்டோ னியநா னடைந்தசெம் பொருளை
வாழ்வினுக் குரிய வன்மையிற் புகுந்து
வரையது கடந்து பெருமிதங் காட்டி
அழித்தது நீர்தான் அறியாதல விப்போ
குன்றிய தென்று குறைப்பட விலையான்
பெரும்படி குறைந்த கவலையெற் கில்லை
பண்டுநான் சற்றுப் பதைப்புடன் பணத்தைச்
செட்டிலாச் செலவு செய்திடு நாளில்
பட்டவெம் பாரக் கடன்களை யிறுத்துத்
தப்புங் கவலையே தனிப்பெருங் கவலை
அன்டோ னியன்நீ ரளவிலா தெனக்குப்
பணமிற் குதவிப் பரிவது காட்டினிர்
அன்னதற் கடிமை யாயினே னந்த
உரிமையி னாலே யுறுகடன் போக்க
உள்ளம் பூண்ட வுபாயமும் விரகும்
அன்பநிற் குரைப்பனென் னகச்சுமை நீங்க.

அன்டோ. ஐயநற் பாசநேய! அட்டியின் றதனைச் சொல்வாய்
தூய்யவுன் செயல்கள்நாளுந் துலங்குமா றதுவுந் தூய்தேல்
கையுள தனமுநானுங் காயமு மெல்லா முன்றன்
மெய்வசப் பொருள்களன்றோ மேவுறுந் சமயத்தெல்லாம்.

பாசே. பள்ளியிற் பயிலும் நாட்களி லியானெய்
அம்பது விழிட மகப்படா தாயின்
அதன்துணை யம்பை அம்முறை விசைகொடு
அவ்வழி யானே யதிகமாந் சூழ்ச்சிகொண்
டிரண்டையு மொருக்கா லிழுக்கிறுங் துணிந்து
முன்னதைக் காண முனைப்புடன் தெரிந்துப்
பலதர மிரண்டையும் பார்த்துநா னெடுப்பேன்
பாலியத் தறிந்தப ரீட்சையை யுமுன்
பிடித்துரை யாடினன் பின்னையான் பகர்வதும்
எள்ளள வேனுங் கள்ளமில் லாமையால்
உம்முறைப் பட்ட வுறுகடன் மிகவுள
தலைகால் தெரியாத் தறிதலைங் காளைபோல்
ஆங்கதை யழித்தேன் அருளின முளதேல்
முன்பெய் வழியே மீண்டுமற் றொருகணை

விடுப்பி ராயின் முடிகுநான் குறிப்புத்
தவறு வண்ணம் தனிப்பார்த் திருந்து
இரண்டையுங் கொணர்வே னீங்கிது பிசகில்
பின்துணிந் ததனைப் பெயர்த்துமக் களித்து
முன்செய் யுதவியை முழுமனத் தோடுநான்
நன்றி மறவா நயத்துட னிருப்பேன்
சங்கையில் லாமல் சாதிப்ப னித்துணை.

அன்டோ. என்மன தறிந்து மிக்குனம் வீணாய்க்
காலம் போக்கிக் கனிவினை யுரியச்
சுற்று வழியில் சோதனை செய்கிறீர்
இயன்ற வளவின் ஈவனோ வென்னும்
ஐய முனக்கிங் காகுமோ நிஜமாய்
இப்புன் வினைவினும் என்பொரு ளெல்லாம்
எடுத்தெறிந் தழிப்பினு மெனக்கது பார்தம்
ஆதலி னெனைநீ ரறிந்தன வாக
இன்னது புரியென் றியல்பறிந் தியம்பின்
வஞ்சனை யிராதினி வாய்விட் டுரைப்பீர்.

பாசே. பொலிமலை யதனிலோர் பெருந்தனக் கிழத்தி
அழகினில் மிக்காள் அதிசய குணத்தாள்
முன்பொரு காலவள் மொழியிலாத் தூதுகள்
கண்வழி யனுப்பக் கண்டது னுடைய
பௌருஷி யந்தப் பாவைதன் னாமம்
கேட்டோ ரக்கினி யருடலின் மனையாள்
பௌருஷி யென்னும் பண்டையட் கிவளும்
குறைந்த பெருமை கொண்டவ ளல்லள்
ஆங்கவ ளருமை யகலுல கறியும்
பலதுறை நின்றும் பண்புட னவள்மணம்
விழைவுறும் பெரும்புகழ் மேலவர் தம்மை
நாற்றிசை வாடைகள் நயந்திவண் சேர்க்கும்
ஆங்கவ ளொளிதிக ழணிமயிர்க் கற்றைகள்
பொன்னூ லோம்பப் பொலிவது காட்டிக்
கதுப்பின் மீது கவினுறத் தூங்கும்
இதனாற் பொலிமலை கால்ச்சிக் கணையாய்
மங்கையை நாடி வருபவர் ஜேஸராய்



ஆயினு மைய அன்ப அன்டோனிய!
ஆங்கவர்க் குள்ளே யானுமோ ரெதிரியாய்
போயவ ணிற்கும் பொருட்டினை யுளதேல்
தப்பா ததிர்ஷ்டந் தரும்ஜய மென்றே
ஒப்புமென் னுளந்தா னுரைபகர் கின்றது.

அன்டோ. நீரறி வீரென் நிதியெலாங் கடலுள
கையிற் பொருளிலை கடனது பெயர்க்க
ஈடு மற்றில்லை என்பெயர் சொல்லி
நாணயத் தல்லது நட்பினுக் காகக்
கொடுப்பவ ருளரேல் கொண்டுநீர் விரைவில்
பொலிமலை யண்மிப் பௌருஷி தன்னைக்
காணுவீ ரைய காரிய மிதற்காய்
ஆனவ ரையில் ஆராய்ந் திடுவீர்
நானுமக் கனம் நயந்துடன் செய்வேன்
காலம் விளம்பக் காரண மில்லை.

## விந்தையாகப் பைத்தியந்தீர்தல்.

அதிகமான பயம், ஆச்சரியம் இவற்றால் புத்திமாறிப் பைத்தியம் பிடிப்பதுமுண்டு. ஒருவன் தன்னை இறந்ததாக நினைத்திருந்தமையால், அவன் எழுந்திருக்கமாட்டாமல் படுத்த படுக்கையோடு அசையாமற் கிடந்தான். இந்த ரகசியத்தையறிந்த வைத்தியன், என்னகாரணத்தினால் அவன் இறந்தானென்று அறிதற்பொருட்டு அவன் வயிற்றைக்கீறிச் சோதித்துப்பார்க்க வந்திருப்பதாகச் சொல்லிக்கொண்டு அவனண்டை வந்துநிற்க, இதுசெய்தி அவன் செவியில் எப்படியோ பட்டுப் பைத்தியந்தெளிந்து தூங்கியெழுந்திருப்பவனைப்போ லெழுந்திருந்தான்.

பொருளில் அதிகமான பற்றுள்ளவொருத்திக்குப் பெரிதான நஷ்டமுண்டாயிற்று. தனமே தெய்வமென் றெண்ணியிருந்த அந்தப்பேதை அவ்வாறு தனக்குப் பொருட்சிதைவுண்டானதைக் கண்டாற்றப்பொறாது தற்கொலைபுரிய நினைத்தாள். அதன்பின்பு அவளுக்கு ஒன்றன்றாக அடுத்தடுத்து வேறு பல சங்கடங்களுண்டாக அவள்கருத்து அவற்றின்மீது செல்லவே, அதற்குமுன்னே தான் தற்கொலைபுரிந்து கொள்ளவேண்டுமென்று கொண்டிருந்த எண்ணத்தை மறந்து குணப்பட்டாள்.

பாம்புக்குட்டி வயிற்றிற்குள்ளே யிருப்பதாகவெண்ணி ஒருத்தி நெடுங்காலமாகத் துன்புற்றிருந்தாள். அப்படியிராதென்று பாரென்னசொல்லியும் அவள் மலைப்பு நீங்கவில்லை. இதைக்கேட்ட வைத்தியரொருவர் இதற்கு மருந்து கொடுப்பதில் பயனில்லையென்றும், தந்திரத்தால்தான் குணப்படுத்தவேண்டுமென்றெண்ணி, அந்நோயை ஒருநொடிப்பொழுதில் தீர்க்கவல்ல மருந்து தம்மிடமிருப்பதாகச்சொல்லி அவளுக்கு வாந்திக்குக் கொடுத்தார். அவள் அதனால் அதிகமாக வருத்தப்பட்டு ஓக்காளிக்கையில், அவர் அதற்கென்றே தம்மோடுகூடக் கொண்டுபோய் மறைத்துவைத்திருந்த பாம்புக்குட்டியை அவளறியாமல் மெள்ளவெடுத்து ஒரு பாத்திரத்திலே போட்டு, அது அவள் வாந்திசெய்தபோது அவளுடைய வயிற்றிற்குள்ளே யிருந்து விழுந்துவிட்டதென்று சொன்னார். அவள் அதைக்கண்டு வயிற்றுப்பாம்பு வெளியே வந்துவிட்டதென்றெண்ணினமையால் அன்றுமுதல் அவளைப்பிடித்திருந்த மனோவியாதி நீங்கிச் சுகமாக வாழ்ந்திருந்தாள்.

## வெகுவிஷயந் தெரிந்தவர்கள் யாவர்?

முற்காலத்தில் நமது தேசத்தில் ஒவ்வொரு விஷயத்தையும் செம்மையாய்த் தெரிந்துகொண்டவர்கள் பலர் உண்டென ஊகித்தறியத்தக்கதாயிருக்கிறது. சரித்திரங்களை யெழுதிவைப்பது நமது முன்னோர்கள் வழக்கமின்மையால் அவர்கள் செய்திருக்கிற கிரந்தங்களைக்கொண்டுதான் நாம் அறியவேண்டும். முதல்முதல் வேதத்தில் வெகு விஷயங்களைப்பற்றிச் செம்மையாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. வேதபாகங்களிலேயே சிற்பம், தனுசு, ஆயுதம், ஸ்வரம், காலநிர்ணயம் முதலான அனேகவிஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் வேதம் (அபௌருஷேயம்) ஒரு புருஷனால் செய்யப்படாததென்பது இத்தேசத்தார் கொள்கையாதலால், இவ்வளவு விஷயம் தெரிந்தவர்கள் இன்னாரென்று சொல்லக்கூடாதவாயிருக்கிறது. இதற்குப்பின் வேதத்தை ஆதாரமாகவுடையனவாகிய உபவேதங்களில் சரீரதத்துவம், சஸ்திரவித்தை, ஜோதிஷம், தனுர்வித்தை முதலிய அனேகவிஷயங்கள் ஆதியோடந்தமாய் விவரிக்கப்பட்டிருக்கிறபடியால் இவற்றைச் செய்தவர்களாகிய மகரிஷிகள் அனேகம்விஷயங்களை நன்றாய்த் தெரிந்துகொண்டவர்களென்றே தீர்மானிக்கலாம். இதற்கு வெகுகாலத்திற்குப் பின்னால் கோ



யிற் பிரதிஷ்டை, பீடங்களின் பிரதிஷ்டை, யோகம், சிற்பம், பரகாயப்பிரவேசம் இவைபோன்ற பலவிஷயங்களில் அதிநிபுணராயிருந்த சங்கராசாரியர் என்கிற மகான் அவதரித்திருந்தார். சங்கரர் எல்லாமறிந்த நிபுணர். இத்தனைகாலமாக சாஸ்திரக்கியானத்துடன் அப்பியாசம் குன்றியதுமன்றி வரவர சாஸ்திரக்கியானங் கெட்டுவிட்டது. தற்காலத்தில் அங்கிலேயர் முதலியவர்கள் பலவிஷயங்களில் ஞானத்தை விருத்திசெய்துகொண்டு அப்பியாசமும் குன்றாதபடி செய்து வருகிறார்களென்றாலும், சிறந்த புத்திமானாயிருப்பவனுக்கும் ஒவ்வொருவிஷயத்திலும் சிறிதுதெரிந்துகொள்ள மட்டுந்தான் சாத்தியப்படுமேயல்லாது முழுமையும் செம்மையாய்த் தெரிந்தவனென்று சொல்வதுகூடாது. இந்நிலைமையில், தற்காலத்தில் எவ்வகுப்பார் கூடியவரையில் மற்றவர்களைவிட ஒவ்வொரு விஷயத்திலும் அதிகமாய்த் தெரிந்தவர்களென்பது நாம் யோசிக்கவேண்டிய விஷயம். இங்கிலாந்து தேசத்தில் 250 வருடங்களுக்குமுன் லார்ட்டு பேகன் என்றொரு வித்துவசிரோமணியிருந்தார். அக்காலத்தில் அவர் சிறிதாவது தெரிந்துகொள்ளாதவிஷயம் ஒன்றுமில்லையென்ற கீர்த்திமட்டும் அவருக்கிருந்ததேயொழிய, ஒவ்வொன்றையும் பூர்ணமாக அறிந்துகொண்டவரென்ற பெயர் அவருக்கில்லை. நமது பாடசாலைகளில் உபாத்தியாயராயிருக்கிற புருஷர்களும், ஸ்திரீகளும் மற்றவர்களைவிட அதிகமாகத் தெரிந்துகொண்ட பலவிஷயங்களை மறவாமல் ஞாபகத்தில் வைத்திருப்பவர்களென்று சொல்லலாம். ஏனெனில், இவர்கள் அந்தப்பிள்ளைகளுக்குப் பிரதிதினமும் ஒவ்வொருவிஷயத்தையும் செம்மையாய்க் கற்பிக்கவேண்டியிருப்பதாலும், வேலைக்குப் புறம்பாயுள்ளவர்கள் பிரதமக்கியானத்துக்கு உதவியாயிருந்த பாகங்கள் ஒவ்வொன்றையும் தங்களுக்கு வயது முதிரமுதிர மறந்துவிடுகிறார்கள். நமது சக்கிரவர்த்தினியின் மந்திராலோசனை சபையில் பிரசித்தி பெற்றவரான கிளாட்ஸ்டன் என்பவர் பூகோளத்தில் ஒரு ஸ்தானத்தைச்சொல்லி, அது எங்கிருக்கிறது என்று சபிகர்களில் நாலைந்துபேராவது சொல்லுங்களென்று சிலவருடங்களுக்குமுன் கேட்டதாகவும், அவர்களுக்குத் தக்க உத்தரஞ்சொல்லத் தெரியாமற்போனதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலினால் தற்காலத்தில் மனிதருக்குள் எவ்வகுப்பார் வெகுவிஷயங்களைத் தெரிந்தவர்களாகிறார்களென்கிற கேள்வியை எல்லாப்படியாலும் யோசித்துப் பார்க்குமிடத்து, பலவிவரங்களைச் செம்மையாய்

நிர்வகித்துவருகிற வியாபாரிகளுக்குத்தான் எல்லாவற்றிலுஞ் சிறந்த தெரிந்திருக்குமென்று சொல்லலாம். பிரதிதினமும் வியாபா ரஸ்தலங்களில் விசாரணைக்குவருகிற வெவ்வேறுவகையான வழக்குகளை அதுவரையில் தங்களுக்கு ஒவ்வொரு விஷயத்தில் ஒன்றும் தெரியாதவர்களாயிருந்தும் தாங்கள் எடுத்துப்பேச ஒப்புக்கொண்டபின்பு பரிபூரண ஞானமுள்ளவர்களைப்போல் நுட்பமான கேள்விகளைக்கேட்டுச் சாக்ஷிகள்சொல்லும் உத்தரம் யதார்த்தமோ அல்லவோவென்று வியாபாரிகளே தெரிந்துகொள்ளும்படி செய்யவேண்டியதாயிருப்பதைவிட அவர்களை அநேகவிஷயந் தெரிந்துகொண்டவர்களாகச் சொல்லவேண்டியதாகின்றது. ஒருவேளை வியாபாரமுறையில் நிபுணனான ஒருவன் சாக்ஷியாக வருவான்; மற்றொருவேளையில் ரசாயனசாஸ்திரங் கற்றுத் தேர்ந்தவனும், பிரு கட்டடவிஷயத்தில் தேர்ந்த சிற்பசாஸ்திரியும், சாக்ஷிகளாக வரவேண்டியிருக்கும். அந்தவிஷயத்தில் அவர்களின் அபிப்பிராயத்தை நுட்பமாய்க் கேட்டறிதல் சமர்த்திக்க வேண்டியதாய் விவகாரத்தில் சிறந்த அநுபவமுடைய வியாபாரிகள் தாம் பலவிஷயங்களைக் கூடியவரையில் அதிகமாய்த் தெரிந்துகொண்டவர்களென்று துணிந்துசொல்லலாம்.

## ஒருபிரஸவத்தில் ஒருத்தி ஆறுபிள்ளைகளைப்பெற்றது.

நாம் இதுவரையிலுங் கேட்டிராத அற்புதமொன்று அமெரிக்காவிலுள்ள டாலஸ்டெக்ஸாஸில் உண்டாயிற்றென்று லண்டன் நகரத்திலே பிரசுரமாகின்ற டிட்பிட்ஸ் பத்திரிகை சொல்லுகின்றது— அங்குள்ள கீலரிஷே என்னுமூரிலே ஜான்ஸ்டிரிஷ்க் என்னுமொருத்தி ஒருபிரஸவத்தில் ஆறு குழந்தைகளைப் பெற்றாள். அவ்வாறு பிறந்த மக்களுள் ஆண் நான்கு, பெண் இரண்டு. ஆண்குழந்தைகள் நால்வர்க்கும் பிரடரிக், மில்ஸ், கிளீவ்லாண்ட், டாமஸ் என்றும், பெண்பிள்ளைகளிருவர்க்கும் விக்டோரியா, ஜுலி என்றும் பெயர்களிடப்பட்டிருக்கின்றன. அந்தக் குழந்தைகளெல்லாரும் ஒன்றைப் பார்த்தாற்போல விக்ருதியாய் ஒரேமாதிரியுடையவர்களாயிருக்கின்றதனால் அவர்களுக்குள்ள வித்தியாசந் தெரியும்படியாக ஒவ்வொரு குழந்தையின் சட்டைமேலே அடையாளமாகச் சீட்டெழுதி ஒட்டியிருக்கிறார்கள். இந்தக்குழந்தைகள் ஆறுபேருந் தாயாரும் சுகமாக வாழ்ந்திருக்கிறார்கள்.



## காலஸ்திதியை முன்னே அறிவிக்கும் ஜந்துக்கள்.

இக்காலத்தில் ஆகாயத்தின் கூறுபாடுகளை அறிவித்தற் பொருட்டு பராமீடர் என்னும் ஆகாசதோலனயந்திரத்தைச் செய்திருக்கிறார்கள். இயற்கையாக ஆகாயத்தின் கூறுபாடுகளை யறிவிப்பதில் சில ஜந்துக்கள் இந்த யந்திரத்திலும் எத்தனையோமடங்கு சிறப்புடையன. ஆதிகாலந்தொட்டு ஜந்துக்களால் காலவித்தியாசங்களைக் கண்டறிந்து கொள்ளுவ தெங்கும் வழக்கம்.

பூர்வகாலத்தில் கிரேக்கதேசத்திலும், ரோமதேசத்திலும், நிலத்தையுழுது பண்படுத்தி விதைத்தவுடன் சிலபறவைகளும், மிருகங்களும் இருக்கு மிருப்பைக்கண்டு அந்தவருஷத்தில் தானியம் நன்றாய் விளையும் விளையாதென்பதை அங்குள்ள குருக்கள் எளிதில் கண்டுகொள்ளுவார்கள். இதனால் பக்ஷிகளுக்கும் மிருகங்களுக்கும் ஆகாயத்தின் தன்மை நன்றாய்ப் புலப்படுவதியற்கையென்று காண்கிறது. இவ்வாறு அறிவதில் மனிதர்களுக்கும் இயற்கையாய்த் தெரிவதுமுண்டு. வாதரோகங்கொண்டவர்களுக்கு மழைவருவதற்குமுன்னே உடம்பெல்லாம் ஊசிகொண்டு குத்துவதுபோலிருக்கும். கை கால் ஒடிந்துபோனவர்களும், தூர்மாம்ஸ முள்ளவர்களும் மழைவருவதற்குமுன்னே உடம்பில் வலியுண்டானதைப்பற்றி வேண்டியமட்டும் எழுதிவைத்திருக்கிறார்கள். மழைவருவதற்குமுன்னே கிழவிகளுக்குக் குளிர் அதிகமாகி உடம்பெல்லாம் நடுக்கமெடுத்துக் குளிர்காயவேண்டியிருக்கும். உடம்பு குளிர்ந்தால் மழை வருமென்றறிந்து வெளியே போகார்கள்; அன்றியும் மழைக்குமுன்னேசோம்பலுண்டாகும்.

மழை வருமுன்னே சில ஜந்துக்கள் அசையாமல் இருந்தவிடத்திலேதானே இருக்கும்; வேறு சில மிருகங்கள் கூச்சலிட்டு உற்சாகங்கொண்டிருக்கும். நாய்கள் மழைக்குமுன்னே சோம்பலாய்த் தூக்கங்கொண்டு குளிர்காயவிரும்பும். பன்றிகள் இருந்தவிடத்திராமல் குருகுருத்தவண்ணமாக அங்குமிங்குமாய் அலைந்துகொண்டிருக்கும். நாயாயினும் பூனையாயினும் புல்லைக்கடித்தால் மழை உடனே வருமென் றெதிர்பார்க்கலாம். வாத்துகளும், மயில்களும் இடைவிடாது கத்தினால் உடனே மழைவருமென்றறிந்துகொள்ளலாம். மற்றெல்லாவற்றுள்ளும், மழைவருமென்று கா

ட்டுவதில் நத்தை மிகச்சிறந்தது. பனிநத்தை பகலெல்லாம் ஓர் மூலையிலேயிருந்துவிட்டு அந்திப்பட்டதும் இரவில் வெளியேவந்து செடிகளிலே பெய்யும் பனிநீரை யுண்ணும். மழை வருமென்று கண்டால் நத்தை வெளியேவந்து சுவர்களிலும், மரங்களிலுமேறி மழை பெய்யும்போது தலையைநீட்டிக்கொண்டு சுகமாயிருக்கும்.

எப்பொழுதும் தனித்தாயினும், அல்லது ஆணும் பெண்ணுமாகவாயினும் வாழ்கின்ற சிலந்திப்பூச்சிகள் புயல் வருவதற்குமுன்னே பலகூட்டமாகச் சேர்ந்திருக்கும்; இவை மற்றக்காலங்களிலே ஒரு நிமிஷமாவது தம்மினத்தோடு ஒன்றுசேர்ந்து வாழப்பொறாமல் சண்டையிட்டவண்ணமா யிருக்கும்.

மழைவரப்போகிறதென்ற குறிப்பை யறிந்து எறும்பு அதற்கு முன்னேதானே நல்ல இடந்தேடிச் செல்லுவதை யாருங்காணலாம். "எறும்பு முட்டைகொண்டு திட்டையேறின் மழை பெய்தது" என்றது நம்மெல்லோர்க்குந் தெரிந்ததே யாம்.

ஈக்களும் கொசுகளும் எப்பொழுதும்போல உயரப்பறப்பதைவிட்டு மழை வருமுன்னே கீழேவந்து தரை மட்டமாகப் பறக்கும்; அந்தவேளையில் ஊர்க்குருவிகள் பூமியில் தத்திப்பறந்து அவற்றை உண்பதைப் பார்க்கலாம். மழையின் வரவைத் தவளை நன்றாகக்காட்டும்; மற்றைப்பொழுதைவிட மழை வருவதற்கு முன்னே தவளை ஓயாமல் நெடுநேரம் கத்த ஆரம்பிக்கும்; அன்றியும் அதற்குமுன்னிருந்த அதன் பச்சைநிறம் வெண் சிவப்பாக மாறும். பகலில் தேரை தன்னிடத்தைவிட்டு வெளியே வந்தால் மழை வருமென்று அநேகர் எழுதியிருக்கிறார்கள். தேரைகள் சாதாரணமாய் இரவிலேதான் வெளியேவரும். மழை பெய்யும்போது கிழாகப் பறக்கும் பூச்சிகளை யுண்ணுதற்பொருட்டு ஊர்க்குருவிகளும் தேரைகளும் காத்திருக்கின்றதை நாம்பலமுறை காணலாம். ஆப்பிரிக்காவிலுள்ள பக்காஞ ஜாதியார் அந்நாட்டிலுள்ள ஓர் வகையான பெருந்தவளை கத்துவதைக்கேட்டு, இடியும் பெருமழையும் வருமெனத்துணிந்து, அவற்றிற்குத் தப்பிப் பிழைக்கும்படி தங்களுக்கு வேண்டியனவற்றையெல்லா மெடுத்துக்கொண்டு பத்திரமான இடந்தேடிச் செல்லுவது வழக்கமென்று லிவிங்ஸ்டன் பண்டிதர் சொல்லுகிறார்.

அன்னப்பறவைகள் காற்றுக்கெதிராகப் பறந்தாலும், புறாக்கள் எப்பொழுதும்போலல்லாமல் முந்தித் தங்கள் கூட்டில்வந்தடை



ந்தாலும் புயல் வருமென்பதையறியலாம். உழவர்கள், கோழி மண்ணில் புரளுவதைக்கண்டு மழை வருமென்று சொல்லுவார்கள். ஆப்பிரிக்கா அரேபியா தேசங்களில் பாலைவனங்களிலேசெல்பவர்கள் ஒட்டகங்கள் மலைத்துத் திகைத்துத் தட்டுத் தள்ளாடி நடப்பதைக்கண்டு, பெருங்காற்றுவந்து மணலை வாரித் தூற்றுமென்பதையறிந்து முந்தியே ஜாக்கிருதையாயிருப்பார்கள். பூகம்ப முண்டாவதற்குமுன்பே பறவைகள் தரையைவிட்டுக் கடல்நோக்கிச் செல்லும். ஆகாயத்தின் பாங்கை அவை இயற்கையாகத்தெரிந்துகொண்டு வரப்போகின்ற அபாயத்தினின்றுந் தப்பும்படி அவ்வாறு கடல்நோக்கிச் செல்லுகின்றனவென்று காண்கிறது. வடஅமெரிக்காவில் நாகரீகமுண்டாவதற்குமுன்னே அங்கிருந்தவர்கள் தங்கள் குதிரைகள் தாறுமாறாக நடப்பதினாலும், காட்டுமிருகங்கள் அச்சமுற்று ஓடுவதினாலும் காட்டுத்தீ வருவது நிச்சயமென்று அறிந்துகொள்ளுவார்கள்.

எந்நாளுங் கோடையை அதிகமாக விரும்புகின்ற சுவர்க்கோழிக்குச் சுருசுருப்பும் துணிவுமுண்டானால் மழைவருவது நிச்சயமென்று நம்பலாம். ஆமைகள் காலையில் உற்சாகங்கொண்டு குந்துகாலால் நடந்து விரைவாகத் தங்கள் இரையையுண்டால் பொழுதுபடுமுன்னே மழை தப்பாமல் வருமென்பதற்கு அதுநல்ல அறிகுறியாகும்.

அந்தந்தக்காலத்திற்கேற்றபடி கிரகநிலைகளை யறிந்து, மழை பெய்யுமென்றும், பெய்யாதென்றுஞ் சொல்லுவதும் நெடுங்காலப் பழக்கத்தினாலேயென்று நாம் காணலாம்.

உப்புக் கரைந்து ஜலமானாலும், பூனை நிலத்தைக் கீறினாலும், ஓணான் மரத்தின் உச்சியினின்று ஆகாயத்தை உற்றுப்பார்த்தாலும், பசுக்கள் அண்ணாந்து சூரியனைப்பார்த்தாலும், ஆடுகளுக்குப் பட்டியைவிட்டு வெளியேபோக விருப்பமில்லாதிருந்தாலும், நாய்கள் கூரைமேலேறி நின்றாலும், பாம்புகள் புல்லின்மேல் படுத்திருந்தாலும் மழைவருவது நிச்சயமென்று சொல்லலாம்.

ஒவ்வோர் வேளைகளிலே மாத்திரம் மேற்சொல்லிய குறிப்பின்படி மழை வாராதிருப்பதுமுண்டு. விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் இவ்வாறு வரப்போகிற காலவித்தியாசத்தை நன்றாயறிந்துகொள்ளும்படியான சக்தியிருப்பதினாலேதான் அவை பலவகையான கொடுமைக்குத் தப்புகின்றன. மனிதனுக்கு இவ்வாறான

சக்தி மட்டு. சில மிருகங்களுக்கு ஆகாயத்தின் பரமாணு வித்தியாசத்தைக் கண்டறியும்படி பூர்ணமான சக்தியிருப்பதனால் ஆகாய தோலனயந்திரத்திலும் சிறப்புடையனவாகவே கடவுள் அவற்றைப் படைத்திருக்கிறார்.

## யஜமானனும் அவன் வேலையாளும்.

கேசவன். முத்தா! நமதுவீட்டில் ஏதேனும் விசேஷமுண்டோ?

முத்தன். ஐயா! அதையேன் கேட்கிறீர்கள்? நமது நாய் இறந்து போயிற்று.

கேச. ஐயோ! பேதை நாய்க்குட்டி இறந்தாபோயிற்று? அது எப்படிச் செத்தது?

முத். ஐயா! அது விலாப்புடைக்க ஊனைத்தின்றுவிட்டது.

கேச. அப்படியா! ஓ பெருவயிறு படைத்த நாயே! உனக்கேன் இத்தனைகொழுப்பு? முத்தா! அதற்கு அவ்வளவு ஊன் எங்கேகிடைத்தது?

முத். ஐயா! குதிரையின் இறைச்சியைத் தின்றுமாண்டது.

கேச. குதிரையினிறைச்சியா! அதற் கவ்வளவு தின்னும்படி எங்கேயிருந்து கிடைத்தது?

முத். எல்லாம் உங்கள் தந்தையின் குதிரைகள்தான்.

கேச. ஆ! அவைகளனைத்தும் இறந்தனவோ?

முத். ஆமையா; இடுப்புமுறிய வேலைசெய்ததினால் மாண்டுபோயின.

கேச. அப்படி யிரக்கமின்றி எலும்புமுறிய வேலை வாங்கியதேன்?

முத். தண்ணீர்கொண்டு வருவதற்காக.

கேச. தண்ணீர்கொண்டு வருவதற்கா? அவ்வளவு தண்ணீர் என்னத்திற்காக!

முத். பின்னே நெருப்பை அவிப்பது எப்படி?

கேச. நெருப்பா! நெருப்பெங்கேயடா பிடித்தது?

முத். ஐயா! உங்கள் தந்தையாரின் வீடு எரிந்து சாம்பலாயிற்று.

கேச. ஐயோ, நம்முடைய வீடு எரிந்தாபோயிற்று. அதில் நெருப்பு எப்படிப்பிடித்தது.

முத். உங்களன்னையார் போனபோது பந்தம்பிடிக்கவில்லையா?

கேச. ஓகோ! கொடிது, கொடிது! தாயுமிறந்தனரோ?

முத். ஆமையா; என்னசெய்கிறது? அன்றுமுதல் அவள் நொந்து இளைத்து ஈர்க்கானாள்.

கேச. என்றுமுதலடா?

முத். உங்கள் தந்தை யிறந்த நாள் முதல்தான்.



கேச. தந்தையும் போனரோ?

முத். ஆம் போய்விட்டார்; பாவம், அவர் அந்தச்செய்தி கேட்டது முதல் படுத்தபடுக்கையைவிட்டு எழுந்திருக்கவே யில்லை.

கேச. எந்தச்செய்தியைக் கேட்டபின்பு?

முத். அந்த துக்கசமாசாரம் கேட்டது முதல்தான்.

கேச. இன்னமுமா துக்கசமாசாரம்! இன்னம் என்னென்னசொல்லப்போகிறாய்?

முத். ஏன்? சீனதேசத்திற்குப் போயிருந்த உங்கள் கப்பல் வரும் வழியில் நடுக்கடலில் முழுகிப்போக, இருந்த சொத்துக்களையெல்லாம் கடன்காரர் கைப்பற்றிக்கொண்டார்கள். இனி ஒரு காசுக்குக்கூட வழி யில்லை; இதுசெய்தி தங்களோடு சொல்ல வேண்டுமென்றுதான் இங்கே இவ்வளவுநேரம் தங்கள் வரவிற்கு எதிர்பார்த்திருந்தேன்.

## வேலண்ட் பால் என்பவர் அன்பைப்பற்றி எழுதியது.

* கலித்துறை.

பிறங்கும் பிறர்குறை பேணாது நற்குணம் பேணலுறும்
அறந்திகழ் நெஞ்சின ரன்றேல் அவர்வின் னமிர்தினையும்
மறந்திடும் வண்ணம் வடித்துப் படிக்கின்ற வார்த்தையெல்லாம்
வெறுங்கல கல்லென்னும் வெங்கல வோசையின் வேறலவே. (1)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வருபொரு ளுரைக்கும் வல்லபம் பெறினென்
மண்ணிடை விண்ணிடை மறைந்த
பெருரக சியங்கள் யாவையு முணரும்
பெருமையும் ஞானமும் பெறினென்
பருவத மெடுத்துப் பந்தென வாடும்
பத்தியுஞ் சித்தியும் பெறினென்
பாவலு கூல திருஷ்டியென் றுரைக்கும்
பண்புறு மன்பிலை யெனிலே. (2)

இல்லவர் யாரும் புசித்துநற் சுகமே
எய்திடல் பொருளெலா மீய்ந்தென்
நல்லமெய் தனையும் சிபியெனத் தன்கோள்
நாட்டிட நல்கியும் என்னை?

* இது கனம்பொருந்திய திவான் ஓராமயீயங்கார் C. S. I. அவர்கள் விரும்பியபடி மகா-ா-ா-ஸ்ரீ சுந்தரம்பிள்ளை அவர்கள் பாடியது.

அல்லவர் தமையும் நல்லவ ரெனவே
அனுதின மதித்துகந் திடுமோர்
சொல்லிடும் பிரிய அன்புமற் றிலேயேல்
சுகமிலை யென்பது துணிபே. (3)
பிறர்க்கெலா மின்பம் பெருக்குவ தன்பே
பிறர்செயுந் தீங்கினைத் தினையும்
பொறுத்துமேன் மேலும் மகிழ்வது மன்பே
போற்றிய பிறர்வயி னுற்ற
சிறப்பது கண்டவ் வழுக்கறு விடுத்துச்
சித்தமுட் களிப்பதும் அன்பே
அறச்சிறி தேனும் அன்புதன் பெருமை
அறிந்திறு மாப்படை யாதே (4)
அன்னியர் குணமாய் அன்பெனும் அணங்கின்
அழகினை யின்னமும் கேண்மோ
தன்னியல் நடக்கை தக்கவா றன்றித்
தவறுறுத் தன்மையள் தனது
மன்னிய உரிமைப் பொருடனக் காக
மறந்துமே வழக்கிட அறியாள்
என்னன செயினும எளிவரு கோபம்
இல்லள்தீங் கொன்றுமே என்றாள். (5)

கலிவிருத்தம்.

கொடுமை யென்றெவர் கூறினுங் கேட்டெளம்
நடுந டுங்குவள் நாணமுற் றஞ்சுவள்
கெடல ரும்புகழ் மெய்மை கிளத்தல்கேட்
டெல மெங்கும் புளகித் துவப்பளே. (6)
வந்த வெல்லாம் பொறுத்து மகிழ்வளே
நந்தல் செய்யினும் நம்புதல் விட்டிடாள்
எந்த வேளையு மேல்வரு மின்பமே
சிந்தை செய்குவள் தீங்கு கவனியாள். (7)

அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

இப்படி யாவ ராலும் எய்துதற் கரிதாய் நின்ற
செப்பிய பானு கூல தெரிசன சித்த மொன்றே
மெய்ப்பட நிற்கும் மேலால் விளைவதோ ருணர்வும் ஓர்கால்
பொய்ப்படும் புலமை போகும் போய்விடு மறிவுந் தானே. (8)



பாலியத் தன்மை யாலே பற்றிய கழற்சி பந்து
போலவும் ஆடி யூடே பொருந்திய பார்வை போலும்
ஏலவும் என்னை யானே நேர்பட அறிதற் கேற்ற
காலையில் துச்ச மாகிக் கழியுமே கண்ட வெல்லாம். (9-12)
உற்றஇவ் வனைத்தும் ஏகில் ஒழிவிலா தேதென் றேகில்
முற்றிலும் நம்பு பக்தி, கைவிடான் முதலோன் என்று
பற்றிய உறுதி முன்னம் பகர்ந்திடும் அன்பு மாமே
மற்றவை தம்மில் மேலாய் மன்னுவ தன்பே அம்ம! (13)

## விவசாயம்.

வாழை.—வாழைக்கிழங்குக்கு குதிரை கழுதை இவற்றின் சாணத்தை எருவாகவைத்து அதன்மேல் சிறு சுள்ளிகளைப்பரப்பி எரித்தால் ஏற்றகாலத்தில் வாழைமரங்கள் தார்போடும்பொழுது மரத்தைப் பிளந்துகொண்டு வருவதுபோலப் பருமனான மோத்தை கிளம்புமென்றும், சீப்புகள் நன்றாகவைத்து யானைத் துதிக்கைகள்போலப் பருத்துநீண்ட காய்கள் குலைகளில் நிறைய உண்டாகுமென்றும் ஆரியபட்டர் நூலில் சிறந்ததாய் பிரஹத்ஸம்ஹிதையில் சொல்லப்பட்டிருக்கிறது.

முள்ளங்கி.—ஒருகுழியை வெட்டியெடுத்து, அதில் எலும்புகளையும், மாடு பன்றி இவற்றின் சாணத்தையும் பெய்து நெருப்பு மூட்டி எரியவிட்டு அணைந்தவுடன் அதன் சாம்பலை வாங்கிவிட்டு முள்ளங்கியை நட்டால் அது குழி அளவாகவே வேரூன்றி வளருமென்று மேல்கூறிய கிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

## தண்ணீரும் ஓர் ஔஷதம்.

பாலப்பருவங்கழிந்து வயதான ஒரு புருஷனுக்காவது, ஸ்திரீக்காவது ஜன்னியாவது மூர்ச்சையாவது ஸ்மரணக்கேடாவது உண்டானாலும் வெயிலின் தாபத்தால் தளர்ச்சியடைந்து ஸ்மரணந்தப்பினாலும், அவர்களை உடனே தூக்கி உட்காரவைத்து ஒருத்தராகவாவது அல்லது இருவர்சேர்ந்தாகவாவது சாய்வாக உட்காரவைத்துப் பிடித்துக்கொள்ளவேண்டும். நோயாளி தலைப்பாகை வைத்துக்கொண்டிருந்தால் அதை வாங்கிவிடவேண்டும். உடம்பின் மேல்பாகத்தில் போர்த்தி இருக்கும் வஸ்திரத்தைக் களைந்துவிட்டு

இரண்டு மூன்று பெரும்பாண்டங்களில் நிறையக் குளிர்ந்த தண்ணீரைக் கொண்டுவந்து மற்றொருவன் ஒரு நாற்காலியிலாவது அல்லது உயரமான திண்ணையிலாவது ஏறிக்கொண்டு ஒரு சட்டி ஜலத்தை ஏகதாரையாய் தலையிலும், முதுகு கால்வாயிலும் படும்படியாய் வார்க்கவேண்டும். இப்படிக்குச் சிறிதுநேரம் செய்தபின்பு இரண்டு மூன்று நிமிஷங்களுக்குள்ளாக நல்ல நினைவு வந்துவிடும். அறிவுவரு முன்புதானே நோயாளி இரண்டொருதரம் பெருமூச்சு விடுவான். அந்தச் சமயம்பார்த்துத் தண்ணீர் விடுவதை நிறுத்தி அவனைக்காய்ந்த தரைக்குக் கொண்டுபோய் உலர்ந்த துணியால் அவனைத் துடைத்துவிட்டு, நனைந்துபோன துணியை மாற்றி உலர்ந்ததுணியைக்கொடுத்து உடுத்துக்கொள்ளச் செய்யவேண்டும். நோயாளி உலர்ந்த உடுப்பு உடுத்தியபின் துணிகளை அனலில் காட்டி அவைகளால் அவனுக்கு ஒத்தடம் கொடுக்கலாம். சிறிது நேரத்திற்குள் நினைவுதிரும்பி வராமலிருந்தால் கால்களின் கெண்டைச்சதைக்குக் கடுகு பிளாஸ்திரியும் இடலாம். சற்றே அறிவு திரும்பிவந்து அப்பால் மீளவும் ஜன்னியாவது தளர்ச்சியாவது வருமாயின் முன்போலவே குளிர்ந்த தண்ணீரைத் தலையிலும் முதுகின் பின்னேயுள்ள வாய்க்காலிலும் வார்த்து மேற்கண்டபடி சிகிச்சையை நடத்தலாம். தண்ணீர்வார்க்கும் பொழுதெல்லாம் அவசரமாய் ஒரே தடவையில் விடாமல் மெதுவாகவும், ஒரே தாரையாகவும் விடவேண்டும். விடும் தண்ணீரின் வேகம் தலையைவிடப் பின் முதுகில் அதிகமாய்த் தாக்கும்படியாக விடவேண்டும்.

பெண்பிள்ளைகளுக்கு அடிக்கடி இப்படிக்காணுவது வழக்கமாயிருந்தாலும், அதிலும் முக்கியமாய்ச் சிறப்பு அழுகைமுதலியன கலந்துகொண்டிருந்தாலும் மேற்கண்டபடி உயரமான இடத்திலிருந்து தண்ணீர் விடுவதைக்காட்டிலும் ஒருவன் கைநிறையக் குளிர்ந்த தண்ணீரைவாங்கி அவளது முகத்திலும் மார்பின் முன்புறத்திலும் ஓங்கிப் பலத்தோடு நாலைந்துமுறை அடிப்பதே நன்று. மேற்கண்ட சிகிச்சையை முதிர்ந்தவர்களுக்கும், பலஹீனமானவர்களுக்கும் மாதவிடையாயிருக்கிற பெண்பிள்ளைகளுக்கும் ஒருபொழுதும் செய்யலாகாது.

சிசுக்களுக்கு மேல்கண்ட நோய்கள் காணுமாயின் வைத்தியர்களைக்கொண்டு பார்க்கவேண்டும்.

JANANANDINI.

# ஜநாநந்திநி.

புஸ்த. 1.] எப்பிரல்மீ 1891. [இல. 4.

## கட்டடங்களுக்கான மரங்களின் இயல்பும் அவற்றை உபயோகிக்கும் முறையும்.

சாதாரணமாய் நமது நாட்டில் கட்டடங்களுக்காக உபயோகித்துவரும் மரங்கள் பலவகையானவை. அவற்றில் தேக்கு, செம்மரம், தோதகத்தி, பாலை, கடம்பை, பூவரசு, மா, பலா, அத்தி, வேம்புமுதலிய மரங்கள் முக்கியமானவை. இவையெல்லாவற்றிலும் தேக்குமரமே சிறந்தது. மற்றமரங்களைவிட அதிக இலேசானதும், சுலபமாய் வேலைசெய்யத் தக்கதும், செம்மரம், பாலை இவற்றைப்போல் அழுத்தமாயிராமற் போனாலும் மிகுந்த பலமுள்ளதும், நீடித்த காலம் நிற்பதும், இவை முதலான சிறந்தகுணங்கள் தேக்குமரத்திற்குண்டு. இதை சீக்கிரத்தில் ஆற்றிப்பதப் படுத்தலாம். நாளடைவில் அதிக சுருக்கங்கொடாது. இதில் தைலப்பசையுண்டு, அதனால் இதனோடு சேரப்பெற்ற இரும்பு துருப்பிடித்துக்கெடாது. இதில் விசேஷமாய்க் கறையான் பிடிக்கிறதில்லை. இந்த குணங்களைப்பற்றித் தேக்குமரம் விசேஷமாய் வீடு கட்டுவதற்கும், கப்பல்கள் படகுகள் முதலியனவற்றிற்கும், இன்னும் பலவிதமான நெடுநாள் நீடித்திருக்கவேண்டிய வேலைகளுக்கும் மிகவும் உபயோகப்படுகிறது.

தேக்குமரம் விசேஷமாய் மலையாளதேசத்திலும், பர்மாவிலும், இலங்கை யவனம் முதலியவிடங்களிலும் விஸ்தாரமான காடுகளாகப் பயிராகின்றது. இவைகளில் மலையாள தேசத்துத் தேக்கு மற்றவைகளைக்காட்டிலும் கெட்டியும் மேன்மையுமுள்ளது. ஆனதுபற்றி பம்பாயில் அதையே விசேஷமாய்க் கப்பல் கட்டுவதற்கு உப

யோகிக்கிறார்கள். பர்மாவில் விளையும் தேக்கு அவ்வளவு அழுத்தமில்லை. ஆனால் நேர்த்தியான சிற்றுளி வேலைகளுக்கு இதுதான் நன்றாயமைந்தது. இதில் நல்ல மெருகு ஏறும். வடக்கே கோதாவரி தீரத்திலுள்ள சில விடங்களிலும் தேக்குமரம் உண்டாகிறது. அதைப்போலத் தேக்கில் அழுத்தமான ஜாதி வேறெங்குங் கிடையாது. இது மற்றவைகளைவிட கன முள்ளதும், கொஞ்சம் சிவந்த நிறமுடையதாயும், அணுக்கள் மிகவுங் கிட்டமுடையதாயும், நேர்த்தியான சாரல்களை யுடையதாயும் இருக்கும். பெட்டி, கட்டில், நாற்காலி, மேஜைமுதலிய சாமான்கள் செய்ய இது ஏற்றது. செம்மரம் திருப்பதியைச்சார்ந்த மலைகளில் அதிகமாயுண்டு. தோதகத்தி, பாலை, கடம்பை முதலியன விசேஷமாய் மலைகளிலும் காடுகளிலும் கிடைக்கும். தென்தேசங்களில் பூவரசு, மா, பலா,முதலிய மரங்கள் வீடு கட்டுவதற்கு விசேஷமாய் உபயோகப்படுகின்றன.

மரத்தைத் தகுந்தகாலத்தில் வெட்டி அறுத்து, உலர்த்தி, ஆறவைத்துப் பதமாக்கும் வகை அநேகருக்குத்தெரியாது. தேக்குமரம் போன்ற விலையுயர்ந்தமரங்களைத் தகுந்தபடி யதன் ஈரத்தை யுலர்த்தி ஆறவைத்துப் பதவிட்டு உபயோகிக்காவிட்டால் கொஞ்சக்காலத்தில் வெடித்தும், இற்றுப்போயும் மரம் நாசமாகும்.

ஒரு முழுமரத்தைக் குறுக்கே அறுத்துப்பார்த்தால் அறுப்புமுகத்தில் ஒன்றைச்சுற்றி யொன்றாக சாரல்கள்தோன்றும். இவை சிலமரங்களில் ஸ்பஷ்டமாய்த்தெரியும்; சிலவற்றில் அவ்வளவு நன்றாய்த்தெரியாது. இந்தச்சாரல்களின் ஒவ்வொருசுற்றும் சுமார் ஒவ்வொருவருஷத்திற்கு உண்டாகின்றது. ஆகையால் அறுப்புமுகத்திலுள்ள இச்சாரல்களைக்கொண்டு இத்தனைவருஷத்திய மரமென்று சொல்லலாம். மரத்தின் வளர்த்திக்குத் தக்கபடி இந்தச் சாரல்கள் ஒவ்வொன்றும் அகன்றும் குறுகியுமிருக்கும்.

ஒவ்வொரு மரத்திற்கும் பட்டையுண்டல்லவா? பட்டைக்கடுத்த மரத்தின்பாகத்தை பால்மரம் என்று சொல்லுவார்கள். அதன்வழியாகத்தான் பால் மரத்திற்கு ஏறுகிறது. இலை, பூ, காய் முதலியன வுண்டாவதற்கு இந்தப்பால்தான் ஆதாரம். இந்தப்பாலினால் இலை, பூ முதலியன வுண்டாகி விட்டபிறகு மரத்தில் பால் அதிகமாகயிராது. ஒவ்வொருவருஷமும் மரத்தின் இலை உதிர்கிறதும், திரும்பத் துளிர் விடுகிறதும் உண்டன்றோ! அதனால் ஒவ்வொருவருஷமும் மரம் பெருத்து வருகையில் முன்னிருந்த பால்



மரம் முற்றி, வர வர இறுகிக் கெட்டியாகிறது. இவ்வாறு மரத்தின் உட்புரம் வருஷா வருஷம் கெட்டியாகி வரும்போது நிறமும் ஏறிவரும். ஆகையால் நன்றாய் முதிர்ந்த மரத்தின் உட்பாகம் மிகவும் உறுதியாயும், கருநிறமுடையதுமா யிருக்கும். இதற்குத்தான் வைரமென்று பெயர். அதில் ஈரம் அதிகமிராது. பாலிருக்கும்படியான மரத்தின் வெளிப்பாகந்தான் ஈரமாயிருக்கும். இந்தப்பாகம் சீக்கிரத்தில் இற்றுப்போகக் கூடியதும், கறையான், குளவி முதலியவற்றா லழியக் கூடியதுமாயிருக்கும்.

மனிதர்க்கிருப்பதுபோலவே மரத்திற்கும் பாலியம், முதிர்பருவம், வார்த்திகம் என்பனவுண்டு. பாலியத்தில் மரத்திற்கு வளர்ச்சியதிகம்; நாளுக்குநாள் விருத்தியாகிப்பெருகும். அக்காலத்தில்தான் அதை நாம் தகுந்தபடி பரிபாலித்து வரவேண்டியது. முதிர்பருவத்தில் வளர்ச்சியதிகமாயிராமல் மரம் ஒரே ஸ்திதியாயிருக்கும். இக்காலத்தில் நாம் அதைப்பற்றிக் கவலை யெடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. வார்த்திகம் பட்டுப்போகிறகாலம். இப்பருவங்கள் மரத்திற்குத் தக்கபடி தேசத்திற்குத் தக்கபடி இருக்கும்.

நன்றாய் வளர்ந்து முதிர்ந்திருக்கிறகாலத்தில்தான் மரத்தை வெட்டவேண்டியது. இளமரம் உறுதிபோதாதது. பால் செறிந்திருப்பதால் நாட்பட நீடித்து நிற்காது. மரத்தின் வார்த்திக பருவமாகிய பட்டுப்போகுங்காலத்தில் வெட்டப்படும் மரம் மிருதுத்தன்மைகுன்றி, ஸத்துவமற்று, நிறம்மாறிப்போய், சுலபமாய் முறிபடக்கூடியதாயிருக்கும்; உறுதியிராது; ஆதலால் வேலைக்குத் தகுந்ததல்ல. ஆகையால் மரங்களை அவை நன்றாய்ச் செழித்து வளர்ந்தபிறகு அவற்றின் முதிர் பருவத்தில் வெட்டவேண்டியது. நடுக்கோடைதான் மரம்வெட்டுவதற்கு ஏற்றகாலம். அக்காலத்தில் முன் கூறியபடி மரத்திலிருந்தபாலெல்லாம் புதுத்தளிர் விடுவதற்கு உபயோகப்பட்டுப்போய்ப் பட்டைக்கடுத்த மரத்தின்மேற் பாகமும் உறுதிப்படுகிறது. இக்காலத்தில் வெட்டினமரம் கறையான் முதலியவற்றாற் கெடுகிறதில்லை.

மரத்தை வெட்டினதும், அதைப்பச்சையாக உடனே உபயோகிக்கக்கூடாது. மரத்தை வெட்டினவுடன் காட்டிலிருந்து அப்புறப்படுத்தி ஈரந்தட்டாத உலர்ந்த இடத்தில் கொண்டுபோய் சுற்றிக் காற்றுலாவும்படியாக வைத்திருக்கவேண்டியது. காற்றும் வெயிலும் அடிக்கும்படி திறப்பாகவிட்டிருக்கலாகாது. மரம் பச்சையா

றும்போது, செதுக்காமல் உருண்டை வடிவமுள்ள மரம் வெடித்துப்போவதுபோலப் பக்கம் செதுக்கிச்சதுரித்தமரம் அவ்வளவு வெடித்துப் போகிறதில்லை. பெருந்தூண்கள் முதலியவற்றிற்கென்று முழுமரத்தை யுபயோகிக்க வேண்டியிருக்கும் பட்சத்தில் மரத்தை அடிமுதல் நுனிவரையில் குழாய்போலத் துளைத்து விடுகிறது நல்லது. இப்படிச்செய்வதால் மரம் உள்ளும் புறமும் ஏககாலத்தில் ஆறி வெடிப்புக் கொடுக்காமலிருக்கும். இதனால் கனம்குறைக்கும், பலங் குறையாமலிருக்கும். உள்ளும் புறமும் ஏககாலத்தில் ஆறிவராமற் போகிறதினால்தான் மரம் வெடிப்புக் கொடுக்கிறது. பச்சைமரம் ஆறும்போது தரைக்கு ஒருமுழ வுயரத்தில் மரத்தை நிறுத்திவைத்திருப்பது நலம். மரம் நன்றாய் ஈரம் ஆறி யுலர்ந்ததற்குப் பிறகுதான் வேலைக்குதவும். கட்டடவேலைகளுக்கு வேண்டிய மரத்தை இரண்டுவருஷ காலத்திற்குக்குறையாது இவ்வாறு தானாய் ஆறவைக்கவேண்டும். பெட்டிகள்முதலாகிய பலகையினாலாகும் இணைப்பு வேலைகளுக்கு நாலு வருஷத்திற்குக் குறையாதபடி யாற வேணும்.

இவ்விதமாக மரம் தானாய் ஆறுதல்தான் சிரேஷ்டம். ஆனால் நெடுங்காலங் காத்திருக்கவேண்டியதா யிருக்கிறது. இதற்காகப் பச்சைமரங்களை வேறு சில விதங்களாலும் ஆற்றுவதுண்டு. மரத்தைத் தண்ணீரிலும், நீராவியிலும், புகையிலும், ஆற்றுகிறார்கள். இவற்றில் தண்ணீரில் ஆற்றுவதுதான் உத்தமம். மரத்தையறுத்தவுடன் இரண்டுவாரம் வரையில் ஓடுகிற தண்ணீரில் நன்றாய் அமிழ்ந்திருக்கும்படி வைத்திருக்கவேண்டியது. பிறகு அதை யெடுத்து ஈரமில்லாத இடத்தில்வைத்து உலரும்படிசெய்யவேண்டியது. குற்றிட்டுவைத்து வெயிலிலும் காற்றிலும் தினந்தோறும் திருப்பிக்கொடுத்து ஈரம் உலரும்படி செய்வது நலம். இப்படி நன்றாய் ஆறினபின்பு வேலைக்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறு ஆறின பலகைகள் சில சமயங்களில் இரண்டு மூன்று வருஷம் தானாய் ஆறினவற்றைக்காட்டிலும் மேலானவையா யிருக்கின்றன. இம்முறை பலகைகளுக்குப் பின்னும் நலம். இம்முறையால் ஆற்றப்பட்ட மரத்திற் கறையான் பிடிக்கிறதில்லை. சுருங்குகிறதாவது, வெடித்துப்போகிறதாவது இல்லை. கப்பல் வேலைக்கானால் உப்புநீராகிய சமுத்திர ஜலத்தைக்கொண்டு ஆற்றலாம்; மற்றக்கட்டடவேலைகளுக்கென்றால் நல்ல தண்ணீரைத்தான் உபயோகிக்கவே



ண்டும். இரண்டாவது:— மரத்தை நீராவியிலாவது கொதிக்கிற நீரிலாவது நாலுமணி சாவகாசத்திற்கு மேற்படாமல் வேகும்படி செய்யவேண்டியது; பிறகு அதை யெடுத்து நன்றாயுலர்த்தவேண்டியது. தாமதமா யுலர்வது நலம். மரத்தை யிவ்வாறு ஆற்றுவதினால் மரத்தினுடைய மெதுத்தன்மை கொஞ்சம்குறையும். ஆனால் சுருங்காமலும் வெடிக்காமலு மிருக்கிற குணம் இம்முறையாலாற்றப்பட்ட மரத்திற்கு அதிகமாயிருக்கும். இந்த விஷயத்தில் தானாக ஆறுவதைக்காட்டிலும் இம்முறை மேலானதென்று சொல்லலாம். மூன்றாவது:—காட்டிலிருந்து வெட்டிக்கொண்டு வரப்பட்ட மரத்தை சுற்றிலும் சருகு, வைக்கோற்கூளம் முதலியவற்றைப் போட்டு கொளுத்தி அதிலுண்டாகும் புகையில் ஆறும்படி செய்வதுமுண்டு. பெரிய கைத்தொழிற் சாலைகளிலுள்ள நீண்டு உயர்ந்த புகைபோக்கிகளிலும் மரத்தைவைத்துப் புகையூட்டி ஆற்றலாம். இவ்வாறு செய்வதினால் மரம் உறுதிப்பட்டு நீடித்து நிற்குமென்று அநுபவத்தில் தெரிகிறது. இது பழையகாலமுறை. இவ்வாறு பச்சைமரத்தையாற்றும் முறைகளெல்லாவற்றிலும் மரம் முன் வெட்டினவுடனிருந்த கனத்தில் நன்றாய் ஆறியிருந்தால் மூன்றிலொருபாகம் குறைந்திருக்க வேண்டியது.

முற்கூறிய முறைகளுள் எதினாலாயினும் நன்றாய் ஆற்றிப்பதப்படுத்தப்பட்ட மரம் உறுதியுடையதும், சீக்கிரத்தில் முறிக்கப்படாததுமாய் நீடித்து நிற்கும் தன்மையுடையதுமாயிருக்குமெனினும் மழை, காற்று, வெயில் முதலியவைகளால் நாளாவர்த்தியிற் கெட்டுப்போகும். அவ்வாறு கெடாதபடிக்கு அதன்மேல் தார், கீல், வர்ணம், மெருகெண்ணெய், வார்னிஷ் முதலியவற்றைப் பூசவேண்டியது முக்கியம். இப்படி அப்போதைக்கப்போது பூசிக்கொண்டு மரத்தைப் பாதுகாத்துவந்தால் மரம் 400 அல்லது 500 வருஷங் கெடாமலிருக்கும். ஆனால் நன்றாய் ஆறாமல் ஈரம் இன்னமிருக்கிற மரத்தில் இவற்றைப் பூசினால், உள்ளே யிருக்கிற ஈரம் ஆறுவதற்கு இடமில்லாமல் சீக்கிரத்தில் மரம் இற்றுப்போய் நாசமாகும். மரம் இற்றுப்போவதற்கெல்லாங் காரணம் மரத்தின் ஈரம் காயாமலிருக்கையிலேயே உபயோகிப்பதுதான். நன்றாய்க்காய்ந்து ஆறின மரமானாலும் எப்போதும் ஈரத்திலேயே யிருக்கும்படி விட்டால் மரம் கெட்டுத்தான்போகும். அன்னபேதியை ஜலத்தில் விட்டுக் கரைத்து அந்நீரில் மரத்தை இரண்டு அல்லது மூன்று

மணி நேரம்வரையில் வேகவிட்டுப் பிறகு காயவைத்தமரம் ஈரம் பிடிக்கிறதேயில்லை. ஈரம் பிடியாம லிருப்பதற்குஇன்னம் அநேக முறைகளுண்டு. ஆனால் நமதுதேசத்தில் அவ்வளவு விஸ்தாரமான மரவேலைகள் செய்கிறதில்லை; ஆதலா லிவ்விடத்தில் ஒருமுறையுங் கையாடுகிறதில்லை. தேக்குமரம் முதலிய நாணயமான மரங்களை காலத்தில்வெட்டி, நன்றாய் ஆற்றிப் பதப்படுத்தி, வேலைக் குபயோகப்படுத்திய பின்பும் ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்து வருவோமானால் மரம் நெடுங்காலம் நல்ல ஸ்திதியி லிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. சாதாரணமாய் ஒருமரம் நாட்பட இருக்கும், இராதென்பதை அறிதற்கு அதன் ஒரு துண்டுக்கட்டையை யெரித்துச் சுட்டுப்பார்த்தால் அதின் குணந்தெரியும்; சுடப்பட்டகரி கனமாயும் உறுதியாயு மிருக்குமானால் மரம் நல்ல உறுதியுள்ளதும் நெடுநா ளிருக்கக் கூடியதுமாயிருக்குமென்று எளிதில் அறிந்துகொள்ளலாம்:—

எந்தமரமானாலும் சரி, கறையானுக்கு உதவாத மரம் இல்லை என்றாலும் அது தார்பூசினமரத்தை அணுகுகிறதில்லை. ஆனால் தார் பூசுவதினால் மரம் விகாரமான கறுப்பு வர்ணமாய் விடுகிறதென்று ஆட்சேபிக்கப்படுகிற பட்சத்தில், கடைகளில் கிடைக்கும் சவ்வீரத்தை உபயோகிக்கலாம். சவ்வீரத்தை நீரில்கரைத்து அதில் வேண்டிய மரத்தை யூறவைத்துப் பிறகு அதையெடுத்து உபயோகித்தால் கறையான் கிட்ட அணுகாது.

## கனவு.

கனவு இன்னதென்று யாருக்குத்தான் தெரியாது? மனிதனாகப் பிறந்த யாவருக்கும் கனவுகாணுதல் இயற்கை. ஒருபோதுங் கனவுகாணாத வொருவனாவது உலகிலுண்டென்று நினைக்க இடமில்லை. ஆனால், கனவு இன்னஇன்ன காரணங்களால் உண்டாகிறதென்றும், கண்ணாரப்பார்க்கும் காட்சிக்கும் கனவிற்காணுந்தோற்றத்திற்கும் உள்ள வித்தியாசமின்னதென்றும், கனவில்காணுந் தோற்றம் இத்தன்மைத்தென்றும், இவைமுதலான கனவின் தத்துவங்கள் இன்னவையென்று சிலர்தான் அதைப்பற்றி ஆழ்ந்து யோசித்துப் பார்ப்பார்கள். ஐம்புலன்களும் ஓய்ந்துபோய், தத்தம் செயல்களைநீத்துப் பிரஞ்ஞையற்று உறங்கும்போது, மனதுமட்டும்



சற்றும் சலிக்காமல் ஏதோ ஒரு தோற்றத்தை யுண்டுபண்ணிக்கொண்டிருப்பது வியப்பே! அவ்வாறு உண்டாகும் தோற்றத்தில் இதுசரி, இதுசரியல்ல, இவ்வாறிருக்கக்கூடும், இதுகூடாதென்று நாம் அறிந்துகொள்ளுவதற்கு வேண்டிய புத்தியொன்றுமட்டும் நீங்கலாக, மற்றவிஷயங்கள் யாவும் உணர்ச்சியுடனேயே யிருக்கின்றன. தூங்கும்போது கண், காது, வாய்முதலிய உறுப்புகள் உணர்வற்றுக் கிடந்தபோதிலும் கனவில் ஏதோ தோற்றங்களுண்டாய் நாம் பிரத்தியட்சமாய்ப் பார்ப்பதுபோலவும், கேட்பதுபோலவும், பேசுவதுபோலவு மிருக்கும். நாம் எந்தக்கண்ணால் கனவிலுண்டாகுந் தோற்றத்தைக் காண்கிறோம்? எந்தச்செவியால் கனவில் கேட்கிறோம்?

இதுவொரு ஆச்சரியமல்ல. கனவில் விபரீதங்களெல்லாம் விபரீதமாகத் தோற்றுவதேயில்லை. இறந்தவர்களைக் கனவில் பார்க்கும்போது 'இவர்கள் இறந்தவர்களாயிற்றே! மறுபடி திரும்பி வருவது எப்படிமுடியும், முடியாதே' என்னும் ஞாபகம் கொஞ்சமாவது உண்டாகாது. இதுமட்டுமா? அப்படி யிறந்தவர்களைப் பார்த்து "நீ இறந்துபோய்விட்டாயாமே, உனக்குத் தெரியுமா?" என்றுகூடக் கனவில் கேட்கும்படியாயிருக்கும். தலைகீழாக ஓடும் புகைவண்டியும், தலைகீழாக முளைக்கும் மரங்களும் கனவிற்குச் சம்மதந்தான். செக்கச்செவேரென்றிருக்கும் நெருப்புத்தணலைக் கனிபோல வாயிற்போட்டுக்கொள்ளுவதும், குளிர்ந்திருக்கிறதென்றெண்ணுவதும் கனவில் பொருத்தமாயும் யதார்த்தமாயும் இருக்குமேயன்றி விபரீதமென்று சற்றேனும் மனதிற்குப்படாது. இந்தப் புத்திக்கேடு எங்கிருந்துண்டாயிற்று? உறங்குவதற்கு முன்னும் உறங்கியதற்குப் பின்னும் உள்ளபுத்தி கனவுகாணும் போதுமட்டும் எங்கேபோயொளித்துவிட்டது? ஒருவன், தண்ணீர் பள்ளத்திலிருந்து மேட்டிலேறுமென்று சொன்னால் அவனைப் பார்த்துப் பைத்தியக்காரனென்று யார்தான் நகையார்கள்? அப்படி நகைத்தவனுக்கே கனவில் பள்ளத்திலிருந்து ஜலம் மேட்டிற்பாய்வது லகுவாகவேயிருக்கும்.

இன்னம்பார்ப்போம். பிறவிக்குருடனொருவன் கனவுகாண்பதுண்டா? உண்டென்றால், ஒளி, வர்ணம், ரூபம், முதலியவைகளைக் கண்ணாற் கண்டறியாதவனாகையால் அவை இன்னவிதமென்றுகூட அவற்றின் தன்மை அவனுக்குத் தெரிந்திராதே; அப்

படியிருக்க அவன் கனவில்காணுங் காட்சி எத்தன்மைத்து! கனவில் ஒருமரத்தைக்கண்டதாக வைத்துக்கொள்ளுவோம். மரமின்னதென்றே பார்த்திராத அக்குருடனுக்கு மரம் எந்தரூபத்தோடு தோன்றும்? அவன் பார்க்கும் கனமரத்தில் வர்ணம் முதலியன தோன்றுமோ? இவைகளொன்றும் தோன்றாதென்றால் என்னவென்று அவன் கண்டதாய்ச்சொல்வான்? இதுபோகட்டும்; மிருகங்கள்முதலியனவற்றிற்குக் கனவுகாண்பது இயல்புதானோ? இவற்றையெல்லாம் பற்றி விசாரிக்கப்போனால் ஆச்சரியம் மேலிடுகிறது. கனவுகளில், ருசியும், வாசனையுமட்டும் புலப்படுவதாகத் தோன்றவில்லை. மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களில், வாய், மூக்கு இவ்விரண்டிற்குமுரிய சுவை, நாற்றம் நீங்கலாக மற்றமூன்று பொறிகளுக்குமுரிய விஷயங்களாகிய ஊறு, ஒளி, ஓசை என்னுமிவைகள் கனவில் அநுபவிக்கக்கூடியவைகளே. கனவில் வாயிற்குரிய ருசிபோனாலும் பேசுதலாகிய அதன்தொழில் போகாது; பேசுகிறதுபோலவும், பாடுகிறதுபோலவும் கனவிலுண்டு.

இதுவரையிலும் கனவிற்குரிய இலட்சணங்களையும், அதன் விபரீதானுபவங்களையும் பற்றிச் சொன்னோம். இனி விபரீதமாக இராமல் வகையாயிருக்கக்கூடிய கனவுகளைப்பற்றிச் சற்று விசாரிப்போம்:—இவ்விஷயங்களைப்பற்றி யாராய்ச்சிசெய்யும் தத்துவசாஸ்திரிகளில் அநேகர் பெரும்பாலுங் கனவுகளெல்லாம் மனோவிகாரத்தினாலுண்டாகுந் தோற்றங்களென்று சொல்லுகிறார்கள். ஏதேனும் ஒருவிஷயத்தில் அதிக கவலைவைத்திருந்து அந்தக் கவலையுடனே படுத்து நித்திரைசெய்யும்போது அது இயல்பாய்க் கனவில் வந்து தோன்றும். பொழுதுவிடிந்தால் பரீட்சைக்குப் போகவேண்டியவோர் இளைஞன் இராத்திரியெல்லாம் பரீட்சை நடப்பதுபோலவும், சிலகேள்விகளுக்குப் பதிலெழுதத் தெரியாதது போலவும், ஏதோ இவ்விதமாகவெல்லாம் இராமுழுதுங் கனாக்காண்பது வழக்கந்தான். இதற்குக்காரணம் மறுநாள் நடக்கப்போகிற பரீட்சையின் கவலையேயென்று சொல்லலாம்.

ஆனால் மனதைவிட்டுநீங்காது ஊன்றிநிற்கும் கவலையேயன்றி, முக்கியமில்லாதவையாய் மறந்துபோயிருக்கிற அற்பசங்கதிகள்கூட நாம் அவற்றைப்பற்றி நினையாதிருக்கையிலேயே நித்திரையில் ஒன்றோடொன்று சேர்ந்து பொருத்தப்பட்டுத் தொடர்ச்சியான ஒரு கனவாய்வந்து தோன்றுகின்றன; உதாரணமாக ஒரு கனவை



யிங்கெடுத்து உதாகரிப்போம். ஒருவன் எப்பொழுதோ தேசசரித்திரம்படித்தபோது யுத்தங்களில் பீரங்கிகளை யுபயோகிப்பது அவனுக்குத் தெரிந்தவிஷயமாயிருக்கும். அப்படிப்படித்த வெகுநாளைக்குப்பிறகு ஒருநாள் அவன் கனவில் இராமனுக்கும் இராவணனுக்கும் யுத்தம்நேர்ந்ததாகக் கனாக்கண்டு, அதிலிருதிறத்துச்சேனைகளும் புகைவண்டிமார்க்கமாயும், புகைக்கப்பல்மார்க்கமாயும் செல்லுவதாகவும், தானே ஒரு வானரவீரனாகவும், யுத்தத்தில் பீரங்கிகளை யுபயோகிப்பதாகவுமெண்ணி, அந்தப் பீரங்கிகளின் சப்தத்தைக்கேட்டுத் திடுக்கிட்டு அலறி விழித்துக்கொள்ளுகிறான். விழித்துப்பார்க்கையில் தான் கனவில் கேட்டசப்தம் ஊரில் அன்று நடக்கும் உற்சவத்திற்காகப் போட்ட அதிர்வெடியின் சத்தமாய்முடிகிறது. இக்கனவில், எப்போதோ எப்போதோ அறிந்திருக்கும் சிறுவிஷயங்கள் ஒன்றுசேர்ந்து தோன்றின. இதனால், நாம் கவலைகொள்ளாத அற்பசங்கதிகள்கூட கனவிற்குத் தோன்றுவது மியற்கையென்றெண்ணவேண்டியதாயிருக்கிறது.

முற்கூறிய கனவில் இன்னொருவிசேஷம் வியக்கத்தக்கது; என்னவெனில்;—கனவில்கேட்ட பீரங்கியின் சப்தமும் வெளியிற் போட்ட அதிர்வெடியும் ஒன்றாயிற்று! அது எப்படி? அதிர்வெடி போடுவோர்களென்று ஒரு யாமத்திற்குமுந்தியே தெரிந்தா இவன் கனவுகாண ஆரம்பித்து பீரங்கி வெடிசப்தத்திற் கொண்டுவந்து முடித்தான்? இல்லாவிட்டால் அதிர்வெடியின் சப்தத்தைக் கேட்டபின் அந்த சப்தத்தைப் பீரங்கியின் சப்தமாகவெண்ணினானென்று சொல்ல ஞாயமில்லையே. கனவுகாண ஆரம்பித்தபோதே இவன்கண்ட ஸ்வப்னயுத்தத்தில் பீரங்கிகளை யுபயோகிக்கிறார்களென்னும் எண்ணமுதித்தது; பிறகு கனவிலெழுந்த பீரங்கிசப்தத்தோடு அதிர்வெடியின் சப்தம்பொருந்தியது. இப்பொருத்தம் எப்படிநேர்ந்தது? இவன் எழுந்திருந்தது கனவில்தோன்றின சப்தத்தினாலா, அன்றி வெளியிற்போட்ட அதிர்வெடியின் சப்தத்தினாலா? இதை யோசித்துப் பார்க்கப்பார்க்க மிகவும் விந்தையாயிருக்கும். இவ்வாறு கனவிலெழும் ஓசைக்கும் வெளியோசைக்கும் பொருந்தக் கனவுகாண்பதை அநேகர் அநுபவத்திலேயே பார்த்திருக்கலாம்.

சற்றுமுன், வெகுநாளாய் நாம் மறந்துபோயிருந்த அற்பவிஷயங்களும் கனவிற்கு சாதகமாகுமென்று கூறினோமல்லவா? வே

ளொரு விந்தையான உபாயத்தினாற்கூட கனவுகாண்பதுண்டு. ஒருவன் நன்றாய் அயர்ந்து நித்திரைசெய்துகொண்டிருந்தபோதிலும், அவன்காதில் ஏதாவது சங்கதிகளை மெள்ளச்சொன்னால் அவற்றையே அவன் கனவுகாண்பான் அதுவும் வேற்றொருவராயிராமல் பழகினவர்களுடைய குரலாயிருந்தால் பின்னும் நல்லது. இவ்விதத்தால் நமக்கு வேண்டுவனவான கனாவை ஒருவன் நித்திரையில் புகட்டலாம்.

கனவைப்பற்றியுள்ள விசேஷமான அதிசயங்கள் இன்னம் சில உள—சிலசமயங்களில் விழித்திருக்கும்போது என்ன மன்றாடியோசித்தும் தெளியாத சந்தேகங்கள் கனவில்வந்து தெளிந்து போகின்றன. முக்கியமாய் வித்தியார்த்திகளில் சிலர் தங்களுக்குத் தெரியாத சில கணக்குகளையும் அர்த்தமாகாத பாடல்களையும் நித்திரையில் சந்தேகமறத் தெரிந்துகொள்ளுகிறார்களென்பதற்கு திருஷ்டாந்தம் எங்கும் அகப்படும்.

நித்திரையிற் கண்டகனவு ப்ரத்தியக்ஷமாய்ப் பலிப்பது இதைவிட ஆச்சரியம். ஒரு சங்கதியைக்குறித்து விசாரப்பட்டுக்கொண்டிருக்கையில் கனவில் அதன்முடிவு இன்னதென்று தோன்ற அக்கனவிற்கண்டபடியே பலித்ததை அநேகவிடங்களிற்கண்டும் கேட்டுமிருக்கிறோம். கம்பர் தமது இராமாயணத்தைப்பற்றிச் சிதம்பரத்தில் தீட்சதர்களின் கையொப்பம்வேண்டிப் பல்லிரண்டு வருடம் காத்திருக்கையில் ஒருநாளிரவில் ஸ்வப்னத்தில் தீட்சதர்களிலொருவர்குழந்தை யிறந்துபோகுமென்றும், அப்போது தன் காரியம் நிறைவேறுமென்றும் கண்டு பொழுதுவிடிந்ததும் அவ்வாறே முடிந்ததாகச் சொல்வதுண்டு; இவ்வாறே தற்காலத்திலும் பிரத்தியட்சமாக அநுபவசித்தமாயிருக்கிற திருஷ்டாந்தங்கள் நூற்றுக்கணக்காய் எங்குங்காணலாம். இவ்வாறிருப்பது நமக்குள்மட்டுமென்று; இவ்வுலகில் எங்குமுண்டு.

நாம் மனத்திற் கவலைகொண்டிருக்கும் விஷயங்களின்முடிவு கனவில்தோன்றுவதேயன்றி; நாமொன்றும் எண்ணாதிருக்கையிலேயே இனி வரப்போகிற சில நன்மைதீமைகளும் கனவில் முன்குறியாய்த் தெரிகின்றன. இதற்கு திருஷ்டாந்தம் இராமாயணத்திலும், தசகுமாரசரித்திரத்திலும், சீவகசிந்தாமணியிலும் இன்னம் பலநூல்களிலும் காணலாம். தற்காலத்தில் இவ்வாறு காணும் பிரத்தியட்ச திருஷ்டாந்தங்களுக்குக் கணக்கேயில்லை.



அன்றியும், மிக்க அந்நியோந்நியமாயிருக்கும் இருவர் ஏககாலத்தில் ஒரேவிதமாகக் கனவுகாண்பதுண்டு. முன் இந்த சஞ்சிகையில் 19-ம் பக்கத்தில் இரட்டைப்பிள்ளைகள்விஷயமாய் காந்தத்திற்கும் இரும்பிற்கும் உள்ள கவர்ச்சி சம்பந்தத்தைப்போல, மனிதர்க்குள்ளுமிருக்கலாமென்று சொல்லியிருக்கிறோமே; அவ்வாறான சம்பந்தத்தினாலேயே இருவருடைய கனவுகூட ஒத்திருக்குமென்றெண்ண இடமுண்டு.

இவ்வாறான கனவுகளை தெய்வசங்கற்பத்தாலுண்டாகின்றனவையென்று சிலர் சொல்லுவார்கள். அது எவ்வாறாயினும் முற்கூறியபடி கனவுகள் உண்டாகின்றனவென்பதற்குச் சந்தேகமில்லை. இவற்றில் நம்பிக்கையில்லாதவர்கள் அநேகர். அவர்களிவற்றையெல்லாம் பித்தவிகாரத்தாலுண்டாகும் மனத்தோற்றங்களென்றும், அவற்றைக்கண்டு பிரமிக்கலாகாதென்றும் சொல்லி, அவற்றை நம்புகிறவர்களைக் கண்டிக்கவும் நகைப்பார்கள். இவர்களில்அநேகர் வாயினால்மட்டும் இவற்றையெல்லாம் பொய்யென்பார்களேயன்றி, மனதில்மட்டும் இவர்களுக்கு ஐயம் நீங்கபாடில்லை. இவர்கள் பொய்யென்றுசொல்லும் இவர்கள்பேச்சைப் பொய்யாக்கி நாம் கூறுவது மெய்யென்றுகாட்டப் பலபலதேசங்களிலிருந்தும், சமயங்களிலிருந்தும் நூற்றுக்கணக்கான திருஷ்டாந்தங்களையெடுத்துக் கூறலாம். இதைக்குறித்து அடுத்த சஞ்சிகையில் விவரிப்போம்.

ஷேக்ஸ்பியர் மகாகவிசெய்த 'வணிகர்புர வர்த்தகன்' எனும்

## நாடகம்.

## முதலாம் அங்கம்

### இரண்டாம் களரி.

பௌருசி வீட்டில் ஓர் அறை.

பௌருசி, நேரிசை இவர்கள் வருகிறார்கள்.

பௌருசி. அடி நேரிசை! நிஜமாய்ச் சொல்லுகிறேன்; இப்பெரும்புவியில் என் சிற்றுடலைவைத்திருக்க எனக்காசையில்லை.

நேரிசை. தேன்மொழியே! எதிந்தலை யலுப்பு! இன்பந்திரண்டிருப்பதுபோலத் துன்பம்வந்தாற்றானன்றோ நீரப்படிக் கோரவேண்டும்? ஆனாலொன்று; அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாம்; சோற்றுக்கலைவாரும் சுகத்தில்

மிதப்பாலும் சமமாகவே மனவேதனைப் படுகிறார்கள்.
ஆதலால் மத்தியநிலையிலிருப்பவர் சுகம் மத்திய மசுக
மல்ல ; வரைகடந்த சுகம் விரைவில் நரைமயிருண்டாக்
கும் ; மிதயோகியே தீர்க்காயுசுள்ளவன்.

பௌரு. நல்ல கற்பனைகள் ! நன்றாய்ச் சொன்னாய் !

நேரி. அவைகளின்படி நன்றாய் நடந்தால் அவை பின்னும் நல
மாம்.

பௌரு. "சொல்லுதல் யார்க்குமெளிதாம், அரியவாம் சொல்
லியவண்ணஞ் செயல்." இன்னது செய்தால் நலமென்
றறிவதுபோலச் செய்வது அத்தனை யெளிதானால்,
குறுங்கோயி லெல்லாம் பெருமா லயமாம்
ஏழைக் குடியெலாம் வாழரா மனையாம்
பிறர்க்குரை நிலையில் தாவிருப் பவனைக்
குணக்குரு வென்று கூறவுந் தகுமே.
இன்னவை செய்தல் இனியவை யென்று
இருபதின் மர்க்கே யெளிதி லுரைப்பேன்,
அன்ன வண்ணம் அனுசரிப் பதுதான்
அருமை யருமை ! ஆய்ந்தறி மதியால்
மனிதர் நடக்க மாநெறி பகரலாம் ;
ஆயினு மென்ன அக்குளிர் நெறியை
காயும்மனது கடந்துதாவ் செல்லும் ;
இளமை வெறியா மிருமுயல் தானும்
பந்துவாய் நிற்கும் பகர்மதி விரித்த
வலையினைத் தாண்டி மற்றது பாயும்.
போகட்டும் ; இம்முறைவாதம் நான் கணவனைத் தெரி
ந்து வரிக்கும் வழிக்கு உதவாது.. ஐயோ ! தெரிந்து
வரிக்கவா ! அதேது ? என்மனதுக்கேற்றவனை வரிக்க
வும், ஏலாதவனைத் தள்ளவும் எனக்குரிமையேது ? இற
ந்த தகப்பனின் மனோசாஸனம், இருக்கும் மகளின்
மனோவிச்சையை இப்படி வாய்ப்பூட்டுப் பூட்டியிருக்கி
றது. எனக்கொருத்தனை வரிக்கவும் வலியில்லை ; யாரை
யுந் தள்ளவுங்கூடாது ; கேரிசாய் ! இது கடுமையல்லவா!

நேரி. உங்கள் தந்தையார் வெகு ஸாது; புண்ணியபுருஷர்.
புண்ணிய புருஷர்களுக்குச் சாமாவஸ்தையில் ஈசுவரா



வேசமுண்டு. ஆதலால்தான் பொன், வெள்ளி, ஈயம்
என்னும் உலோகங்களால் பெட்டிகள் செய்து அவர்
திருவுளச்சீட்டு இட்டுவைத்திருக்கும் சூழ்ச்சி. அவர்
நினைவின்படி வரிப்பவனெவனோ அவனே உம்மையும்
வரிப்பான். உம்மைச் சரியாய் விழையாதவன் சரியாய்
எவ்வளவும் வரிக்கறியான் ; இதற்கு ஐயமில்லை. இது
போகட்டும் ; இதுவரையில் உம்மீது ஆசைப்பட்டுவந்த
வேந்தர் மக்களில் யார் யார்மீது எவ்வளவு உருக்கம்
வைத்திருக்கிறீர்களோ சொல்லுங்கள் பார்ப்போம்.

பௌரு. நீ யவர்களை வரிசையாய்ப் பெயர்சொல்லிவா. அம்மு
றையே நானும் அவர்களை வர்ணித்துவருகிறேன்; அவ்
வர்ணனை யளவால் என் உள்ளக்கருத்தை யளந்துகொள்.

நேரி. முதலாவது, நெப்போலிய ராஜகுமாரர் இருக்கிறார்.

பௌரு. ஆமாம்; அவரைக் குதிரைக்குட்டியென்றே சொல்லவே
ண்டும். அவர் தம்குதிரையைப்பற்றிப் பேசுவதொழியவே
றொன்றுஞ் செய்வதில்லை. அக்குதிரைக்கு லாடம் தானே
கட்டுவாராம் ; இதையே அவர்கற்ற கலைஞானங்களால்
வந்த பெரும்பேறாகப் பெருமை பேசிக்கொள்ளுகிறார்.

நேரி. போகட்டும் ; பலாட்டின் நாட்டதிபதியோ !

பௌரு. அவர் எப்போதும் கடுகடுத்த வண்ணமாகவே யிருக்கி
றார் ; அவரைப்பார்க்கும்போதே " உனக்கு நான் வேண்
டாவிட்டால் வேறு தேடிக்கொள்" என்று சொல்லுகி
றதுபோலிருக்கிறது. மகிழ்ச்சிதருங் கதைகளைக் கேட்
பார் ; நகைப்பதுமட்டுமில்லை. பாலியத்திலே இத்தனை
யடுக்காகக் கவலை நிறைந்தவர் இனி வயதேறவேற துரு
வாஸமுனி யாவாரென்றஞ்சுகிறேன். இவர்களிருவரில்
ஒருவரை மணம்புரிவதைவிட எலும்பை வாயிற் கவ்விக்
கொண்டிருக்கும் பிணத்தின் தலையை மணம்புரியலாம்.
இவ்விருவர் வசத்தில் அகப்பட்டுக்கொள்ளாதபடி பக
வான் காக்கவேண்டும்.

நேரி. பிரான்ஸ் நாட்டுப் பிரபு லிபான் என்பவரைப்பற்றி
என்ன சொல்லுகிறீர்கள் ?

பௌரு. கடவுள் அவரைப் படைத்துவிட்டார் ; ஆதலால் அவர்
மானவகோடியிற் சேர்ந்தவரென்று தான் சொல்லவேண

டும். பகடிசெய்தல் வாஸ்தவத்தில் பாவமென்று நான்றிவேன். ஆனால் நான் என்னசெய்வேன், சும்மாவிருக்கக் கூடவில்லையே! சொல்லுகிறேன் கேள் :—அவர் குதிரை நெப்போலிய ராஜகுமாரர் குதிரையினுஞ் சிறந்தது; அவரது தர்வாடிக்கையோ பலாட்டின் பிரபுவின் கடுகடுப்பினும கடுமையுள்ளது. அவர் எல்லாரைப் போலு மிருப்பார்; அவரைப்போல ஒருவனும் இரான்; அவர் பறவைபாடக் கிறுகிறென்று தாண்டவமாடுவார்; தமது நிழலுடனேயே சிலம்பம் பழகுவார்; போதும்; அவரைக் கலியாணஞ் செய்துகொண்டால் இருபது பேரைக் கட்டிக்கொண்டாற் போலாகும். அவருக்கு என்மீது ஒருவேளை மோகத்தினால் வெறிபிடித்தால் அதற்குப்பதில் நானென்னசெய்யப் போகிறேன்; அவருக்குப் பிடித்ததுபோல எனக்கும் வெறி பிடித்தாலன்றோ தகுந்த பதில்செய்வதாகும்? ஆகையால் ஒருவேளை அவர் என்னைப் பழித்தாலும் போகட்டுமென்று மன்னிக்கத்தான் வேண்டும்.

நேரி. இருக்கட்டும்; இங்கிலாண்டின் பாலியபிரபு பால்கன்பிரீச்சைப்பற்றி யென்ன சொல்லுகிறீர்கள்?

பேளரு. அவருடன் நான் ஒருவார்த்தையும் சொல்லுகிறதில்லையென்று நீயறிவாயே. என்கருத்தை யவரறியார்; அவர் கருத்தை நானறியேன். அவருக்கு லாத்தின், பிராஞ்சு இத்தாலியன் பாஷைகளில் ஒன்றுந்தெரியாது; எனக்கோ இங்கிலீஷிலுள்ள ஞானம் ஒருதுட்டுப் பொறுமென்று நீ நியாயசபையேறிப் பிரமாணம்பண்ணுவாய். மனிதனுக் கிருக்கவேண்டிய வடிவம் அவருக்கு அமைந்துதானிருக்கிறது; ஆனாலென்ன செய்கிறது. ஊமைச் சாடை காட்டுபவனுடன் யார் பேசக்கூடும்? அவர் வேஷமோ பின்னும் விசித்திரம்; அவர் உள்ளாடையை இத்தலியினும், ஒட்டு ஜல்லடத்தை பிரான்ஸினும் தொப்பியை ஜர்மனியினும், அவர் அங்க சேஷ்டைகளையோ வெளியில் எல்லாவிடங்களிலும் விலைக்குவாங்கி யிருக்கிறாரென்று நினைக்கிறேன்.



## ஒரு எரிநக்ஷத்திரம் தன்வரலாற்றைத் தானே சொல்லிக்கொள்ளுதல்.

எரிநக்ஷத்திரத்திற்கு வாயிருந்து அது பேசக்கூடுமாயின் தன் வரலாற்றை அடியிற்கண்டவாறு சொல்லும் :—

நான் சிறியதோர் சடப்பொருளாயிருந்தேன். பூமியிலுள்ள பொருள்களைப்போலத் தான் என்னிடத்திலுள்ள பொருள்களும் அமைந்திருக்கும். என்னிடத்திலுள்ள பொருள்களுள் இரும்பு அதிகமாகவும், இலவணமும் கரியும் மிதமாகவுமிருக்கும். முதலில் எனது தூக்கம் இரண்டொரு பலந்தானாகையால் அப்பொழுது நீங்கள் என்னை வேடிக்கையாக உங்கள்கையில் வைத்துக்கொள்ளுவது வருத்தமன்று. அப்பொழுதெல்லாம் ஒரு சிறுகல்லைப்போலிருந்தேனெனினும், நீங்கள் காண்கின்ற கற்களுக்கும் எனக்கும் எத்தனையோ பேதமுண்டு; எனக்குள்ள வேகத்திற்கு அளவில்லை; நான் ஒருபக்கத்தில் நின்று வாடிக்கைப்பட்டதே கிடையாது; எந்நேரமும் சுற்றியவண்ணமா யிருந்தேன்; பெரிதான ஆகாயத்தில் நான் மனோவேகமாய்ப் பிரயாணஞ் செய்தேனென்றால் அதை நீங்கள் நம்பமாட்டீர்கள். பூமியில் அதிவேகமாகச் செல்லும் எப்படிப்பட்ட புகைரதத்தின் வேகமும் என்வேகத்திற் கொப்பாகாது; அதிவேகமாகச் செல்லுகின்ற துப்பாக்கிக் குண்டின் வேகத்திலும் எனதுவேகம் நூறுமடங்கு அதிகம்; சிலவேளைகளில் வேகம் மட்டமாகவும், சிலவேளைகளில் அதிகமாகவுமிருக்கும். நான் தினமொன்றுக்குச் செய்யும் யாத்திரையின் தூரம் பதினாயிரம் பத்து லக்ஷம் மைல் கணக்காயுள்ளது. இப்படி நான்செய்த பிரயாணம் கேவலம் மணிக்கணக்காயாவது நாட்கணக்காயாவது இராமல் வருஷக்கணக்காகவும், நூற்றாண்டின் கணக்காகவும், யுகக்கணக்காகவு மிருக்கும். நான் அழிந்துபோனதைப்பற்றிக் கேட்க ஆரம்பித்தால் இன்னும் அதிக விந்தையாக விருக்கும். இவ்வளவுக் கெல்லாமிருந்தும் இருந்தாற்போலிருந்து ஒரு நொடிப்பொழுதில் சிதைவுற்று அழிந்து எரிந்துபோனேன். நான் ஆகாயத்தில் ஸஞ்சரித்தபோது பெரிதான நக்ஷத்திரங்கள் பலவற்றின் அருகே சென்றதுண்டு; நீங்கள் வாழுகின்றஇந்தப் பூமியிலிருந்தவர்கள் என்னைக் காணும்படி தூரத்திலே காணப்பட்டிருந்தாலு மிருப்பேன், அப்பொழுது நீங்கள் என்னைப் பார்த்திருக்க மாட்டீர்கள்;

இக்காலத்திலே செய்யப்பட்டிருக்கின்றபடி அந்தக்காலத்தில் பெ
ரிதும் வலிமையுமுடையதுமான நச்சுக்குழாய்களில்லை. இப்படிக்
கெல்லாமிருந்தும் ஒருகாலத்தில் இந்தப் பூமியண்டைவந்து இக்
கோலமானேன். பூமியில் நீங்களிருக்குமிடத்திலிருந்து உங்களு
க்கு மேலே ஆகாயத்தில் வெகுதூரமளவும் வாயு என்கிற சமுத்
திரமிருக்கிறது. இவ்வாறான ஆகாயசமுத்திரம் பூமிக்குமேல் 200
மைல் அளவிருக்கிறது; இந்த வாயுசமுத்திரத்தில் மேலே செல்லச்
செல்ல வாயு அதிகநுட்பமாயிருக்கும். இந்தப் பூமியை நீங்கள்
ஆகாயத்தில் தூரத்திலிருந்து பார்க்கக்கூடுமாயின் இந்தவாயு
சமுத்திரத்திற்கு வெகுதூரத்துக்கப்பால் ஆகாயத்தில்ஒன்றுமிராது
அந்தவிடத்திலேதான் நான் அற்புதமான வேகத்தோடே யாத்
திரைசெய்தேன்; இந்தபூமி உருண்டைவடிவமா யிருப்பதையும்
இதைச்சுற்றிலும் பலவகையான வாயுக்கள் படிப்படியா யட
ர்ந்து சூழ்ந்திருப்பதைக் காண்பீர்கள். விரைவாகச் செல்லு
மவைகளைச் செல்லவொட்டாதபடி தடுப்பது இந்த வாயுவேயாம்;
இப்படிக்கு வாயுவினால் தடுக்கப்படாதிருந்தால் அவை சென்று
கொண்டேயிருக்கும். புகைவண்டித் தொடரின் கதி மட்டுப்படு
வதும், அதிவேகமாகச் செல்லுகின்ற பீரங்கித்துண்டுகள் செல்ல
மாட்டாமல் தங்குவதும் இந்த வாயுவினால் தடுக்கப்படுவதனாலே
தான். என்னைப் போன்றவர்களுக்கு உங்கள்பூமியின் வாயுவில்
செல்லுவது அசாத்தியம். இந்தவாயுவினாற்றான் நான் சிதைவுற்
றேன். நீங்கள் என்னைப்பிடித்து அழிக்கும்படி விரித்திருக்கின்ற
இந்த வாயுவலையை நான் கிட்டாமலிருந்தவரையில் எனக்கு ஒரு
குறையுமில்லை; ஒருகாலத்தில் நான் இந்த வாயுசமுத்திரத்திலே
யகப்பட்டு அழிந்துபோவதற்கு மயிரிழை தப்பினேன்; எனக்கு
ள்ள அதிகவேகத்தினாலே அந்த ஆபத்துக்குத் தப்பினேன். நா
னுண்டாகி இப்பொழுது எத்தனையோ யுகங்களாய்விட்டன; இத
ற்குமுன்னே எத்தனையோமுறை மற்ற அண்டங்களோடுமோதி
அழிந்துபோகும்படி நேர்ந்ததுண்டு. கடைசியில் நான் பூமியண்டை
அடிக்கடி கிட்டிவந்தேன். ஆகலினால் அப்பொழுது நான் உங்கள்
பூமியண்டைவந்து வாயுமண்டலத்தின் மேற்பங்கைத் தொட்டு
உங்களுக்கு எனது அழகிய ஒளியைக் காட்டும்படியாக
நேர்ந்தது; அந்தப் பயங்கரமான ஆபத்தை இப்போ நினைத்தாலும்
எனக்கு நடுக்கமுண்டாகிறது; அவ்வாறு எனக்குண்டான ஆபத்



தினால் உங்களுக்குத் தீங்கொன்றுமில்லை; நான் அழியும்போது
அது பூமியிலுள்ளவர்களுக்கு நல்ல வேடிக்கையாயிருக்கும்; அப்
பொழுதுதான் நீங்கள் என்னைக்கண்டு எரிநக்ஷத்திரமென்றும்,
விண்வீழ்கொள்ளியென்றுஞ்சொல்லுவீர்கள். பொருள்கள் ஒன்றோ
டொன்று பலமாக மோதிக்கொண்டு உடைந்து தவிடுபொடியா
கும். தரையில் புகைவண்டித் தொடர்களும், கடலில் நீராவி
மரக்கலங்களும் செல்லுகையில் ஒன்றுக்கொன்று எதிர்ப்பட்டு
மோதிக்கொள்வதனால் உடைந்து தகர்ந்து போகின்றனவென்று
நாம் பலமுறை கேட்கிறோம். அவ்வாறு நான் பலமானவற்றோடு
மோதி எனக்கழிவுண்டாகவில்லை; உங்கள் பூமியின் மேல்
அதை மூடிக்கொண்டிருக்கிற ஆவியின்மேலோடு ஓட்டினாற்போலப்
பட்டேன்; அந்தவாயு மிகவும் நுட்பமானதாயிருந்தும் அது
என்னை அழித்துவிடுவதற்குப் போதுமான வலிமையுடையது.

அத்தனைவேகமாக விழுகையில் என்மேல் வாயுக்கள் பட்டு
என் உடம்பெல்லாம் நெருப்பாய்ச்சுட்டது. இரண்டு சிறுகட்டை
களையெடுத்து ஒன்றோடொன்று படும்படி அழுத்தித் தேய்த்தால்
அவற்றினின்றும் நெருப்புண்டாவதைப்போலத்தான் நான் வரும்
போது என்மேல் வாயுப்பட்டு எனக்குச் சூடுண்டாயிற்று. துப்பா
க்கி வெடி தீரப்பட்டவுடன் அதினின்றும் குண்டுபோய்ப் பாயுங்
குறியுள்ளவிடத்திற்குச் சென்று அந்தக்குண்டில் ஒரு துண்டை
யெடுத்துப் பார்ப்பீர்களானால் அது சூடாயிருப்பதைக் காணலாம்;
வாயுவின்மேலே படுவதனால் அத்தனைசூடு உண்டாகிறதென்பது
உங்களுக்கு ஆச்சரியமாகத் தோற்றும்; அந்தக்குண்டு விழுந்த
வுடன் அதன்சுடுகை பொறுக்கக்கூடாதபடி அதிகசூடுள்ளதா யிருக்
கும்; இத்தனைசூடு அதற்கு எங்கிருந்து உண்டாயிற்று? துப்பாக்கி
யின் பிடியை முடுக்குவதற்குமுன்னே அதற்குள்ளிருந்த குண்டு
குளிர்ந்திருக்குமென்பது நிச்சயம்; துப்பாக்கிக்குள்ளிருந்த வெடி
மருந்தினாலும் ஒருவாறு சூடுஉண்டாவதுமெய்யே; ஆயினும்அந்த
மருந்தினாலே மட்டுந்தான் அத்தனை சூடுண்டாயிற்றென்று சொல்
லுவது கூடாது; மருந்துடன் சேர்த்துக் கெட்டிக்கப்பட்டிருக்கிற
காகித முதலியவற்றோடு பட்டு அவ்வளவு உஷ்ணமுண்டாகிறது;
அன்றியும், குண்டு துப்பாக்கியின் குழாயில்உரைவதனாலும், குழா
யினின்று வெளியே வந்தபின்பு வாயுக்களோடுபட்டு உரைவதனா
லும், சூடுண்டாகிறது. உங்கள் பூமியின் வாயுவினால் நான்கூட

உஷ்ணமாவது எப்படியென்று நீங்கள் ஆச்சரியப்படவுங் கூடும்; எனது வேகம்துப்பாக்கிக் குண்டின் வேகத்திலும் நூறுமடங்கு அதிகமாகையால் அவ்வளவுக்கவ்வளவு சூடும் அதிகமாகின்றது. ஆனதினால் எனக்குண்டாகும் உஷ்ணத்துக்கு அளவில்லை. முதலில் அதிக சூடுண்டாகும்; பின்பு செக்கச்செவேரென்று பழுக்கக் காய்ந்த குண்டுபோலாவேன்; பின்பு இமைப்பொழுதிற்குள்ளெல்லாம் இன்னுஞ் சூடேறி மத்தாப்பு வெளிச்சம்போல வெள்ளவெளேரென்றாகிப் பாலாயுருகிப் பெருகிச் சிதறித் தூளாகச்சிந்திக் கிடப்பேன். என்னிடத்துள்ள பூதங்களிற்பெரும்பான்மையானவை ஆவியாகமாறி ஆகாயத்தோடு ஆகாயமாகக் கலந்து போகின்றன. நீங்கள் பூமியின்மேல் நின்று என்னைப் பார்ப்பீர்களா உங்கள் கண்ணுக்கு நான் புலப்படேன் ஆனதினாலேதான் நீங்கள் எனக்கு இயல்பாகவுள்ள வஸ்துவைக் காணக்கூடாமல் மத்தாப்பொளியைப்போலக் கீழேவிழுகின்ற என்னைக்கண்டு, வானத்தினின்று நக்ஷத்திரம் எரிந்துவிழுகிறதென்று சுட்டிக்காட்டி ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். இவ்வுலகில் எந்தப்பொருளும் அடியோடு அழிந்தேபோய் விடுகிறதென்பதில்லை; காணப்படுவனவெல்லாம் அழிந்துபோயினும், அவையனைத்தும் வேறு ரூபமடைகின்றன. நான் இப்படிக்கெல்லாம் உருக்குலைகிறேனெனினும் கடைசியில் நுட்பமான ஆவிகளாகமாறி உங்கள் தலைக்குநேரே ஆகாயத்தில் வெகு தூரத்துக்குமேலே ஆறிச் சுருங்கியிருக்கிறேன். அப்படி ஆறிக்குளிர்ந்தபின் மீண்டும் ஒன்றாகச் சேருகிறதில்லை. நான் விண்ணின்று விழும்போது சிறிதுபாகம் கரிப்பொடிகளைப் போலப் பூமியில்வந்து விழுவதுமுண்டு; இந்தப்பொடிகள் வாயுவின் சம்பந்தத்தினால் பூமிக்குள்ளே கலந்துவிடும். எரி நக்ஷத்திரங்களின் சிறுதுணுக்கைகள் ஆல்பஸ்மலையில் மனிதசஞ்சாரமில்லாதவிடங்களில் இறைந்துகிடக்கும். பூமியில் விழுவதுபோலவே கடலிலும் பொடிகள் எப்பொழுதும் விழுந்துகொண்டேயிருக்கும்; ஆகாயத்திலே நீடுழிகாலம் வசித்தது கடலின் அடித்தலத்துக்குச் சென்று ஜலத்தில் மூழ்கிக்கிடப்பது என்ன ஆச்சரியம்.

வீடுகளுக்குள்ளே சூரியகிரணத்தில் அலைகின்ற பரமாணுக்களுள் அதிகமானவை இந்தப் பூமியைச் சேர்ந்தவைகளே. இந்தத் தூசிகள் வீடுகளிலுள்ள பண்டங்களிலெல்லாம் படிவதை நாம் எப்பொழுதுங் காணலாம். ஆகாயத்தில் நெடுங்காலம் இடைவிடாது ஓடிக்கொண்டிருந்த கோளங்கள் பூமியினருகே வந்து அதன் வாயுவின் சம்பந்தத்தால் சுட்டெரிக்கப்பட்டு இவ்வாறு பொடியாக நமது வீடுகளிலுள்ள மூலைமுடுக்குகளில் தங்கி அசையாமல் இளைப்பாறுவது எத்தனை வியப்புடையது?



## பெண் கல்வி.

மனிதர்களில் ஆண்களும் பெண்களும் உலகவாழ்க்கைக்குப் பெருந்துணை. ஸ்திரீகளில்லாவிடில் மனிதன் பலவிதத்திலும் உலககாரியங்களை நிறைவேற்றுவதில் இடர்ப்படுவான். பெண்களும் விவேகமுள்ளவர்களாய்த் தாயார், கூடப்பிறந்தவர்கள், தகப்பனார், அயல்வீட்டார், புருஷன், பாட்டனார், பாட்டியார் மற்றுமுள்ள நெருங்கின பந்துக்கள், தோழன்-தோழிமார்கள், மாமியார், மாமனார் முதலிய பலரிடத்திலும் நாகரீகமாக நடந்துகொள்ள வேண்டுமானால் மிகவும் ஜாக்கிரதையாக வீடுகளில் தாயார் தமக்கைகள் அயல்வீட்டுத் தோழிமார்கள் முதலிய பலபெயர்களும் எப்படி நடந்துகொண்டுவருகிறார்களென்பதையும், அவர்கள் சந்தோஷமாயிருக்கிற காலங்களிலும் கஷ்டப்படுங் காலத்திலும் நோய்கொண்ட காலத்திலும் வீட்டு ஜனங்களிடத்திலும் வெளிஜனங்களிடத்திலும் எவ்விதமாக நடந்துகொண்டு எவ்வித உதவிகளைப் பெறுகிறார்களென்பதையும்; அதிதிகள், ஏழைகள், பெரியோர்கள் முதலானோர் வீட்டிற்கு வருங்காலத்தில் அவர்களுக்கு எவ்விதமான உபகாரங்களை எப்படிச் செய்கிறார்களென்பதையும் ஊற்றமாய்ப் பார்த்து வந்து நாளா சறுதியில் பழகிவந்தாலல்லாமல் இல்வாழ்க்கை சுகப்படாது. குழந்தைகளாய்த் தொட்டில்களில் படுத்துக்கொண்டு அங்குமிங்கும் மலரவிழித்துக்கொண்டும், சத்தங்களையும் வார்த்தைகளையும் கேட்டுக்கொண்டும் சிறுகுழந்தைகளாயிருக்குங்காலந் தொடங்கிப் பெண்கள் உலககாரியங்களில் பழகவேண்டியதாயிருக்கின்றதல்லவா? பலர், பெண்கள் இல்வாழ்க்கையில் சீராய் நடந்து வர வேண்டுமானால் புருஷர்களைப்போல அவ்வளவு சிரமப்பட்டுக் கற்றுக்கொள்ள வேண்டிய காரியங்களும் இல்வாழ்க்கைக்கு வேண்டிய செலவுகள், ஆடை ஆபரணங்கள், வீடு தோட்டம் முதலிய பலகாரியங்களைச் செய்யவும் பல பண்டங்களைச் சேகரிக்கவும் முக்

கிய சாதனமாயிருக்கிற பணத்தைச் சம்பாதிப்பதிலுள்ள வருத்தமு மில்லையென்று என்றுகிறார்கள். இது பெருங்குற்றமேயாம்.

ஒருத்தி தன்புருஷனுக்கும் தாயார் தகப்பனார் முதலிய பந்துக்களுக்கும் மனக்கோணாமலும், மாமனார், மாமியார், நாத்திமார் முதலியவர்கள் செய்துவரும் காரியங்களை மவுனமாய்ப் பார்த்துவந்து அவர்கள் தன்னைத்தூறாமலும், அவர்களுடன்வரம்புகடந்து சண்டை சச்சரவுகளில் தலையிட்டுக்கொள்ளாமலுமிருந்துகொண்டு தன்மனதில் கவலைநுழையாமலும், தன்னை உள்ளிலும் வெளியிலும் பாதுகாத்துக்கொண்டு உதரநிமித்தம் பலவிடங்களிலும் ஓடியலைந்து வாடி வதங்கிவரும் புருஷன் வீட்டில் நுழைந்தவுடனே அவைகளெல்லாவற்றையும் மறந்து அவன் மனக்களிப்புடன் மறுநாள் வீட்டைவிட்டு வெளியில் போகும்வரையிலும் பிறவித்துன்பத்தையும், மனைவாழ்க்கையில் சகஜமாய்க் குடும்பங்களில் நேரிடும் கஷ்டங்களையும் மறந்து இன்புற்றிருக்கும்படிச் செய்யும் சாமர்த்தியமும் இங்கிதமும் புத்திசாலித்தனமும் அமைதியும் எளிதில் கற்றுக்கொள்ளக் கூடியதன்று. இது பலநாளிலும், பலசமயங்களிலும், வெகு ஊற்றம்வைத்துச் சம்பாதித்தால்மட்டும் கிடைக்கும்.

பல தேசங்களுக்குப்போய்ப் பல பாஷைகளிலும் தேர்ந்து பலவிதக் கல்விகளிலும் வித்தைகளிலும் பழகி பண்டிதர் என்றும், தத்துவசாஸ்திரி என்றும், நீதிபதி, மந்திரி, பிரதானியென்றும், பாடகனென்றும், ஞானியென்றும், பிரசங்கியென்றும், பற்பல விதமாக மனிதர்கள் கொண்டாடும்படி கீர்த்திபெற்றவர்களும் பெண்கள் கற்றுக்கொண்ட இல்வாழ்க்கைக் கல்வியின் பிரயோஜனத்தை வீட்டில் சுகமாய் அனுபவித்து வருவார்களானால் நமது தமிழ்நாட்டுப் பெண்களின் அவ்விதமான கல்வியின் மேன்மையைச் சுலபமென்று நினைப்பவர்கள் உலக அனுபவத்தில் தேறாமல் வெளிப்போக்காய்மட்டும் சங்கதிகளைக் கருதக்கூடிய சாமானிய மனிதர்களாவார். நாமெல்லோரும் ஆண்பிள்ளைகளாக விருந்துகொண்டு பெண்களைப்பற்றி நிதானிக்கின்றோமல்லவா? படைப்புக் கிரமத்தில் பெண்களின் சரீரநிலையையும் மனோநிலையையும் புருஷர்களைப்போலத் தாராளமாய்ப் பலசங்கதிகளிலும் பழக வகையில்லாமல் தேசவழக்கப்படி பலவிதத் தடைகளுக்குட்பட்டுக் கர்ப்பவாதைகளுக்கும் பெண்களுக்குரிய வேறு துன்பங்களுக்குமுள்ளாகி குழந்தைகளை மார்பிலும் தோளி



லும் மடியிலும் இரவிலும் பகலிலும் காத்துக்கொண்டு தூங்கும்போது தூங்கியும் விழிக்கும்போது விழித்தும் கண்ணிமைகள் கண்களைக்காப்பதுபோல் காத்துவருவதிலுள்ள கவலையையும் மற்றுமுள்ள வருத்தங்களையும் நாம் பார்த்து நிதானித்தால் மட்டும் நாம் ஆண்பிள்ளைகளென்று சொல்ல வாயுண்டாம். ‘தலைவலியும் சுரமும் தனக்குவந்தால் தெரியும்’ என்கின்றபடியே பெண்கள் தாமாகவே அனுபவத்தில் உணரும சுகதுக்கங்களைப்பற்றி நாம் விவரிப்பதெல்லாம் சங்கீதத்தில் பழக்கமில்லாத சபாநாயகன், பலர்கூடியிருக்கிற சபையில் பிரம்மாநந்த பரதேசியின் பாட்டைக் கேட்டுத் தனக்கின்பம் எள்ளளவு மனுபவத்திலில்லாமலிருக்க அங்கே வந்தவர்களின் திருப்தியின்பொருட்டுப் பசுக்களும் சிசுக்களும் தலையையாட்டுவதுபோலத் தலையையசைப்பதுக்குச் சரியாம். உலகத்தில் முக்கியமாகக் கொண்டாடப்படுகின்ற திரிமூர்த்திகளும் அவர்கள் பத்தினிகளாகிய பெண்களுக்கிரங்கிப்பலரகசியமான சங்கதிகளை வெளியிட்டிருக்கிறார்களென்றால் நாம் நமது பெண்களுக்கிரங்கி அவர்கள் விர்த்திக்குவேண்டிய சாதகங்களைக் கற்பிக்கவேண்டியதும் நமது கடமையாகாதோ? நமது பெண்கள் இல்வாழ்க்கைச் சுகத்தை யவர்களுடைய புருஷர்மார் அனுபவிக்கும்படி உள்ளன்போடு செய்யும் நடையுடைபாவனை மதுரவாக்குமுதலிய விசேஷமான இங்கிதங்கள் எந்ததேசத்திலும் எங்கும் கிடையா. நமது தேசத்துப் பெண்களுக்கு வேறு நாடுகளிலுள்ள பெண்களைக் காட்டிலும் புருஷர்களிடத்தில் உள்ளன்பு மிகுதியாயிருக்கிறதென்பது யாருக்குந் தெரிந்ததேயாம். இப்போதைய இராஜாங்கத்தார்கள் பெண்கள் விஷயத்தில் கொடுந்தண்டனை விதித்தல் கூடாதென்பது முதலிய பல விதிகளை யேற்படுத்திப் பெண்களிடத்தில் ஜீவகாருண்ணியத்தை விசேஷமாய்ப் பாராட்டிக்கொண்டு வருவதினாலேயே அவர்கள் கல்வியிலும் செல்வத்திலும் நீதிபரிபாலனத்திலும் சிறந்து விளங்குகிறார்களென்பது நமது கருத்து.

நமது பெண்களுக்கு இல்வாழ்க்கையைச் சுகமுள்ளதாக்கப் பழகுவதில் நெடுங்காலம் சென்று விடுகின்றதாகையால் வீட்டுக் கணக்குகளைவைத்துவந்து செட்டாய்க் குடித்தனம் பண்ணவும், ஒவ்வொரு காலங்களில் தாமாகவே பந்துக்களுக்கு நேரில் கடிதமெழுதவும், அவர்களிடமிருந்துவருங் கடிதங்களை நேரிற்படித்துக் கொள்ளவும் சிறந்த புத்தகங்களைப் படிக்கவும் தெரிந்திருந்தாற்போ

தும். இப்படிப்பட்ட கல்விக்குக் காலபேதத்தை அநுசரித்துத் தமிழில் எளிதான நடையில் சில புஸ்தகங்கள் எழுதப்படுவது நலம். பணப்பேய் பெரும்பாலும் போகாதவழிகளில் போக்கிக் கவலையையுந் துன்பத்தையும் பெருக்கித் தூக்கத்தையும் கெடுத்து விடுகின்றது. விவேகிகளான தனவான்களுக்கு எப்போதும் மனச் சந்தோஷமும் கவலைக்குறைவும்இவைகளினாலுண்டாகும்; உலகவின்பமும் நடந்துகொண்டேயிருக்கும். புருஷன் பலவிதமாய் உழைத்துத் தேடிக்கொண்டு வருவதை வீணே விழலுக்கிறைக்காமல் காலம் இடம் பெரியோர் கட்டளை இவைகளை யநுசரித்துச் செட்டாய்க் குடித்தனம்பண்ணத்தெரிந்த பெண்ணில்லாவீடு அரசனில்லாத அரண்மனைபோலாகும். பணத்தைச் சம்பாதிப்பதிலும் காப்பாற்றுவதுதான் அதிக கஷ்டம். காப்பாற்றுதலிலும் வீட்டிலுள்ள பெண் பணம் செலவழியும் வழியைக் கவனித்துச் சீராய் நடந்துவருவதே பெருங்காப்பாகும்.

"ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை."

என்கிறபடியே பணமுதலிய வரும்வழி பலவாயுஞ் செலவழிகிற வழி சிலவாயு மிருந்தால்மட்டுமே இல்வாழ்க்கை சுகப்படும். இப்படி நடத்தப் பெண்களிடமிருக்கும் கல்வி ஒன்று நீங்கலாகப் புருஷன் எவ்வளவு கல்விகேள்வி செல்வமுடையவனானாலும் அவனுக்கு வீட்டில் சுகமென்பது மருந்திற்கும் கிடைக்கமாட்டாது.

தையல்வேலை, கோலமிடல், விவாகாதி சுபகாலங்களில் சொல்லத்தக்க பாட்டுகளைச் செவிக்கினிதாகப் பாடப்பழகுதல், மரப்பாவை முச்சில்முதலியவைகளை வைத்துக்கொண்டு கூட்டான்சோறு பொங்குதல், அம்மானை பந்து கழற்சிக்காய் ஆடும்போதும், கோலாட்டம் போடும்போதும் நல்லபாட்டுகளைப் பாடப்பழகுதல், சித்திரம் எழுதல் முதலிய பலகாரியங்களுடன் குழந்தைகளை தொட்டிலிட்டுத் தாலாட்டுதல், விளையாட்டுக் காட்டுதல் முதலிய பலகாரியங்களிலும் பெண்கள் பழகவேண்டியிருப்பதால் புருஷனைப் போல அதிகமாகக் கல்வியில் பழக இடமில்லை. இதுமட்டோ? வீட்டில் தாயார்முதலானோர்கள் சமைக்கையிலும், வேறு வீட்டுவேலைகள் செய்கையிலும் கையாளாக விருந்துகொண்டு வேண்டிய பண்டங்களைக் கொண்டுவந்து கொடுப்பதிலும், அருகில்நின்றுகொண்டு கைபாகம் செய்பாகங்களைக் கவனிப்பதிலும் நமது பெண்கள்காலம்



சென்று விடுகின்றதல்லவா? நமது பெண்கள், புருஷர்களுக்குச்சமமாய் உலக வியாபாரங்களில் தலையிட்டுக் கொள்வார்களானால் இல்வாழ்க்கை யின்பமாயிருப்பது எப்படி? நமது நாட்டிலுள்ள பெண்களுக்கு இல்வாழ்க்கை யினிதுபெறச்செய்ய வேண்டுமளவு கல்வியிருந்தால் அவ்வளவே போதுமானது.

## நிலத்தின் நிறத்தால்விளையுங் குணபேதம்.

சூரியனுடைய காந்தியும், உஷ்ணமும் பயிர்களுக்கு வேண்டுமென்பது யார்க்குந் தெரிந்ததேயாம். இவையிரண்டும் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமோ அவ்வளவுக் கவ்வளவு பயிர் நன்றாகவளரும். இவையிரண்டு மில்லாவிடில் பயிர் நன்றாய்ப் பலியாது. மனிதரைப்போ லல்லாமல் பயிர் வெயிலிலிருக்க விரும்பும். நிலம் வெண்ணிறமாகவாயினும், நீலக்களியாகவாயினும், மந்தாரை நிறமாகவாயினும் செக்கச் செவேலென்றாகவாயினு மிருந்தால் வெயில் உஷ்ணமும், ஒளியும் அவற்றில் உறைக்கிறதில்லை; ஆதலினாலேதான் இவ்வாறான பூமியில் பயிர் ஓங்கி வளருகிறதில்லை. பூமி கருநிறமுள்ளதானால் அதற்குச் சூட்டையும், ஒளியையும் தன்னிடத்தே பற்றி யிழுத்துக்கொள்ளும் வலிமையுண்டு. வெளுப்பு, சிவப்புமுதலிய நிறங்கள் சூட்டையும் ஒளியையும் பிரதிபிம்பிக்கும். கறுப்புநிறம் தன்னுள் அவற்றை அடக்கிக்கொள்ளும். ஆதலினால் வெண்ணிறம், அல்லது சிவப்புநிறமுள்ள பூமியில் பயிர் நன்றாக வளராவிடில் அதன்மேலோடு கருமண்ணைக் கொஞ்சம் பரவலாகப் போட்டால் அதனால் அதன்வழியாகப் பயிருக்குவேண்டிய சூடும் ஒளியும் வேண்டியவரைக்குச் சென்று பயிர் நன்றாக வளரும். ஸாகுபடி செய்யப்படுகிற நிலங்களின் வெவ்வேறான நிறங்களைப் பார்த்தறிவதனால் இந்த உண்மையை யாரும் எளிதிலறிந்துகொள்ளலாம். "கைபட்டால் கண்ணாடி" என்று சொல்லும் வண்ணம் நிலத்தை உட்படுத்திக்கொண்டேவந்தால் மேல்நிலம் நாளடைவிலே கறுத்து நன்றாக விளைகின்ற சிறப்புடைய நிலமாகும். இவ்வாறு செய்வதனால் செழிப்பில்லாத நிலங்களும் நல்ல செழிப்புள்ளனவாகும்.

## எருவை எப்படிக் குவித்துவைப்பது?

வேளாண்மை செய்பவர்களுக்கு எரு முக்கியமானது. செத்தை குப்பைகளைப் பெருக்கிக் கூட்டி ஓரிடத்தில் குவித்துவைத்திருந்தால் அவைமக்கி நல்ல எருவாகுமென்பதைப் பெரும்பான்மையோர் தெரிந்துகொள்ளுகிறதில்லை. அப்படிக்கின்றி ஒருவாறு தெரிந்தவர்களும் இப்படிச் செய்கிறதுமில்லை. நமது நாட்டில் சாதாரணமாக ஒருவேளை அப்படிச் செத்தை குப்பைகளைச் சேர்த்து வைத்தாலும் அவற்றைக் குழியிலிட்டு வைப்பது வழக்கம். இப்படிச் செய்வதில் எருவுக்கு இரண்டுவிதமான பாதகமுண்டாகிறது: குழியின் கீழ்மண் எருவிலுள்ள ஸாரத்தை வாங்கிவிடும்; வெயில் காய்வதனால் காற்றின் வழியாகக் காற்றிலும் ஸாரம்போய்விடும். ஆகவினால் தோட்டத்தின் ஒரு மூலையில் ஆழமில்லாதபடி பெரிதான சதுரக்குழி யொன்றை வெட்டி அதன் அடிப்புறத்தில் கற்களால் சுண்ணாம்புகொண்டு தளவரிசை செய்யவேண்டியதுமன்றி வெயிலாலும் மழையினாலும் கெட்டுப்போகாதபடி மேலே கூரைபோடவேண்டும்; காற்றோட்டம் தாராளமாக இருக்கும்படி நாலுபக்கமுந் திறந்திருக்கும்படி செய்யவேண்டும். இவ்வாறு நிர்மிக்கப்பட்ட குழியில் நாள்தோறும் செடி, பூண்டு எத்தனைவிதமான எருக்கள் குவியுமோ அத்தனைக் கத்தனை நன்று. அந்தக்குழியில் குவியும் எரு காய்ந்து போகாதபடி ஆடு மாடுகளின் மூத்திரத்தையும், வீட்டிலிருந்து வெளியில் செல்லும் கழுநீர் முதலான நீரையும் அதிலே பாயவிட்டு அப்போதைக்கப்போது கிளறிக் கொடுத்துக்கொண்டு வரவேண்டும். இவ்வாறு செய்துகொண்டுவந்தால் நாளறுதியில் அந்தச் செத்தை குப்பைகள் நன்றாக மக்கிச் சிறந்த எருவாகும். இந்த எருவில் பயிர்களுக்கு முக்கியமாகவேண்டிய உப்புவாயு உண்டாவதனால் இதைப்பயிருக்கு எருவிட்டால் பயிர் நன்றாகச் செழித்து வளர்ந்து கைகண்ட பலனைக் கொடுக்கும்.

## தார்கலந்த தண்ணீர்.

தோட்டப் பயிர்களை அழிக்கும் சிறு பூச்சிகளைக் கொல்ல ஐரோப்பா கண்டத்தில் தண்ணீரில் தாரைக்கலக்கி பூச்சிபிடித்த செடிகளுக்கு வார்க்கிறார்களாம்.

JANANANDINI.

ஜநாநந்திநி.

புஸ்த. 1.] மேமீ 1891. [இல. 5.

## பள்ளியெழுச்சி
என்னும்
## பிராதக்காலவந்தனம்.

பரிதியி னொருசிறு கதிர்வரும் வெளியே
 பலவனுந் திரளின மிலகுறு முறையே
கருதரு மினநருட் கதிர்வர வெளியெம்
 கரணமும் புவனமும் புரணம துறவே
உருவற விழுங்கிய வுறக்கம்விட் டெழுந்தோம்
 உனதருள் பரவிட வுவந்தில னிருந்தோம்
இருதயத் திரிச்சக மிவர்ந்திடு முனமே
 எம்பெருமா னெம்மு னெழுந்தரு ளாயே. (1)

மனமினொ டுணர்ந்தொட வாக்குமைத் தீண்ட
 வருந்தியும் வலிபெறு திமிர்ந்திவண் மீண்ட *
எனவுனி முனிவர ரனைவருங் கூறி
 இனைத்தன ரெனிலிதை யெங்ஙன மிழிக்
களவிறு நினதிசை கருதுவஞ் சிறியேம்
 கனுழ்வதே தொழிலலாற் புகழ்வகை யறியேம்
இனியுன தருளல தேதையு மதியேம்
 எம்பெருமா னெமமு னெழுந்தரு ளாயே. (2)

ஒன்றிய மாநுட வுயர்குணம் போக
 உண்பது முடுப்பது மேகதி யாக

* "यतोवाचोनिवर्तन्ते अप्राप्यमनसासह" इत्यादि ॥

நின்றுழ லாவகை நெஞ்சினு ணின்று
நிஷ்கள சித்தமே சத்தி யென்று
நன்றுறு தீதுணர் நடுநிலைப் பேறே
நல்கிய நின்னருட் கென்னைகைம் மாறே
இன்றுமத் தொல்லரு ளுமையுவந் தாள
எம்பெருமா னெம்மு ளெழுந்தரு ளாயே. (3)

நன்றெனத் தீதென நீநடு நின்று
நல்லொளி காட்டியுஞ் செல்லலற் றின்று
நின்றன நடுநிலை பொன்றிடக் கட்டி
நிறுத்திய கயிற்றினை யவிழ்த்தும்பின் றட்டிக்
கன்றினைத் தாயிடங் கடத்திடு மாறே
காட்டிய நல்வழி கூட்டிவை பேறே
என்றுநின் றிருவரு ளன்றியொன் றெய்தேம்
எம்பெருமா னெம்மு ளெழுந்தரு ளாயே. (4)

சித்தநற் சுத்தியே முத்தியின் வித்தாத்
தெற்றநீ தந்தும்பின் சித்தின்பம் பற்றாத்
தந்துறு வேமையிச் சமத்திற்கை நூக்கிச்
சடத்துறலம் போக்கிநின் றன்வய மாக்கி
நித்தமெந் திரிவித காரணந் னொழிக்கே
நின்றிட வமைத்தரு ளின்றியிற் குறுக்கே
எத்தனை வரினுங்கே டத்தனை யுங்காத்
தெம்பெருமா னெம்மு ளெழுந்தரு ளாயே. (5)

தப்பரும் பிரவிர்த்தி சலநிதி நடுவே
சடலமென் சிறுதோணி விடவொருப் படுவே
முப்பெருங் குற்றமா முன்றுள வோட்டை
பொறிமுதற் புலத்துணைங் கொழிகில சேட்டை
இப்புறஞ் சுழலரா கப்பகைக் கேடே
எங்ஙனந் துழாவியா மெய்த்துறவம் வீடே
அப்பிடை நின்னரு ளிளவலி யிங்கே
எம்பெருமா னெம்மு ளெழுந்தரு ளாயே. (6)

நித்திரை செயுமிங் கெருப்புறப் படையும்
நெருங்கவிட் டேருவார் நெஞ்சரச் சிடையும்



உத்திகொண் டோடுநாய்க் கொருமுழுங் கூட்டி
ஓச்சிடுங் கல்லும்போ லூக்கம்பா ராட்டிச்
சித்ததுஞ் செறியாது நிலினை வெருவிச்
சேட்டித காமாதி யோட்டிமுற் றுருவி
இத்தகை தொழின்முற்று நற்றவ மாக
எம்பெருமா னெம்மு ளெழுந்தரு ளாயே. (7)

நல்லது கண்டுமற் றல்லது பற்றும்
நானிலத் தரிதமா நலிபடை சுற்றும்
எல்லையி லாவெளி மாலைநக் கோட்டை
இச்சையா முட்பகை யிதிற்செயுஞ் சேட்டைச்
சொல்லவோ வாயிலை குறிநுன் மூலம்
சுதந்தர மறுமாளுஞ் சோர்ந்திடுங் காலம்
இல்லையுன் னருளொளி யெங்ஙன முய்வோம்
எம்பெருமா னெம்மு ளெழுந்தரு ளாயே. (8)

வெங்கதிர்ச் செல்வனுந் திங்களும் விண்ணும்
விசும்பா கங்கையல் கிரிபுனல் மண்ணும்
தங்குநின் றுறையிற் றன்றொழிற் பாலம்
சந்ததம் புரிவபோ லெந்தரு காலம்
துங்கநல் லறவழி தங்கிநின் றொழுக
சுதந்தர மடியெங்க ளகங்கா ரழுவ
இங்குநின் றொல்லரு ளிந்திட நாளும்
எம்பெருமா னெம்மு ளெழுந்தரு ளாயே. (9)

குணக்கெழு கதிரவன் குடக்கடை முனைமே
குறுமபுசெய் துரும்பவக் கொடுங்கொழு வினைமே
கணக்கிட வெளிதல துறுக்குறத் தாவும்
கவலையுஞ் சவலையுங் கணங்கள மேவும்
பிணக்குறு முளத்திளி யழுக்கினை போகப்
பொருட் காந்தத்தி னேரிரும் பாக
இணக்கிநின் பதந்தர வீதுநல தருணம்
எம்பெருமா னெம்மு ளெழுந்தரு ளாயே. (10)

## கனவு.

நித்திரையிற் கண்டகனவு பலிப்பதுண்டென்பதற்கு வேண்டியமட்டும் திருஷ்டாந்தங்கள் எடுத்துக்காட்டலாமென்று முன் சஞ்சிகையில் சொன்னோமல்லவா. அவ்வித திருஷ்டாந்தங்களை நமது நாட்டிலிருந்து தேடியெடுத்துச்சொன்னால் ஒருவேளை யுங்களுக்கு நம்பிக்கை கொள்ளாமற்போனாலும் போகும். நம்மவர்களெல்லாரும் பாமரஜனங்கள், மூடபக்தியுள்ளவர்கள் என்றல்லவோ இங்கிலீஷ்காரருக்கும் இங்கிலீஷ் கற்றுக்கொண்ட நம்மவர்களுக்குங்கூட எண்ணம். இவ்வாறு நம்மை இகழ்ச்சியாய் எண்ணுகிற வியம்பக்தி, மூடக்கொள்கை இவை முதலானவை இல்லாதவர்களென்று பேர்போயிருக்கும் அங்கிலேயர்க்குள்ளிருந்தே பல திருஷ்டாந்தங்களைச் சுருக்கமாய் எடுத்துக் கூறுகிறோம். அன்றியும் பின் வருபவைகளெல்லாம் பேர்போன பெரியமனுஷர்கள் சொல்லியிருப்பதால், அவர்கள் அற்பவிஷயமாகப் பொய்சொல்லியிருப்பார்களென்று நினைக்க இடமில்லை.

*1. ஜாப்பிங் என்னும் ஊரில் ஒரு வேலைக்காரச் சிறுவன் நித்திரையில் தான் தனது எஜமானன்கொடுத்த பணத்தை யெடுத்துக்கொண்டு வேறொரு ஊருக்குப் போனதாகவும், போகையில் தன்னை கூடவந்த வழிப்போக்கனொருவன் கொன்றுவிட்டதாகவும் கனவுகண்டு திடுக்கிட்டு விழித்துக்கொண்டு தான் கண்டகனவைத் தன் எஜமானனிடம் சொன்னான். அவன் இதைக்கேட்டுச் சிரித்து இதெல்லாம் பொய் நம்பவேண்டாமென்று அச்சிறுவனுக்கு தைரியம்சொல்லி சமாதானப்படுத்தினான். இரண்டு மூன்று நாளுக்கெல்லாம் ஏதோ ஒரு ஊருக்குப் பணமனுப்பவேண்டிய அவசரம் நேர எஜமானன் அதை இச்சிறுவனிடங்கொடுத்து அதை யெடுத்துக்கொண்டு போய்க் கொடுத்துவிட்டுவரும்படி சொன்னான். சிறுவன் தான்கண்ட கனவை நினைத்துக்கொண்டு கட்டளையிட்ட பிரகாரம் செய்யத் துணியவில்லையென்றாலும், எஜமானன் "இவற்றினாலெல்லாம் நன்மை தீமை யென்பது ஒன்றும் வாராது; இவற்றை நம்பி மயங்குவது பிசகென்பதைத் தெரிந்துகொள்வதற்காகவாவது நீயே போவதுநலம்" என்று பிடிவாதமாய்ச்சொல்ல, சிறுவன் என்னசெய்வான்! பணத்தை எடுத்துக்கொண்டுபோனான். வழியில் ஒரு துணைசேர அவனோடு யதார்த்தமாய் தான் கண்ட கனவையும் தன் பயத்தையும், தன்னிடத்தில் இவ்வளவு பணமிருக்கிறதென்றும் சொல்லி அவனைத் தனக்குத் துணையா யிருக்கவேண்டுமென்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டே வழிநடந்து போனான். மறுநாட்காலையில் ஓர்குளத்தில் அச்சிறுவனைக் கழுத்தறுத்துப்போட்டிருந்து பிரேதம் போலீசார்வசம் அகப்பட்டது. கொலை செய்தவன் தப்பிப்போகவில்லை. முதல்நாள் சாயங்காலம் இச்சிறுவனோடு



கூட வழித்துணையாய்ச் சேர்ந்தவனே சிறுவனிடம் பணமிருக்கிறதென்று அவன் வாய்ப்பிறப்பாலேயே அறிந்துகொண்டவனாகையால் அவனைக்கொலை செய்தவன் அவன்தானென்று ஏற்பட்டது.

இதில் சிறுவன் தான் கண்ட கனவினால் பயந்து அதையும், தன்னிடம் பணமிருக்கிறதென்பதையும் முன்பின் தெரியாத ஒருவனுக்கு யோசனையில்லாமல் வெளியிட்ட காரணத்தினால் இவ்வாறு சம்பவித்ததென்று சிலர் எண்ணுவீர்கள். போகட்டும்; அடுத்ததைப் பார்ப்போம்.

*2. ஸர் சார்லஸ்லீ என்பவருக்கு ஒரே பெண். அப்பெண்ணைப் பிரஸவித்தவுடன் அவள் தாயார் இறந்துபோய்விட்டாளாகையால் அந்தப் பெண் தாயாரை யறியாதவள். ஒருநாள் அவள் நித்திரை செய்யும்போது கனவில் முதிர்ந்தவயதுடைய ஒரு ஸ்திரீயைக்கண்டு நீ யாரென்றுகேட்க அந்தஸ்திரீ "நான்தான் உன்தாயார்; இன்னொரு உலகத்தில் இன்புற்றிருந்துகொண்டிருக்கிறேன். நாளை சாயங்காலம் நீயும் நானிருக்குமிடத்துக்கு வந்து சேருவாய்" என்று சொல்லி மறைந்துபோனாள். உடனே மேரி என்னும் இந்தப்பெண் விழித்துக்கொண்டு தான் கண்டகனவில் நம்பிக்கை வைத்தவளாய்த் தன் பிதாவினிடம் சென்று மறுநாளிரவுக்குள் தானிறந்துபோவது நிச்சயமென்றுசொல்ல, அவர் தமதுமகள் ஏதோ பித்தவிகாரத்தினால் பிதற்றுகிறாள், பைத்தியம்பிடித்தது என்றெண்ணி வைத்தியர்களை வரவழைத்து ஔஷதம் கொடுக்கச்சொன்னார். வைத்தியர்கள் அப்பெண்ணிற்கு ஒன்றுமில்லையென்று சொல்லியும் சமாதானப்படாமையால் ஏதோ சில இலேசான ஔஷதங்களைக் கொடுத்துக்கொண்டு பகல்முழுதும் இருந்தார்கள். 21 வயதுள்ள அப்பெண் அன்றுபகலெல்லாம் நடந்து உலாவிச் சிரித்துப் பேசிக்கொண்டேயிருந்து கனவிற்கண்டபடி மாலை 4 மணிக்கு 'மாரடைக்கிறதே' யென்று உட்கார ஒருமூச்சிற் பிராணன்போய்விட்டது.

இதில் ஒருவேளை தான்கண்ட கனவினால் திகிலடைந்து அதனாலாவது, அன்றையதினம் அவளுக்கு ஒன்றுமில்லாதிருக்கையில் வைத்தியர்களால் கொடுக்கப்பட்ட ஔஷதங்களினாலாவது மரணம் நேர்ந்திருக்கக்கூடும் என்று எண்ணுவதற்கு இடமிருக்கிறதென்று சொல்லுவீர்களோ? இதோ இன்னொரு திருஷ்டாந்தத்தைக் கவனியுங்கள்.

*3. ஸ்காட்லாண்டில் லீத் என்னும் நகரத்தில் நண்பர்கள் சிலர்கூடி மறுநாள் மாலைப்பொழுதில் எல்லாருமாகப் படகில் ஏறி வேடிக்கையாகக் கொஞ்சதூரம்சென்று வரவேண்டுமென்று தீர்மானித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுசெய்தார்கள். அவ்வாறு நிச்சயம்பண்ணியிருந்த அந்நண்பர்கூட்டத்தில் ஒருவரான டியோகர் என்பவர் தமது வீட்டிற்குவந்து தமதுமனைவியுடன் தாமும் தமது நண்பருங்கூடி யோசித்திருந்த படகுயாத்திரையைக் குறித்துச்

242627 JL R4 M211, M91 M91.1

சொல்லி அவளையும் வரும்படி சொன்னார். அன்றிராத்திரி அவர் மனைவி ஒரு படகு பெருங்காற்றடித்து முழுகிப்போனதாகக் கனவுகண்டு, அவ்வாறே மறுநாள் சம்பவிக்குமென்று பயந்தவளாய்க் கணவனிடத்திற் சொன்னபோது அவர் சற்றேனும் செவிக்கொள்ளவில்லை. கடைசியில் எத்தனையோ பிரயாசப்பட்டு வீட்டைவிட்டுப்போகாதபடி தன் கணவனைத் தடுத்தாள். டியேகர் தமது மனைவிக்காக நண்பர்களுக்கு ஏதோ சாக்குச்சொல்லி நின்றுவிட்டார். அவரைத்தவிர மற்றவர்களெல்லாரும் முதல்நாள் யோசித்தபடியே படகிலேறிச் செல்ல, அக்காலம் காற்றடிக்குங் காலமன்றெனினும், திடீரென்று ஒரு பெருங்காற்றுக்கிளம்பியடிக்க நேரகிக்குப்போனபடகு நிலைகொள்ளாமல் தத்தளித்துக் கவிழ்ந்துபோய் பிறகு முழுகிப்போயிற்று. இரண்டொருவர் மட்டும் நீந்திவந்து கரைசேர்ந்தார்கள். மற்றவர்களெல்லாம் அநியாயமாய் முழுகிப்போனார்கள்.

இதற்கென்ன சமாதானம் சொல்லலாம்? கனவு கண்டபடியே பலித்தது. "ஆற்றிலே போகும் படகுக்கு ஆயிரம் அபாயம் உள்ளதுதான்; அநுமாதிரியாக தற்செயலாய் முழுகிப்போகக் கூடியதுதானே; அன்றியும், படகைக்குறித்துக் காணுங்கனவு எப்படியிருக்கும்; முழுகிப்போவதுபோலக் காணக்கூடியது இயற்கையன்றோ? 'காக்கையேறப் பனம்பழம் விழ' என்பதுபோல இவ்விடத்தில் இரண்டும் ஒத்தது" என்று சிலர் எண்ணினும் எண்ணலாம். அடுத்ததைக் கவனியுங்கள்:—

* 4. டாக்டர் மாக்னிஷ் என்னும் தத்துவசாஸ்திரி கனவு முதலியவற்றையெல்லாம் சுத்தமாய் நம்பாதவர். அப்படியிருந்தும் அவர் நித்திரையின் தத்துவத்தைப்பற்றி இயற்றியிருக்கும் பேர்போன கிரந்தத்தில் பின்வருங்கனவைத் தாமே கண்டதாகச் சொல்லியிருக்கிறார். கேத்ன்ஸ் என்னும் நகரத்தில் தாமிருக்கும்போது ஒருநாள் முப்பதுகாத தூரத்திற்கு அப்பாலுள்ள ஓர் ஊரிலிருந்த தமது தமயனார் திடீரென்று இறந்துபோய்விட்டதாகக் கனவுகண்டு திடுக்கிட்டு விழித்துக்கொண்டார். அக்கனவினால் அவருக்கு உண்டான வருத்தம் இவ்வளவு அவ்வளவு அல்ல. அவர் இதுவிஷயங்களை நம்புகிறதேயில்லை. ஆனால் இந்தக்கனவை அவர் நம்பாமலிருக்கவும் மனங்கொள்ளவில்லை. இவ்விதமாய் அவர் விசாரப்பட்டுக்கொண்டிருக்கையில் இரண்டு தினத்திற்கெல்லாம் அவர் கனவுகண்ட அன்றிரவே இருந்தாற்போலிருந்து ஒரு வலிப்புண்டாகி இவரது தமையனார் இறந்துபோய்விட்டதாக சமாசாரம் வந்தது.

இறக்கும்வரையிலும் நல்ல சௌக்கியத்திலிருந்தாரென்பது இவருக்குத் தெரியும்; அவர் இறந்துவிடுவாரென்று சற்றேனும் எதிர்பார்க்கவில்லை. ஆகையால் கண்டகனவு விசாரத்தாலுண்டாயிற்றென்று சொல்ல இடமேயில்லை. இதிற் சிறிதும் நம்பா



தவர் தம் நம்பிக்கைக்கு விரோதமாகவே சாட்சி சொல்லுகிறார். இதைக்குறித்து என்ன சந்தேகமிருக்கக்கூடும்? இவ்வாறான ஸ்வப்னங்கள் நமக்குள் எவ்வளவு இருக்கின்றன? சிறுத்தொண்டரின் மகன் சீராளன் தன்னைத் தனது தாய் தந்தையரிருவரும் கத்தியால் அரியக் கனவுகாணவும் அவ்வாறே பின்னிட்டு நடக்கவும் நேர்ந்ததாகப் புராணங்களிலிருப்பது யாவருக்குந் தெரியுமல்லவா? இதைப்படிக்கும் ஒவ்வொருத்தருக்கும் இதைப்போன்ற கனவுகள் எத்தனையோ தெரிந்திருக்கலாம். தெரிந்தும், நம்புவதாக மேலுக்குக் காட்டிக்கொள்ளுகிறது மட்டுமில்லை.

* 5. இங்கிலாண்டில் ட்ரேன்ட் என்னும் நதிக்கரையிலிருக்கும் நியுவார்க் என்னும் நகரத்தில் வருஷா வருஷம் மார்ச்சுமாதம் 11-ம் தேதியில் அங்குள்ள ஏழைச்சனங்களுக்கெல்லாம் சோறிடுகிறது வெகுநாளைய வழக்கம். அது இப்போதும் நடந்துவருகிறது. அது ஏற்பட்டவிதம் பின்வருமாறு:— 200 வருஷங்களுக்கு முன்னே அவ்வூரிலிருந்த கிராமாதிகாரி ஒருநாள் தன் வீடு நெருப்புபிடித்ததாகக் கனவுகண்டு எழுந்திருந்து உடனே வேறுவீட்டிற்கு குடிப்போனான். அப்படிக் குடிப்போன இரண்டுமூன்று தினத்திற்கெல்லாம் அவன் கண்டகனவு மெய்யாகப்பலித்து வீடுபற்றியெரிந்துபோய்விட்டது. தானுந் தன்குடும்பமும் அவ்வபாயத்தினின்று தெய்வீகமாகத் தப்பினதற்காக தனது அந்தியகாலத்தில் தன் ஆஸ்தியில் ஒருபாகத்தை ஏழைகளுக்கு தருமத்திற்காக ஏற்படுத்திவைத்தான். அந்ததருமம் தப்பாமல் இன்னமும் நடந்துவருகிறது.

நமது நாட்டில் தருமப்பிரபுவாகிய பச்சையப்பமுதலியாருக்கு அடிநாளில் தமக்குக் கனவில் யாரோ ஒரு பெரியவர்தோன்றி விசேஷ தனம் தமக்குக் கொடுப்பதாகவும் அதை தர்மத்தில் செலவிடவேணுமென்றும் சொன்னதாக ஸ்வப்னங் கண்டதாகவும் அவ்வாறே அவருடைய பெரும்பொருளையெல்லாம் தருமத்திலேயே செலவுசெய்தார் என்றும் பலர் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆனால் இது மெய்யாயிருக்குமோ, அல்லது கட்டுவார்த்தைதானோ நாம் நிச்சயமாயறியோம்.

* 6. ஒரியன்ட் என்னும் நீராவிக் கப்பலில் தலைமை மாலுமியாயிருந்த நார்வே என்பவர் ஆப்பிரிக்கா கண்டத்திற்கு மேல்புறமாய் தமது கப்பலை ஓட்டிக்கொண்டு போகுங்காலத்தில் ஒருநாள் இங்கிலாண்டிலிருந்த தமது சகோதரர் குதிரைமேலேறிக்கொண்டு போனதாகவும், போகையில் இரண்டு பேர்வந்து ஒருவன் குதிரையைப் பிடித்துக்கொள்ள மற்றவன் துப்பாக்கியால் இரண்டுதரம் இலட்சியம்வைத்துச் சுட்டும் இரண்டுதரமும் தப்பிப் போகக் கடைசியில் கையிலிருந்த துப்பாக்கி அடிக்கட்டையால் தலையில்

மோதிக் குதிரையிலிருந்து கீழேதள்ளிக் கொன்றதாகவும் கனவுகண்டார். கண்ட கனவின்படியே அவர் சகோதரர் கொலையுண்டார். கொலைசெய்தவர்களில் ஒருவனான லெட்புட் என்பவன் அகப்பட்டுக்கொண்டு நியாய சபையில விசாரணைசெய்தபோது எழுதிவைத்த வாக்குமூலமும் நாபிவே துரை கப்பலிலிருந்துகொண்டு எழுதிவைத்த கனவின் விவரமும், ஒருவர்க்கொருவர் ஒத்துப் பேசிக்கொண்டு எழுதியதுபோல ஒருவித்தியாசமுமில்லாமல் இரண்டும் ஒன்றாகவே யிருந்தன.

* 7. ரோசஸ்டர் என்னும் பட்டணத்தில் மேரிகாப் என்னும் ஒரு ஸ்திரீ சிலநாளாகப் பிணியுற்றிருந்து பிராணன்போவதற்கு முதல்நாள் இன்னொரு ஊரில் தன் தங்கைவீட்டிலிருந்த தனது குழந்தைகளை உடனே பார்க்கவேண்டுமென்று சொன்னாள். அவளிருந்த ஸ்திதியில் பிரயாணம் செய்வது கூடாதென்று வைத்தியர்களெல்லாம் சொல்ல "எப்படியாவது நான் பார்க்கத்தான் வேண்டும்" என்று சொல்லிக்கொண்டே யிருக்கையில் பிரஞ்ஞையற்றுப் பேச்சுமூச்சு இல்லாமல் போயிற்று. கண் திறந்தபடியே யிருந்தது. இன்னும் பிராணன்மட்டும் போகவில்லை. நாலுமணி சாவகாசமிவ்வாறிருந்தது. கடைசியில் கொஞ்சம் பிரஞ்ஞைவந்து, "நல்லவேளை; குழந்தைகளைப் பார்த்தேன்; இனி எனக்கு விசாரம் ஒன்றுமில்லை" என்றுசொல்ல, அருகிலிருந்தவர்கள் "குழந்தைகளையாவது பார்க்கவாவது, இந்நேரம் படுக்கையிலேயே யிருந்தாயே" என "இல்லை; இப்போதுதான் என் குழந்தைகளிருக்கும் இடத்திற்குப் போய்வந்தேன்" என்றுசொல்லிப் பிறகு இரண்டு மூன்றுமணி சாவகாசத்திற்குளெல்லாம் இறந்துபோனாள். இது இப்படியிருக்க அதேசமயத்தில் இவள் குழந்தைகளிருவரும் நித்திரையில் தங்கள் தாயாரைப் பார்த்ததாகவும், அவள் அவர்கள் பக்கத்தில் சிறிதுநேரம் படுத்திருந்ததாகவும் கனவுகண்டு பிறகு பார்க்கையில் பக்கத்தில் படுத்திருந்ததாகத் தோன்றின அவளைக்காணாமல் தேடினார்கள். மறுநாள் அவள் ரோசஸ்டர் நகரில் இறந்துபோய்விட்டதாக சமாசாரம் எட்டியது.

இதைக் குறைந்தபட்சம் கனவென்றாவது அங்கீகரிக்கவேண்டும். அப்படியானால் தாயார கனவுகண்ட அதேநிமிஷத்தில் பிள்ளைகளிருவரும் தாயாரைக் குறித்தாக கனவுகண்டதாக ஏற்படுகிறது. இவ்வொற்றுமை வியக்கத் தக்கது.

* 8. சென்றவருஷத்தில் பம்பாய்க்கு அருகில் ஓர்கிராமத்தில் ஒருவன் தனக்கு வரவேண்டியபாக்கிகளை வசூல்செய்வதற்காகப் புறப்பட்டுப்போனான். அப்படிப்போன ஒருவாரத்திற்குப் பிறகு அவனுடைய தாயார் நித்திரையில் அவனுடல்முழுதும் வெட்டுக்காயம்பட்டு இரத்தமயமாயிருப்பதாகக் கனவுகண்டு அருண்டு எழுந்து போலீசார் உதவியைக்கொண்டு மறுநாள் தேடினபோது அவன் பணத்திற்காக அவனைக் கொலைசெய்து பிரேதத்தை ஓர் மரத்தடியிற் புதைத்திருக்கக் கண்டார்கள். தாய் கனவுகண்ட இரவிலேயே மகன் கொலையுண்டானென்று தெளிவாய் ஏற்பட்டது.



சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன்னே உரோமராஜ்ஜியத்திற்கதிபதியாயிருந்த ஜூலியஸ் ஸீஸர் என்பவர் அவரது பத்தினியாகிய கால்பர்னியா தான் முதல்நாளிரவில் தனது கணவனை அனேகம்பேர் ஒன்றுகூடித் தங்கள் கூரியவாட்களால் குத்தக் கனவுகண்ட அச்சத்தால் அவரை அன்றையதினம் இராஜ்ஜியசபைக்குப் போகவேண்டாமென்று பலவாறாக வருந்தியும் அதைச் சற்றேனும் செவியிற்கொள்ளாமல் சபைக்குச்சென்றதில் அங்கு தமது மனைவி கனவுகண்டபடியே புரூடஸ், காஷியஸ் முதலான கலகக்காரர்களால் கொலையுண்டது அனேகருக்குத் தெரிந்திருக்கலாம்.

இன்னும் திருஷ்டாந்தங்கூறப்போனால் பெருகும். இதுவரையிற்கூறினது கனவுகள் சிலசமயங்களில் பலிக்கிறதுண்டென்பதைக் காட்டுவதற்கே. எல்லாக் கனவுகளும் இவ்வாறே பலிப்பதுண்டென்று நாம்சொல்ல வரவில்லை. வீண்பக்தி புகட்டவேண்டுமென்பது நமது கருத்தல்ல. ஆனால் கனவில் நிஜமில்லை, அதை நம்பக்கூடாதென்று ஒரே அடியாய்த் தள்ளிவிடுகிறதைவிட திருஷ்டாந்தங்களை அப்போதப்போது சேகரித்து நிதானத்துடன் ஆன்றியோசித்து விசாரித்துப்பார்த்து அதன் தத்துவத்தையறிய முயலவேண்டுமென்பதும், முக்கியமாய் பிரபஞ்சதத்துவம் பௌதிகதத்துவம் முதலானவற்றைப்பற்றி விசாரணைசெய்யும் தத்துவசாஸ்திரிகள் இதைக்குறித்து ஆலோசிக்கவேண்டுமென்பது நமது கோரிக்கை. ஆனாலொன்று; நமதுநாட்டிற் பொய்கலப்பில்லாமல் திருஷ்டாந்தங்கள் உள்ளது உள்ளபடியே கிடைப்பது அரிது. மேலும் வெளியிற்சொன்னால் இவன் வீண்பக்தியும் மூடக்கொள்கையுமுடையவனென்று படித்தவர்கள் நகைப்பார்களேயென்னும் பயத்தால் அநேகர் வெளியிடுகிறதில்லை. அநேகர் இவற்றையெல்லாம் அலட்சியமாக நினைப்பார்கள். இவற்றில் எல்லாம் உண்மையேயில்லையென்று சிறிதும் நம்பாமற் போனாலும் போகட்டும்; அவற்றைக்குறித்து நிதானித்து விசாரித்தாவது பார்க்கலாமல்லவா. அதுவும்வேண்டாம், இவர்கள் மற்றவர்களைக் குறித்து நகைத்து இகழாமலிருந்தால் அதுவே போதுமானது.

இக்காலத்தில் எதன் தத்துவத்தை யார்தான் பூர்த்தியாய்க் கண்டுபிடித்துவிட்டார்கள். புகைக்கூட்டில் மனிதரேறி ஆகாயத்திற்செல்லக் கண்ணாரப்பார்த்தோமே. இனி புஷ்பகவிமானத்தை ஏன் நம்பக்கூடாது? சிறிதுகாலத்திற்குமுன் எதிரிலிருந்து பேசிக்கொள்வதைப்போல 400 மைல் தூரத்திலிருந்து ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ளலாமென்று சொன்னால் நம்பினார்களா? இப்போது

மின்சாரத்தின் சக்தியாலே பேசுந்தந்தி உண்டாயிற்றன்றோ? ஒருவர்செய்யும் பிரஸங்கத்தைக்கூடப் பெட்டியில் அடைத்துவைத்து வேண்டியதேசத்திற்கனுப்பி வேண்டியபோது பெட்டியைத் திறந்துவிட முதலில் பிரஸங்கம் செய்தவனைப்போலவே பெட்டி பிரஸங்கஞ்செய்வது பின்னும் அதிசயம். இதற்கும் மின்ஸாரந்தான் முக்கிய கருவி. இன்னம் மின்ஸாரத்தின் விசித்திரம் என்னென்ன உண்டாகுமோ! மின்ஸாரத்தைப்போன்ற சக்திகள் பிரபஞ்சத்தில் இன்னம் எத்தனையிருக்கின்றனவோ! பூமிக்கு ஆகர்ஷணசக்தியிருக்கிறதென்று நியூடன் கண்டுபிடித்த பிறகுதானே ஐரோப்பியருக்குத் தெரிந்தது! வாட்ஸ் கண்டுபிடித்த பிறகுதானே நீராவியின் வல்லமை நன்கு விளங்கியது! கொலம்பஸ் கண்டுபிடிக்குமுன் அமெரிக்காகண்டம் உண்டென்று யார் நம்பினார்கள். பூமி உருண்டையாயிருக்கிறது சூரியனைச்சுற்றி யோடுகிறது என்று சொன்ன காலிலியோவைப் பிடித்துச் சிறையிலடைத்துவிட வில்லையா? பூமி உருண்டைவடிவமாயிருக்கிறதென்பதை இன்னமும் நம்பாதவர்கள் நம்மவரில் இருக்கிறார்களன்றோ? விலையுயர்ந்த தூரதிருஷ்டிக் குழாயினால் சந்திரமண்டலம் சூரியமண்டலம் முதலியன தெரியுமென்று நாம் ஒருவருக்குச் சொன்னபோது அவர் வியப்புடன் விரைந்து "அப்படியா, ஆனால் சூரியனுடைய ஏழு குதிரைகளில் ஒன்றேனும் காணப்படுமா?" வென்று நம்மை நேரில்கேட்டிருக்கிறார். இவ்வாறெல்லாம் இருக்க, ஈசுவர சிருஷ்டியிலுள்ள தத்துவங்கள் இன்னின்னவையென்று நிர்ணயமாய்த் தெரியாதிருக்கையில் ஒருவர் சொல்வதைப்பார்த்து நகைப்பது பெரியோர்செயலாகாது. எதையும் அலட்சியம் செய்யாது நிர விசாரிக்கவேண்டியது நமது கடமை.

---

ஷேக்ஸ்பியர் மகாகவிசெய்த 'வனிஸ்புர வர்த்தகர்' எனும்

## நாடகம்.

### முதலாம் அங்கம்.

#### இரண்டாங் களரி.

நேரி. போகட்டும்; அவருக்கயல் நாட்டாராகிய ஸ்காட்லாண்டு தேசப் பிரபுவைப்பற்றி உங்கள் அபிப்பிராயமென்ன?

பௌரு. அண்டை அயலாருக் கிருக்கவேண்டிய உபகாரகுணம் அவருக்குண்டு; பெற்றுக்கொண்டதைத் திரும்பக்



கொடுக்கவேண்டுமென்னும் எண்ணம்மட்டும் அவருக்கு எப்போதும் இருக்கிறதென்று சொல்லுவேன். எப்படியெனில் அவர் இங்கிலீஷ்காரரிடத்தில் தவடையில் ஒரு குத்து வாங்கிக்கொண்டு தமக்குச் சக்திவரும்போது அதை மீட்டும் செலுத்திவிடுவதாய்ப் பிரதிக்ஞை பண்ணினார். பிரான்ஸ் பிரபுவும் பிணைப்பட்டு அக்காலத்தில் தானுந் துணைநின்று மற்றொரு கும்மாவுக்கு உதவுகிறதாகச் சொல்லிக் கையொப்பமிட்டாராம்.

நேரி. ஸாக்ஸனி தேசாதிபதியின் சிற்றப்பன் மகனான ஜர்மானிய பாலியனை நீங்களெப்படி நினைக்கிறீர்கள்?

பௌரு. காலையில்குடித்து மயங்காமலிருக்கையிலேயே அவரைப் பார்க்க வழங்காது; மாலையில் குடித்திருக்கும்போதோ சொல்ல வேண்டியதில்லை. அவருக்குள்ள நல்ல சுபாவத்தில் அவர் இருக்கும்போது அவனை மனிதரென்று கொள்ளுவது சற்றுக்கஷ்டம். அவர் தம்தீயசுபாவத்திலிருக்கும்போதோ மிருகத்திற்கும் அவருக்கும் அற்பவாசிதானிருக்கும்: எனக்கு வாரா அவதி வந்தாலும் அவனை விட்டுத் தப்பித்துக்கொள்ள வழிபார்ப்பேன்.

நேரி. அவர் வரிக்கவந்து சரியான பெட்டியிற் கைவைத்தால் என்ன செய்வீர்கள்? அவனை வரிக்க ஒப்பாவிடில் தந்தையார் மனதுக்கு விரோதமாகுமே?

பௌரு. அப்படிக் கொன்றும் வாராதபடிக்குத் தானடி உன்னையொன்று வேண்டிக்கொள்ளுகிறேன். நீதப்பான பெட்டியின்மேல் ஒரு புட்டிநிறைய ரெனிஷ் சாராயத்தை வைத்துவிடு. மேலே அவர் ஆசைப்படத்தக்க சாராயமிருக்கும்போது உள்ளே பிசாசிருந்தாற்கூட அவர் அப்பெட்டியின் மேலேயே கைவைப்பாரென்று எனக்கு நிச்சயமாய்த் தெரியும். அடி நேரிசை! அந்தசாராயத்தோண்டியை மணம்புரிவதை யொழித்து வேறெது செய்யச்சொல்லினும் செய்வேன்.

நேரி. அம்மணி! பயப்படவேண்டாம்: இந்தப்பிரபுக்களில் எவனையும் நீங்கள் அடையும்படி நேரிடாது. அவர்கள் துணிவை எனக்கு அறிவித்திருக்கிறார்கள். பெட்டிகளின் ஏற்பாட்டால் உங்கள் ஐயர் இட்டிருக்கும் நிர்ப்பந்தவழி

ளைத் தவிர வேறுவிதமாய் உங்களைப்பெறுவது கூடாதாயின் ஆசைப்பட்டு இனி உங்களைத் வருத்தாமல் தங்கள் தங்கள் ஊர்போய்ச் சேருவதாகச் சொன்னார்கள். இது நிஜம்.

பௌரு. எங்கள் ஐயர் விதித்தபடி யென்னை யொருவரும் அடையாவிடில் நான் சிபிலாவைப்போல நெடுங்காலம் ஜீவித்தாலும் டையானாவைப்போல கன்னிகழியாதவளா யிருந்தே என் காலத்தையொழிப்பேன். நல்லவேளை! இந்தக் காமுகர் கும்பலுக்கு இத்தனையறிவிருக்கிறதே; எனக்குச் சந்தோஷந்தான். அவர்களில் ஒவ்வொருவனும் ஒழிந்துபோனதே எனக்குப் பேரானந்தம். அவர்கள் போக்கு நற்போக்கா யிருக்கும்படி கடவுள் கிருபை பண்ணட்டும்.

நேரி. அம்மணி! உங்கள் தகப்பனாரிருக்கும்போது மான்பிராட்டுப் பிரபுவுடன்கூட நல்ல கல்விவானும் இராணுவவீரனுமான ஒரு வணிகர்புரத்தார் இங்குவந்திருந்தாரே ஞாபகமிருக்கிறதா?

பௌரு. ஆமாம் அவர்தான் பாசேனர்: —அவர்பேர் பாசேனர் தான்போலிருக்கிறது.

நேரி. நிஜந்தானம்மணி; இந்த மடக்கண்களால் நான் பார்த்த மனிதர் எல்லாருள்ளும் அவரே நல் சுந்தரிக்குத் தக்க புருஷர்.

பௌரு. அவனைப்பற்றி எனக்கு நன்றாய் நினைவிருக்கிறது; உன் புகழ்ச்சிக்கேற்றவனென்றே நினைக்கிறேன்.

(இத்தருணத்திலோர் ஊழியக்காரன் வர.)

எனப்பா? என்னசங்கதி!

ஊழி. தாயே! அயலூரார் நால்வரும் தங்களிடத்திற் செலவு பெற்றுப்போகத் தங்களைத் தேடுகிறார்கள். தவிர மொராகதேசத்தரசராகிய ஐந்தாவதவரிடத்திலிருந்து ஒரு தூதன் முந்திவந்து இன்றிரவு தன் எஜமானர் இங்கு வருவதாகச் செய்தி கொணர்ந்திருக்கிறான்.

பௌரு. மற்ற நால்வருக்கும் மனப்பூர்வமாய் விடையளிப்பது போல இவரையும் வரவழைக்கும்படியா யிருந்தாலன்



றோ இவர் வந்ததைப்பற்றி நான் சந்தோஷிக்கவேண்டும். இவருக்கு மஹானின்குணமும் வன்கழுதின் சாயலுமிருந்தால் இவர் என்னை மணஞ்செய்வதைவிட்டு எனக்கு மணஞ்செய் விக்கத்தக்க நல்ல புரோகிதராயிருக்க வுரியவர். வா நேரிசா. அடா போமுன்னே. விடைவுற்றுவந்த ஒருவனைத்தள்ளிக் கதவை மூடுமுன் மற்றொருவன்வந்து கதவைத் தட்டுகிறான்.

## யுக்தி வைத்தியம்.

வைத்தியர்களென்றால் எல்லாரும் வைத்தியர்களா? வியாதிகளின் குணமும், அவற்றிற்குத் தக்க ஔஷதமுறைகளும், அவற்றைப் பக்குவமாக வேரோடுகளைய வேண்டும் விதங்களும் வைத்தியசாஸ்திர நிபுணர்களெல்லோரும் அறிவார்களென்பது மெய்தான். ஆனால் சமயோசிதமான யுக்தியும் உபாயமும் சிலர்க்குமாத்திரந்தான் தோன்றும்.

நாம் கொட்டாவிவிடும்போது வாயை விஸ்தாரமாகத்திறப்பது பிசகு. அதனால் சிலசமயங்களில் கபாலத்தோடு பொருத்தப்பட்டிருக்கிற தாடைகளின் கீல்கள் நிலைமாறி திரும்ப வாயைமூடுவது மிகுந்த பிரயாஸமாய்ப்போகும். இதற்காகவும் மற்றும் சில காரணங்களுக்காகவுந் தான் வாயை விஸ்தாரமாய்த் திறக்கவொட்டாமல் கையால் வாயை மூடிக்கொண்டு நாம் கொட்டாவி விடவேண்டுமென்னும் வழக்கம் அடிநாளையில் ஏற்பட்டது. ஒருகால் வயதுசென்ற ஒருவன் தான் கொட்டாவி விடும்போது வாயை வரைகடந்து திறக்க தாடைகளின் பூட்டுவிலகி வாய் திறந்தபடி இருந்துவிட்டது. அவன் எவ்வளவு பிரயாசப்பட்டு வாயை மூடிக்கொள்ளப் பார்த்தும், மிகுந்த வலியுண்டாயிற்றேயன்றி வாய்மூடவில்லை. இத்தஸ்திதியில் ஓர் வைத்தியரிடத்திற்போய்க் காட்ட அவரும் எவ்வளவோ பக்குவமாக அவன்வாயை மூடும்படிசெய்யப் பார்த்தும் முடியாமற்போயிற்று. இனியெவ்வித உபாயத்தினாலாவது வாயை தானாகவே மூடிக்கொள்ளச் செய்யவேண்டுமேயன்றி வேறெவ்விதத்தாலும் தாடைகளின்கீல் முறிந்துபோமென்று தெரிந்து தெருவிலிருந்த சாணியிற் கொஞ்சம் எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு பராக்காகச் சிறிதுநேரம் அவனுடன் வார்த்தையாடிக்

கொண்டிருந்து அவன் கொஞ்சம் ஏமாந்திருந்த சமயத்தில் கையில்வைத்திருந்த சாணியை அவன் வாயில்போட அவன் உடனே சடுதியில் வாயிலிருந்த சாணியை உமிழ்ந்துவிட யத்தனிக்கையில் விலகியிருந்த பூட்டு தன்னிச்சையாய் யதாஸ்திதியில்நின்று வாய்மூடிக்கொண்டது. வாயைமூடிக்கொள்ள யத்தனப்பட்டால் வலியுண்டாகுமேயென்று அவன் யோசிக்க சாவகாசமில்லை.

இதேமாதிரியாக பதினாறுவயதுள்ள ஒரு சிறுபெண் இருகைகளையுங் கோத்துக்கொண்டு உயரத்தூக்கி மிதந்தப்பி யுடம்பை முறுக்கிச் சோம்பல் முறித்தபோது தோட்பட்டைகளோடு பொருத்தப்பட்டிருக்கிற புஜங்களின் பூட்டுகள் கழன்றுபோய் உயர்த்திய கைகளைக் கீழே தொங்கவிடக்கூடாமல் தூக்கியகைகள் தூக்கியபடி நின்றுபோயின. உடனே ஒருவைத்தியனை யழைத்துவந்து காட்ட அவர் தம கையிலிருந்த பிரம்பினால் அந்தப் பெண்பிள்ளை கட்டியிருந்த ஆடையைத் தூக்கிவிட அவள் கைகளையிறக்குவதால் வலியுண்டாகுமென்னும் அச்சத்தையும் மரியநாணத்தால் வலியை நினையாதவளாய்ச் சடுதியில் கைகளையிறக்கிவிட்டாள். இவ்வாறான அஸந்தர்ப்பங்களில் உபாயத்தாலன்றி வேறெவ்விதத்தாலும் உபத்திரவம் அதிகமாகுமேயன்றி வேறில்லை.

இங்கிலாண்டில் ஒருவருக்கு கண்டமாலையென்று சொல்லப்பட்ட பெரிய கட்டியொன்று தொண்டையின் உட்பிரதேசத்தில் புறப்பட்டு அதனால் மிகுந்த வாதைப்படுகையில் பேர்போன வைத்தியரொருவருக்குச் சொல்லியனுப்ப, அவர் வந்துபார்த்தார். புறச்சிகிச்சைசெய்வதற்கும், உள்ளுக்கு ஔஷதங்கொடுப்பதற்கும் வழியில்லாமலிருந்தது. ஆனால் உள்ளே புறப்பட்ட கட்டி நன்றாய்ப் பழுத்துப்போயிற்றென்று கண்டுகொண்டு, அகசியம்செய்வதிற் கைதேர்ந்த ஓர் விதூஷகனைவருவித்து அவனைப் பிணியாளிக்கெதிரில் மிகவும் நகைப்புக்கேதுவான அஹசியம்செய்யும்படி ஏவினார். அப்போது பிணியாளி தான் கண்டமாலையால்படும் வருத்தத்தையும் மறந்து பொறுக்கக்கூடாமற் சிரித்த அதிர்ச்சியினால் தொண்டைக்கட்டி யுடைந்துவிட்டது. பிறகு வைத்தியர் உள்ளுக்கு மருந்துகொடுத்துக் குணப்படுத்திவிட்டார்.

இவ்வாறாகவே யுக்தியினால் ஒருவைத்தியர் ஒருவனுக்குப் பைத்தியம்தெளியும்படி செய்திருக்கிறார் :— பைத்தியக்காரர்கள் ஆஸ்பத்திரிகளில், பைத்தியம் பிடித்துப்போனவர்களை பைத்தியந்தெ



ளிவித்துக்குணப்படுத்துவதற்காக நிபுணவைத்தியசாஸ்திரிகளையே நியமிப்பதுவழக்கம். இம்மாதிரியான ஒரு ஆஸ்பத்திரியில் பைத்தியம்பிடித்துப்போன ஓர் தையற்காரன் இருந்தான். அவனுக்கு தினம் ஒரு உடுப்பு புதிதுபுதிதாகக் கொடுத்தபோதிலும் ஒவ்வொன்றையும் சுக்கு நூறாகக்கிழித்துவைப்பதே யவன் வழக்கமாயிருந்தது. இதற்காக எவ்வளவு சிட்சித்தாலும், என்ன புத்திமதிசொன்னாலும் பைத்தியக்காரன் கேட்பானா! இப்படியிருக்க அந்த ஆஸ்பத்திரிவைத்தியருக்கு ஒரு யுக்திதோன்றியது; மிகுந்த ஒளிபொருந்தியதும் அழகியதுமான உடையொன்று தைத்துக்கொடுத்தால் என்னசெய்வானோ பார்க்கலாமென்று எண்ணி அப்படியே விலையுயர்ந்த மஹம்மலில் உடுப்பு ஒன்றுதைப்பித்து அவனுக்குக் கொடுத்தார். அவனதை யதாப்பிரகாரம் கிழிக்க யத்தனிக்கையில் அந்த மஹம்மலின் ஒளியையும் மிகுந்த மிருதுவையும் நாணயத்தையும்பார்த்து வியக்கத்தொடங்கினான். அதைக் கிழிக்கக்கருதியெடுப்பான்; உடனே அதிரம்மியமான அதன் மிருதுத்தன்மையைக் கண்டு கிழிக்க மனம்வாராமல் அதைக் கையால் தடவிக்கொடுப்பான்; தடவிக்கொடுத்து ஆநந்திப்பான்; ஒளிபொருந்திய அதன் நிறத்தைக்கண்டு மகிழ்வான்; வெயிலிலோடிப்போய் அதைப்பிடித்து அழகுபார்ப்பான்; வெகு ஜாக்கிரதையுடன் அதை மடித்துவைப்பான்; கீழேவைக்கக் கூசுவான்; அழுக்குப்பட்டுப் போயிற்றோவென்று உடனே பிரித்துப்பார்ப்பான்; எங்காவது அதில் மாசுபட்டிருந்தால் கண்டு துக்கிப்பான்; அழுக்கைத்துடைத்துவிட்டுச் சிரித்துக்கொள்வான்; இவ்விதமாக அவன் அதன்மேல் அன்புசெலுத்தினேயன்றி அவனுக்கு அதைக்கிழிக்க மனம் வரவில்லை. இதைக் கவனித்திருந்த முற்கூறிய வைத்தியர் அவ்வுடுப்பைக்கொண்டும், அதனினுமழகிய உடைகளைக்கொண்டும் அவனுக்குப் படிப்படியாய் பைத்தியந்தெளியும்படி செய்துவிட்டார்.

இவ்விதமாக யுக்தியாலும் உபாயத்தாலும் சாதிக்கத்தக்கவைகள் அநேகம். அனுபவசித்தமாய் யாவரும் பார்த்தறியத்தக்க உபாயவைத்தியம் ஒன்றுண்டு. கண்ணில் ஏதாவது தூசுமுதலியது விழுந்தால், எந்தக்கண்ணில் விழுந்ததோ அதை விட்டுவிட்டு மற்றைக்கண்ணை இரண்டுமூன்று நிமிஷநேரம்வரையில் கசக்கிக்கொண்டிருந்தால் அடுத்தகண்ணில் விழுந்ததூசு ஓரத்தில் ஒதுங்கிப்போகும்; பிறகு சுலபமாய் எடுத்துப்போடலாம். இதையறியாத

தூசுவிழுந்த கண்ணையே கசக்குவதினால் கண்சிவந்து எரிவுண்டாகி விழுந்த தூசியை யெடுக்கவாய்க்காமல் மிகுந்த வாதைப்படவேண்டியதாகும். இதை யாவரும் பிரத்தியக்ஷத்தில் கண்டறிந்துகொள்ளலாம்.

## உபயோகமான சிறுமுறைகள்.

(a) அறைகளுக்கு நல்வாசனை யூட்ட:— காபிக்கொட்டைப் பொடியைக் கொஞ்சம் எடுத்து நன்றாய் நெருப்பில்காய்ந்த ஒரு இருப்புபாணையின்மேல் தூவ அதிலெழும்பும்புகை அறையிலுள்ள துர்க்கந்தத்தையும் கெட்ட வாயுவையும் போக்கி ரம்மியமான நல்ல வாசனையையுண்டாக்கும்.

(b) கண்ணாடிபுட்டி முதலியவைகளை நன்றாய்ச்சுத்திசெய்ய: வேண்டுமானால் கரிப்பொடியினால் வெந்நீரில் சுத்திசெய்து கடைசியில் குளிர்ந்த ஜலம்விட்டுக்கழுவவேண்டும்.

(c) மூட்டைப்பூச்சி கிட்ட அணுகாதிருக்கச்செய்ய:— படிக்காரத்தைப் பொடியாக்கி ஜலத்திற்கரைத்து அதில் நனைத்துப்பிழிந்து உலர்த்தின துணி, சொக்காய் முதலியவைகளைத் தரித்துக்கொள்ள மூட்டைப்பூச்சி கிட்டவருகிறதில்லை. ரயில்மார்க்கமாய் பிரயாணஞ்செய்கிறவர்களுக்கு இதனால் மிகுந்த நன்மையுண்டு. அன்றியும், படிக்காரஜலத்தில் பிழிந்துலர்த்திய துணிகளில் நெருப்புப்பிடிக்கிறதில்லை. ஆகையால் சிறுகுழந்தைகளுக்கு உடுத்தும வஸ்திரங்களை இவ்வாறுசெய்வதினால் தீயினால் சிறுகுழந்தைகளுக்கு நேரும் அபாயங்கள் அரிதாகும. ஆனால் இவ்வளவு சிரத்தையோடு செய்வதரிது.

(d) இரும்புக்கதவு, கிராதிமுதலியவற்றிற்கு நல்லமேல்பூச்சு: இரும்பினாற்செய்த கிராதிகள், வாசற்கதவுகள், பலகணிக்கிராதிகள், லாந்தர்கள்வைக்கும் ஸ்தம்பங்கள், இவைமுதலானவை துருப்பிடித்துப்போகாமலும் பார்வைக்கு நன்றாயிருப்பதற்கும கீல்பூசுவது வழக்கமல்லவா! இதைவிட மஞ்சட்காவிக்கல்லைப் பொடிசெய்து தார்காயும்போது கலந்து காய்ச்சிப்பூசினால் பார்வைக்கு நன்றாயிருப்பதுந்தவிர நீடித்தும் நிற்கும்.



## குழந்தைகளுக்கு ஆபரணங்களை அணிவதனால் உண்டாகுந் தீமை.

“மக்கட்பேற்றிற் பெரும்பேறில்லை” என்பது யார்க்கும் பொதுவாகச் சொல்லப்பட்டதேயாம். இவ்வுலகில் சிறிது நாளாவும் ஒருத்தரும் குழந்தைகளைப் பெறாமல் மலடரா யிருப்பாராயின் மானிடகுலம் அதிசீக்கிரத்தில் நாசமுற ஆரம்பிக்கும். ஆகவேதான் பிள்ளையில்லாக் குறை பெருங்குறையென்று எல்லோராலும் அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது. இது மனிதர்க்கேயன்றி உயிர்வாழ்வன வெல்லாவற்றிற்கும் பொருந்தும். இப்புவியில் சக்கிரவர்த்தியாக விருப்பினும், உண்ணச் சோறகப்படாத நித்திய தரித்திரனாக விருப்பினும் பிள்ளையில்லையென்கிற துக்கம் இருவர்க்கு மொன்றுதான். வம்சவிருத்தி யில்லாமையால் அழிந்துபோன ஜந்துக்கள் எத்தனையென்று சொல்லுவதரிது. இப்பொழுது கூட்டமடைந்துவருகின்ற சிங்கம், புலிமுதலிய ஜந்துக்கள் இன்னுஞ் சிறிதுகாலஞ் சென்றால் அழிந்துபோய் விடுமென்று காண்கிறது. இத்தகை அருமையான குழந்தைகளுக்கு நோயுண்டாகாதபடி நல்ல உணவைக் காலந்தப்பாதூட்டி, சுத்தமான வஸ்திரங்களை யுடுத்தி நன்றாகப் போற்றிவளர்ப்பது நமது நீங்கலிலாக் கடனாகும். இப்படிச் செய்வதைவிட்டு விலைபெற்ற பொன்னாபரணங்களையும், ரத்னாபரணங்களையும் விளைந்தெரியாத சிறு குழந்தைகளுக்கு அணிவதனாலுண்டாகுந் தீமைகளை எடுத்துச்சொல்லப் புகிற்பெருகும். நாம் அழகுக்கென்று இடும் ஆபரணங்களால் குழந்தை உயிருக்கு அபாயம் வருகிறதென்றால் வேறென்னவேண்டும்! பொன்காய்த்த மரம்போல தலைமுதல் கால்மட்டும் வெவ்வேறான ஆபரணங்களைச் செய்து குழந்தைகளுக்கு அணிவதனால் வருங் கேட்டையெல்லாம் நேரே கண்டிருந்தும் நெடுங்கால வாடிக்கை பலத்தினால் இன்னும் இதை விட்டபாடில்லை. அரையிலே குழந்தையா யிருக்கும்போதே காலிலும் கையிலும் காப்புகளையும், விரல்களில் மோதிரங்களையும் இட ஆரம்பிக்கிறார்கள். அன்றைக் கூலிவேலைசெய்து பிழைப்பவர்களும் தங்கள் அருமைக் குழந்தைகளுக்கென்று நகைகளைச் செய்கிறார்களென்றால் மற்றவர்களுக்குக் கேட்பானேன்? ஆபரணங்கள் எவ்வளவுதான் விலைபெற்றனவா யிருப்பினும் ஊணையும், உடையையும்போல தேகத்துக்கு நன்மையைப் பயப்பனவல்லவே!

பெரியவர்களே தாம் பூண்ட நகைகளை மறதியினால் இழந்து விடுகிறார்களென்றால் மற்றச் சிறிய பாலகர்கள் இழப்பதற்குக் கேட்பானேன்? வஞ்சகர் சிறுவர்களை யேமாற்றி மோதிரங்களைக் கழற்றிமண்ணில் முளைக்கவைக்கச் சொல்லி அவர்கள் சற்றே அப்புறஞ்சென்றதும் களவாடிவிடுவார்கள். தாய் தந்தையர் குழந்தைகளுக்கு ஆபரணங்களைப் பூட்டி வெளியே கொண்டுவந்து அழகு பார்த்து ஆநந்தப் படும்போது திருடர்கள் அவற்றை எப்படிக் களவு செய்யலாமென்று ஆலோசித்துக் கொண்டிருப்பார்கள். "கோயிற்பூனை தெய்வத்துக் கஞ்சாது" என்ற வண்ணமாகப் பெரும்பான்மையாக வீட்டிலுள்ள வேலையாட்களே குழந்தைகள் நகைகளைத் திருடுவார்கள். நகை ஆட்கொல்லி யாதலால் சுற்றத்தார்களுள்ளுஞ் சிலர் ஒவ்வொரு சமயங்களில் வறுமையால் நெஞ்சுறுதிகொண்டு குழந்தைகளை வேடிக்கையாக வைத்துக்கொண்டிருப்பதுபோலிருந்து நகைகளைக் களவாடுவார்கள்; அறிமுகமானவர்கள் திருடுவதில், குழந்தைகள் நினைவு தெரிந்தவர்களாயிருப்பார்களேயானால் அவர்களுடைய உயிருக் கிறுதியுண்டாவதுமுண்டு. குழந்தைகளிடத்திலுள்ள அன்பின் மிகுதியினால் தங்கள் வருத்தத்தைப் பாராமல் அரைவயிற்றுக் குண்டாயினும் பொருள் சேர்த்து ஆபரணங்களைச் செய்கிறார்கள். இறுதியில் குழந்தைகளுக்கு ஆபரணங்களைத் தாய் தந்தையரிட்டுச் சந்தோஷப்படுவதினும் அவற்றை யிழந்துவிடுவதனாலும், அவற்றால் மக்களுக்குண்டாகும் அபாயத்தினாலும் விளையுந் தீமைக்களவிராது. இந்துக்களைத் தவிர்த்து வேறெந்தச் சாதியாரும் தங்கள் குழந்தைகளுக்கு அதிகமான ஆபரணங்களைப் பூட்டி வெளியேவிட்டு அழகுபார்க்கிறதில்லை. ஐரோப்பா முதலிய அயல் நாடுகளிலிருந்து எத்தனையோ பேர் நமது தேசத்திற்கு இக்காலத்தில் வந்திருக்கிறார்கள். அவர்களுள் நம்மவரைப்போலச் சிறு குழந்தைகளுக்குக் குலுங்கப் பணி பூட்டுவார்களில்லை. தேர் திருநாட் காலங்களில் தங்களுக்கு நகையில்லாவிட்டாலும் இரவல் உடைமைவாங்கி அலங்கரியாதிருப்பதில்லை. நகைகளை அதிகமாகப் பூட்டவேண்டுமென்கிற ஆசையினால் குழந்தைகளுக்கு இன்ன அவயவங்களில் பூட்டவேண்டுமென்கிற பேதமில்லாமல் காதுமூக்கெல்லாந் துளைத்துப் புண்ணாக்கிவிடுவார்கள். அவ்வாறு குத்துந் துளைகள் கோணாமல் ஒழுங்காயிருக்கவேண்டுமென்றெண்ணி விஷமுள்ள கூரியமுட்களால் குத்துகிற



தினால் முள்ளின் விஷம் இரத்தத்தோடு கலந்து ஆறாப்புண்களாகிறதுமுண்டு. குழந்தைகளின் அழகிய கால்களில் அவரவர்கள் சக்திக்குத் தக்கவண்ணம் வெள்ளி, செம்பு, பித்தளை, ஈயம், உருக்கு, இரும்பு முதலிய உலோகங்களால் காப்புகளையும் சங்கிலிகளையும் கனமாக அடித்துப்போடுகிறதினால் அவை கன்னங்கறேலென்று கன்றிக் கரத் தழும்பேறிக் கண்கொண்டு பார்க்கக்கூடாதபடி விகாரமாகின்றன. பத்துமாதஞ் சுமந்து பெற்றெடுத்த குழந்தைகளை நல்ல வஸ்திரங்களில் கண்வளரச் செய்து சுகமாக வைத்திருப்பதைவிட்டு உடம்பெல்லாம் உறுத்திக் கீறி வருத்தும்படி கரடுமுரடான ஆபரணங்களை யணிகிறதினால் சிறிதுஞ் சுகமேயடையாது. குழந்தைகளுக்கு நகைகளைப் பூட்டி வெளியே விட்டது முதல் அவர்கள் திரும்பி வீட்டுக்கு வருமளவும் அதுவே விசாரமாயிருக்கும். சில சமயங்களில், குழந்தைகளின்மேல் அணியப்பட்டிருக்கின்ற ஆபரணங்களினால் அவர்களுடைய கை, காது மூக்கு முதலிய அவயவங்களிலே குத்திப் புண்ணாவது முண்டு.

## ஓர் கிருபணன் மனையாள்

கங்காதரபுரத்தில் தனபாலனென்னும் வணிகன் சாரதை என்னும் பெண்ணணங்கை மணம்புரிந்தான். தனபாலன் பொருளையே பெரிதென்று பாராட்டிவந்தானாகையால் அவன் ஒருநாளிலாயினும் வயிறுநிறைய உண்டதில்லை. கற்புடைமை நல்லாளாகிய அவன்மனையாள் தன் நாயகனது குணத்தை நன்றாயறிந்துகொண்டு அவன்மனங் கோணாமல் நடந்துவந்தாள். தனபாலன் தனக்கேற்ற காதல்மனைவி வாய்த்ததைக்கண்டு அவளிடத்து மிக்க அன்புற்றிருந்தானென்றாலும் சிறுவனாகவிருந்தது முதற்கொண்டே அவன் சிற்றுண்டியை ஒருவருங் காணாதபடி தனியேயிருந் துண்ணுவது அவனதுவழக்கம். அவன் கன்னுவக்கியன். அதிர்ஷ்டவசத்தால் அவனுக்கு வர்த்தகம் கைகூடிவந்து பெருந் தனமுடையவனானான். அவனுக்கு தனஞ் சேரச்சேர அதனிடத்தில் அதிக ஆசையுண்டாகி கிருபண சிரோமணியானான். கலியாணத்தின்போது வாங்கின கூறையைத்தவிர்த்து மற்ற உடுபுடைவைகளிரண்டும் சீட்டிப் புடவைகள்தான். சாரதை தன்பந்துக்களில் யாரையேனும் பார்த்துவிட்டு வரும்படிபோகவேண்டுமானால் வெகுநாளைக்குமுன்

ளே வாங்கப்பட்ட அந்தக் கூறையைத் தவிர்த்து அவளுக்கு நல்ல ஆடைவேறில்லை. தனபாலனுக்கு மிக்க பொருளிருந்ததனால் அவனுக்குத் தன் மனையாளுக்கு வேண்டும் ஆடை ஆபரணங்களையெல்லாம் வாங்கிக் கொடுக்கவேண்டுமென்கிற ஆசைமட்டும் இருந்ததேயொழிய தன்கையிலிருந்து ஒருகாசளவாவது எடுக்க மனம் வரவில்லை. சாரதை ஏழைவீட்டுப் பெண்ணாதல்பற்றி உயர்ந்த ஆடை இல்லாததைப் பாராட்டாமலே நல்லகாலம்பிறக்குமென்று காலத்தைப்போக்கி வந்தாள்.

இவ்வாறே நெடுங்காலமிருந்தாளென்றாலும், அவள் புடவை சல்லடைக்கண்ணாய் உடுத்தக்கூடாத கந்தையாகி விட்டதைக் கண்டு பொறுக்கமாட்டாமல் ஒருநாள் தன் கணவன் சந்தோஷமாயிருக்கும் வேளையில், ஸ்வாமி! நான் இவ்வாறு கந்தையையுடுத்துவது உமது பெருமைக்கழகோ? உம்மிலும் ஆயிரமடங்கு தாழ்வானவர்கள் தங்கள் மனைவிமார்களுக்கு வேண்டும் ஆடையாபரணங்களையெல்லாம் அவர்கள் இஷ்டப்படி வாங்கியிருப்பதை நீர் அறியீரோ? நான் நமது பந்துக்கள்வீட்டிற்குப் போகும்போதாயினும் நல்லாடையணிந்துகொண்டு போகவேண்டாமோ? கலியாணத்தின்போது தாங்கள் வாங்கிக்கொடுத்த கூறையைத் தவிர்த்து இரண்டாவது நல்ல புடவையை இன்றாவது வாங்கிக்கொடுத்தலாகாதோவென்று சொல்லி விசனப்பட்டாள். அதற்கு தனபாலன், பெண்ணே! நான் சொல்லுவதைக்கேள்; எங்கள் வீட்டில் எனது அத்தை உன்னைப்போலவேதான் ஒரு கூறையைமட்டும் வைத்துக்கொண்டு நெடுங்காலம் போக்கினாள்; நல்லநாள்களில் உடுத்துவதற்கு ஒன்று போதாதா! பணத்தை வீணே புடவைவாங்கிப் பாழாக்குவதிலென்ன பயன்? கையில் பணமிருக்கும்போது கண்டபடியெல்லாம் பாழாக்கிறைத்துவிட்டுப் பின்பு சோற்றுக்கும் வழியில்லாமல் அற்றைக் கூலிவேலைசெய்வதோ அழகு? இப்பொழுது பணமகப்படுவது சற்றே வருத்தமாயிருக்கிறது? ஸங்கராந்திபண்டிகையன்று உன் இஷ்டப்படி நல்லபுடவை வாங்கிக்கொடுக்கிறேனென்றான். அதிக லோபத்தினால் அவன் வீட்டிற்குவேண்டிய பண்டங்களையும் வாங்க மனமில்லாதவனாகி அதிக செட்டாயிருந்ததனால் இருவரும் வயிரார உண்பதற்கும் வாய்க்கவில்லை. இவ்வாறிருந்ததைக் கண்டு சாரதை மனம்புழுங்கி அவனிடஞ் சென்று, ஸ்வாமி! என் பஞ்சைக்கோலத்தைக் கண்டு எல்லோரு



நிந்திக்கிறார்கள்; நான் இப்படியிருப்பது உமது பெருமைக் கழகாமோ? ஆயினும் இதுவிஷயத்தைப்பற்றி இனிமேலும் பன்னிப் பன்னி யுரைப்பதில் பயனில்லை; உமது இஷ்டப்படி செய்யலாம்; இன்றுகாலையில் நான் எனது சகோதரியைப் பார்த்துவிட்டு மத்தியானத்திற்குமேல் இங்கே வரும்படி எனக்குத் தாங்கள் விடைதரவேண்டுமென்று கண்ணீர் விட்டழுது சொல்லி அவன் அநுமதிப்படியே அவள் அங்கே சென்றாள்.

தனபாலன் தன் கடைக்குச்சென்று பகலெல்லாம் விரல்கள் நோவப் பணத்தையெண்ணி வைத்துவிட்டு அவனே நினைவாயிருந்தான்; அவளுக்குப் புடவை வாங்கிக்கொடாமலிருந்ததைப்பற்றி அவனுக்கே வெட்கமாயிற்று; எப்படியிருந்தாலும் அவளுக்கு நல்லசேலையை அன்றே வாங்கிக்கொண்டு போகவேண்டுமென்று நிர்மாணித்தான். அவன்நெஞ்சார அவளைவிட அவனுக்கு வேண்டியவர் யாருமில்லை. அன்று அந்திப்பொழுதுக்கு முன்னேயே வீட்டுக்குப் புறப்பட்டுப்போனான். அவன் போகும்போது, தந்திதபால் கம்பம்விழுந்து உருத்தெரியாதபடி நசுங்கிப்போன ஒருத்தியைப் புடவையால் மூடி நாலுபேர் தூக்கிக்கொண்டு போவதையும், அவள்பின்னோடு சிலவர்கள் கூச்சலிட்டுச் சொல்லுவதையும் பார்க்கையில் அந்தப்புடவை தன்மனையாளுடையதென்று காணவே அவன் மனம்பதைத்துருகி, அப்பா! இதென்ன கொடுமை! சற்றே நில்லுங்கள்; நான் பார்க்கவேண்டுமென்றான். கம்பம்விழுந்து நசுங்கியிருந்ததனால் உருத்தெரியவில்லை; அவள் மேலேமூடியிருந்தசேலை சாரதையின் சேலையென்றுகண்டு அவள்தான் இறந்தாளென்று நிச்சயித்தான். மீண்டும் அவன் அவள்காலிலிருந்த கிழிந்த பாதரக்ஷையைக்கண்டதன்பின் அவன் தன் மனைவியேயென்று நிச்சயித்துத் தேம்பித்தேம்பி அழுதான். அவளைக்கொண்டு போகும்போதே அவள் தனபாலனென்னும் பரமலோபியின் மனையாளென்றும், கம்பம் விழுந்து அவ்வாறு நசுங்கி மாண்டுபோனாளென்றுஞ் சொன்னார்கள். அவளை அவர்கள் அவன்வீட்டுக்குக் கொண்டுபோகையில் அவனுடைய கிருபணத்தனத்திற்காக அவனை வையாதாரில்லை. தனபாலன் அவளைத் தன்மனைவியென்று கட்டிக்கொண்டு புலம்பி யழுதுவிட்டு, அவள் செத்தபின்னாயினும் அவள் மனோரதத்தைநிறைவேற்றவேண்டுமென்று அழுதுகொண்டு தன் கந்தைத்துணியோடு ஜவுளிக்கடைக்கு ஓடி முதற்றரமான

விலைபெற்ற சித்தினாபூம்பட்டாடையொன்று வேண்டுமென்று கேட்டான். அங்குள்ளார் அதைக்கேட்டு அவனையாரோ பிச்சைக்காரன் கடைப்பிச்சைக்காக வந்திருக்கிறானென்று நினைத்துப் பரிகாசம் பண்ணினார்கள். அவர்கள் சொன்னவிலையை அவன் கை மேற்கொடுக்க அவர்கள் அவனை தனபாலனென்றறிந்து அத்தனை விலைபெற்ற ஆடையை அந்தப் பரமலோபி வாங்கினதைக்கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அவன் நேரே தன் வீட்டிற்குச்சென்று அந்தப்பட்டாடையை அந்தப் பிணத்தின்மேல் விரித்து, ஸாரதே! நான்கூப்பிடுவது உன்காதிலே படவில்லையோ? நான் உனது காதற் கொழுநனன்றோ? நான்பரமலோபனானதலால் இத்தனைகாலமாகப் புடவை வாங்காதிருந்தேன்; விலைபெற்ற இந்த ஆடையைப் பார்த்தாயோ! இப்பொழுதாயினும் இந்த ஆடையை நானே உனக்குடுத்துகிறேன்; இதைப் பெற்றுக்கொள்ளென்று அதை அப்பொழுது தான் அவள்மேலே விரித்துப் போர்த்தப்போனான். அவ்வேளையில் ஸாரதை வீட்டுக்குவந்து தன்கணவன் நிற்கின்ற நிலையைக்கண்டு, ஸ்வாமி! இதென்ன விசித்திரமென்று அவனண்டை யோடிவந்தாள். தனபாலன் அவளைக்கண்டு அஞ்சி இது கனவோ நினைவோவென்று ஐயுற்றான். ஸாரதை அவனைநோக்கி, பிராணநாதா! உம்மைப் பாவிநான் இவ்வாறு துன்பப்படும்படி செய்தேனே; நான் உடுத்திருந்த ஆடை ஆயிரங்கந்தலாயிருந்ததாதலால் வெறுப்புற்று அதையும், பழைய பாதரக்ஷையையும் ஓர் ஏழைக்குக் கொடுத்துவிட்டு இந்தச் சிட்டிப்புடவையை என் சகோதரியிடமிருந்து வாங்கி யுடுத்தினேன். அந்தப்பேதை இவ்வாறு வழியில் கம்பத்தின்கீழே அகப்பட்டு நசுங்கி இறந்திருக்கவேண்டும். இந்த ஆடையின் அடையாளத்தினாலே தான் நானும் இவ்வாறு சந்தேகிக்கிறேன். இவள் அப்பொழுதே நடக்கமாட்டாமல் தளர்ந்திருந்தாள். நான் இறந்துபோனேனென்றும், உம்மைப்போலக் கிருபணர் இல்லையென்றும் ஊரெல்லாஞ் சொல்லிக்கொண்டது என் காதிலும் விழுந்து துக்கப்பட்டேன். உமக்கு என்மீதுள்ள அன்பின் மிகுதியை இன்றுதான் கண்டேனென்றாள். அதற்கு அவன் என்கண்ணே! உன்னிலும் நல்லார் இப்புவியில் எனக்கொருவருமில்லையென்று துணி. இன்றோடு எனது உலோபகுணம் நீங்கிவிட்டது; இனிமேல் நீ சொன்னபடி செய்வேனென்றான்.



## வளர்ந்திருப்பதனா லுண்டாகுந் தீமை.

ஆறடிக்கு மேற்பட்டு வளர்ந்திருப்பதழகன்று; அப்படியிருப்பது பார்ப்பவர்களுக்கெல்லாம் வியப்பாயிருக்கும். சிறுகுழந்தையாக விருக்கும்போதும் கண்டவர் நகைக்க இடமாகும். வீட்டிலுள்ளவர்களுக்கு வஸ்திரம் வாங்கும்போது வளர்ந்தவனுக்கு அதிக அகலமும் நீளமுமான வஸ்திரங்களை வாங்கவேண்டும். உயரமாயிருப்பவனுக்குத் தனது உயரம் தனக்குத் தெரியாதிருப்பினும் பிறர் பார்க்கையில் விகாரமாகவிருக்குமாகையால் அவன் நிற்பதற்கு வெட்கப்படுவான். ஒருவன் நெட்டையாகவிருந்து கையும் காலும் குச்சிபோலிருந்தால் நன்றாயிராது. வேடிக்கை பார்க்கும்படி கும்பலுள்ள விடங்களுக்குச் சென்றால் எல்லோருக்கும் மறைக்குமாதலால் உட்காரும்படி வருத்துவார்கள். பனைமரம்போல வளர்ந்திருந்தால் சிலவேளைகளில் பரிகாசத்திற்காக, ஐயா! நீர் நின்றாலும் எங்களுக்கு மறைவாயிருக்கும்; படுத்துக் கொண்டால்தான் மறைக்கமாட்டீரென்று இகழ்ச்சி பண்ணும்படிக்குமாகும். அதிக உயரமாகவிருப்பவன் சுவரோரமாக நின்றால், சுவரின் மறுபக்கத்திலுள்ளவர்கள், யாரோ தலைப்பாகையைச் சுவரில் வைத்திருக்கிறானென்றெண்ணி அதைக் கோலாலெடுக்கப் பார்ப்பார்கள். குட்டையனும் நெட்டையனுமாக ஒருகுடையைப் பிடித்துப் போகும்போது இருவருக்கும் வருத்தமாயிருக்கும். வண்டியில் உட்காருகையில் காலை நீட்டவும் மடக்கவுங்கூடாமல் அதிக சங்கடமாயிருக்கும். புகைவண்டி ஏறிச்செல்லும்போது அவன் காலைத் தாண்டிச் செல்லவேண்டியிருக்குமாதலால் எல்லோருக்கும் அவனால் வருத்தமுண்டாகும். இவ்வாறு வருத்தமாயிருப்பதனால் எல்லோரும் நிந்திக்கவிடமாகும். உயரமாயிருப்பவன் குட்டையானவளைக் கலியாணஞ்செய்திருந்தால் பரிகாசத்திற்கிடமாகும். நன்றாக அமிழ்ந்து ஸ்நானஞ்செய்ய வேண்டுமானால் வெகுதூரத்தில் ஆழமானவிடந்தேடிச் செல்லவேண்டும். எங்கேசென்றாலும் தலையிலே இடிக்கும். உயரத்துக்குத் தக்கபடி அதிக அகலமும் நீளமுமான வஸ்திரங்களை அதிக விலைகொடுத்துவாங்கி யுடுத்தவேண்டும். குள்ளமானவர்களோடும் குழந்தைகளோடும் ஏகாந்தமாக வார்த்தைசொல்லவேண்டுமானால் குனிந்துகொண்டு பேசவேண்டும்.

## தழையை எருவிடல்.

பச்சைப் பூண்டுகளையும் செடிகளையும் சார்வற்றாமல் பச்சை யாயிருக்கும்போதே நிலத்திலே சேர்த்து உழுதுவிட்டால் அவை சிறந்த எருவாகும். எப்படியெனில், பச்சைப்பூண்டுகள் பெரும் பான்மையாய்த் தங்களுக்கு வேண்டுவனவாகிய கரிவாயு, பிராண வாயு, உப்புவாயு, ஜலவாயு என்னும் வாயுக்களை வெளியேயிருந்து இழுத்துக்கொள்ளுகின்றன. ஆனதினாலேதான் அவற்றை நிலத் திற்கு எருவாகவைத்தால் அந்தநிலத்துக்கு முன்னிருந்ததைவிட மேற்சொன்ன பிருதிவிப் பொருள்கள் அதிகமாகி நிலத்துக்கு நல்ல உரமுண்டாகிறது. செழிப்பில்லா நிலங்களில் சர்குபடியா கும் மேலுங் கீழுமுள்ள உலோகங்கள் பயிருக்கு வேண்டுவன வேறிச் சேர்ந்து பயிரைவளர்க்க முயலாரும். இவ்வாறான நிலங் களுக்கு முன்சொன்னபடி பச்சைப் பூண்டுகளையிட்டு உழுதலில் அதிகமான குணமுண்டு. ஏனெனில், உழுத பச்சைப்பூண்டுகளில் மேற்சொன்ன தாதுக்கள் அடங்கியிருப்பது புதிதாகவைக்கப்படும் பயிருக்கு நல்ல உணவாகி அதை வளர்க்கிறது.

## தேனிமுதலிய பூச்சிகள் கொட்டினால் அதற்கு மருந்து.

தேனிமுதலிய பூச்சிகள்கொட்டி வீங்கி வருத்தமுண்டானால் மழைபெய்து சலம் வெகுநாளாகக் கட்டி நிற்குங் கலகல் நிலத்தி லுள்ள சேற்றைக் குழைத்தெடுத்துக் கால்மணி அல்லது அரை மணிநேரமளவும் பூசவேண்டும். பூசினசேறு காய்ந்தவுடனே திரு ம்பவும் பூசுக. வீக்கமும் நோயுந் தணிந்துவருகையில் பின்னும் கால்மணிநேரமாவது [illegible]மணிநேரமாவது பூசிக்கொண்டுவந் தால் சுகமுண்டாகும். இ[illegible]து.

21627
160949
JL
R4 m211, M91
M91:1